# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 29 சனிக்கிழமை (12.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 198


இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு

# சிறுபான்மையினர் கட்சிகளுடன் இந்திய அரசு தனித் தனிப் பேச்சு

## முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பாம்

புதுடில்லி,ஜூன் 12

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு உதவும் பொருட்டு, இந்திய மத்திய அரசு அங்குள்ள சிறுபான்மை இன மக்களின் கட்சிகளுடன் தனித் தனியே பேச்சுவார்த்தை நடத்துவதில் ஆர்வம்கொண்டுள்ளது என இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த வகையில், முதலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கே இந்தியா அழைப்பு விடுக்க உள்ளது. தனக்கு நம்பத்தகுந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஆங்கில இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் உள்ள சிறுபான்மை அரசியல் கட்சிகளை இங்கு நேரில் அழைத்து வந்து ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து இந்தியா பேசவுள்ளது என்றும் -

முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுக்கப்படும் என்றும்- அரசியல் வட்டாரங்கள் இங்கு எதிர்வு கூறியுள்ளன. (24ஆம் பக்கம் பார்க்க)

## அகதிமுகாம் மாணவர்களுக்கு இன்னும் பரீட்சை முடிவு இல்லை

கொழும்பு,ஜூன் 12

வட பகுதி அகதி முகாம்களிலிருந்து ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களது பெறுபேறுகளைப் பரீட்சைத் திணைக்களம் இதுவரை வெளியிடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய பகுதிகளிலுள்ள அகதிமுகாம்களிலிருந்து சுமார் 200 மாணவ மாணவிகள் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## வடக்கு, கிழக்கு இணைப்பு உடனடியாகச் சாத்தியமில்லை என்பதனை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளதாக டக்ளஸ் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஜூன்12

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்தியா வலியுறுத்தியுள்ளது. ஆனால் வடக்கு, கிழக்கு இணைப்பு உடனடியாகச் சாத்தியமில்லை என்பதையும் இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது.

இவ்வாறு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் அங்கிருந்து திரும்பிய பின்னர், தொலைபேசியூடாக யாழ்ப்பாணத்திலுள்ள ஈ.பி.டி.பி.யின் தலைமை அலுவலகத்தில் நேற்று மாலை செய்தியாளர்களுடன் உரையாடிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதியுடன் இணைந்து மேற்கொண்ட இந்தியப் பயணமானது பெரும் வெற்றியை அளித்துள்ளது. புதிய நம்பிக்கைகளைக் கட்டியெழுப்பியுள்ளது.

(21ஆம் பக்கம் பார்க்க)

## மாணவன் தாக்கியதில் சக மாணவன் பலி!

கொழும்பு,ஜூன் 12

புத்தளம் ஆனைமடுவப் பகுதியில் 16 வயதுடைய மாணவன் ஒருவன் சக மாணவரால் தாக்கப்பட்டு பரிதாபமாக உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர் ஒருவர் குறித்த மாணவரின் கழுத்தை நெரித்தும் தலையைப் பிடித்து குழாய் கிணற்றில் தாக்கியதாலும் காயமடைந்த மாணவன் உடனடியாக ஆனைமடுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் (24ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களான சிலர் இன்னமும் ஆயுதங்களை வைத்திருக்கின்றனர்

### நாடாளுமன்றில் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு,ஜூன் 12

30வருட பயங்கர வாதத்திலிருந்து விலகி ஜனநாயகத்துக்குள் நுழைந்து அமைச்சர்களான சிலர் இன்றும் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருக்கின்றனர் என்று ரவி கருணா நாயக்க எம்.பி.நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

சட்டவிரோத ஆயுதங்களைக் களைவது தொடர்பான தனிநபர் பிரேரணை ஒன்றை நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் அதிக எண்ணிக்கையில் சட்டவிரோத ஆயுதங்கள் உள்ளன. பிரதேச சபை உறுப்பினர்கள் கூட இப்படியான ஆயுதங்களை வைத்திருக்கின்றனர். ஜன நாயகத்துக்கு அச்சுறுத்தலாக அமையும் இவ்வகையான ஆயுதங்கள் அனைத்தையும் களைவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சட்டவிரோத ஆயுதங்கள் அனைத்தும் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட வேண்டும். அவர்களுக்கு உரிமம் தேவைப்பட்டால் உரிமம் வழங்க முடியும்.

30 வருட பயங்கரவாதத்தில் இருந்து விலகி ஜனநாயகத்துக்குள் நுழைந்து அமைச்சர்களாகியவர்களும் ஆயுதங்களை வைத்துள்ளனர். இதனால் பிரச்சினை வருகின்றது. இந்த நிலைமை தொடர்ந்தால் இன்னும் 10,15 வருடங்களில் நிலைமை மோசமாகும்.

அரசியல் கட்சிகளோ, அரசியல்வாதிகளோ ஆயுதங்களை வைத்திருக்கத் தேவையில்லை. கிழக்கில் அரசியல் கட்சிகள் ஆயுதங்கள் வைத்துள்ளன என்று அமைச்சர் கருணாவே (24ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியின் துரித புனரமைப்புத் திட்டம் நாமல் எம்.பியின் நேரடிக் கண்காணிப்பில்

### கிளிநொச்சி ம.வி. கட்டடத் திறப்பு நிகழ்வில் கல்வி அமைச்சர் தகவல்

- உதயன் கிளிநொச்சி செய்தியாளர் -

கிளிநொச்சி,ஜூன் 12

யுத்தத்தினால் அழிவடைந்த வன்னிப் பிரதேசத்தை அடுத்த ஆறுமாத காலத்தில் மீளக் கட்டியெழுப்ப துரித புனரமைப்புத் திட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் நேரடிக் கண்காணிப்பில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்தத் திட்டத்தின் கீழ் இந்தப் பாடசாலை புனரமைக்கப்பட்டு மாணர்வர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் சேதமடைந்த இரு மாடிக் கட்டடம் புனரமைக்கப்பட்ட பின்னர் நேற்றுத் திறந்துவைத்துப் பேசுகையில் இப்படிக் கூறினார்.

நேற்றுக்காலை ஹெலிக்கொப்டர் மூலம் (21ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவை கொன்றுவிட்டு நானும் செத்துமடியத் தயார்!

### மேர்வின் சில்வா ஆர்ப்பாட்டத்தில் ஆவேசம்

கொழும்பு,ஜூன் 12

யுத்தத்தை வெற்றிகொள்ளக் காரணமாக இருந்தவர்களையும் இராணுவத்தினரையும் சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லும் நடவடிக்கையில் ஜெனரல் சரத் பொன்சேகா ஈடுபட்டால் அவரைக் கொலை செய்துவிட்டு நானும் செத்துமடியத் தயார்.

- இப்படிக் கூறினார் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா.

கிரிபத்கொட (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை - இந்திய ஒப்பந்தங்கள் தமிழீழத்தை எரிக்கும் தீப்பந்தங்கள்

### வைகோ கூறுகிறார்

சென்னை,ஜூன்12

''தமிழினத்தையே அழிக்க முற்படும் இலங்கை அரசுடன், இந்திய அரசு செய்து கொண்டிருப்பது ஒப்பந்தங்கள் அல்ல, தமிழ் ஈழத்தை எரிக்க முற்படும் தீப்பந்தங்களே.''

- இவ்வாறு ம.தி.மு.க. செயலர் வைகோ கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் போரை நடத்தியது இந்திய அரசுதான் என்பதால், அதைக் கொண்டாடுவதற்காகவே (24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையினக் கட்சிகளை அழைத்து இந்தியா பேசுவது ஏன்?

## மீண்டும் குழப்பம் ஏற்படுத்தவா என்கிறார் ரவி எம்.பி.

கொழும்பு, ஜூன் 12

பிரபல கட்சியைத் தவிர்த்துவிட்டு சிறுபான்மை இனக் கட்சியை மாத்திரம் அழைத்துப் பேசுவதற்கு இந்தியா முயற்சிக்கின்றது. இந்த நாட்டில் மீண்டும் ஒரு பிரச்சினை ஏற்படுவதற்கு இது வழிவகுக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்று நாடாளுமன்றில் கூறியது.

முன்பும் இவ்வாறுதான் சிறுபான்மை இனக் கட்சிகளை இந்தியா அழைத்துப் பேசி ஆயுதங்களைக் கொடுத்து இந்த நாட்டில் பிரச்சினையை ஏற்படுத்தியது என்றும், மீண்டும் அவ்வாறான நிலைமை தான் ஏற்படும் என்றும் அக்கட்சி மேலும் கூறியது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற சட்டவிரோத ஆயுதங்களைக்களைதல் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.க. எம்.பி. ரவி கருணாநாயக்கவே இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சிறுபான்மை இனக் கட்சிகளை அழைத்துப் பேசுவதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளது என்று சிங்கள பத்திரிகையில் செய்திகள் வெளியாகி உள்ளன. இந்தியா ஏன் சிறுபான்மை இனக் கட்சிகளை மாத்திரம் அழைத்துப் பேசவேண்டும்? நாம் சிறுபான்மை இன மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லையா?

கொழும்பில் நான் அதிக எண்ணிக்கையிலான முஸ்லிம் மக்களையும், தமிழ் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறேன். இந்த நிலையில் ஏன் சிறுபான்மை இனக்கட்சிகளை மாத்திரம் அழைத்துப் பேசவேண்டும்?

இந்தநாடு அபிவிருத்தியடைந்து கொண்டிருந்தபோது முன்பும் சிறுபான்மை இனக் கட்சிகளை அழைத்துப் பேசி அக்கட்சிகளுக்கு ஆயுதங்களை வழங்கி இந்த நாட்டில் பிரச்சினையை உருவாக்கியது இந்தியாதான். அதை நாம் மறந்துவிடவில்லை.

மீண்டும் சிறுபான்மை இனக் கட்சியை சந்திப்பதால் பழைய பிரச்சினை வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அனைத்துக் கட்சிகளையும் அழைத்துப் பேசுவதுதான் சரியானது. நாமும் சிறுபான்மை இன மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. - என்றார். (ஒ-சி)

# ஜனவசம நிர்வாகத்துக்கு எதிரான போராட்டம் முடிவு

வத்துகாமம், ஜூன் 12

கண்டி - ஹந்தான பெருந்தோட்டத் தொழிலாளர்கள் 'ஜனவசம' நிர்வாகத்துக்கு எதிராக மேற்கொண்டிருந்த போராட்டம் வெற்றி அளித்துள்ளது.

பல வருடங்களாக மத்திய வங்கிக்கு செலுத்தப்படாதிருந்த தொழிலாளர்களின் சகல கொடுப்பனவுகளும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கணக்குகளில் வைப்புச் செய்யப்படும் என 'ஜனவசம' தலைவர் தல்வத்த உறுதியளித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கண்டி 'ஹவன் ஹல' மண்டபத்தில் தோட்ட நிர்வாகத்துக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே பேச்சு இடம்பெற்றது.

இதில் மத்திய மாகாண சபை அங்கத்தவர் எஸ்.இராஜரட்ணம், ஹந்தான டிவிஷன் சார்பாக பம்பாதெனிய, பொலிஸ் அதிகாரி கீர்த்தி பண்டார ஆகியோரும் தொழிலாளர் சார்பாக 16 பேரும் கலந்துகொண்டனர்.

இதில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் பின்வருமாறு:-

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஹந்தான பெருந்தோட்ட நிர்வர்கத்துக்குக் கீழ் இயங்கும் 'ஜனவசம' அதிகாரத்துக்கு உட்பட்ட 16 தோட்டங்களையும் சேர்ந்த தொழிலாளர்களது சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, ஓய்வூதிய ஊக்குவிப்புக் கொடுப்பனவு முதலான சகல கொடுப்பனவுகளையும் மத்திய வங்கியில் உரிய கணக்குகளில் வைப்பிலிடப்படும் என 'ஜனவசம' தலைவர் தல்வத்த எழுத்து மூலம் உறுதியளித்துள்ளார்.

இறந்தவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்களின் கொடுப்பனவுகளை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் வழங்குவது -சேமலாப நிதியில் நிலுவையாக உள்ள ஏழு லட்சம் ரூபாவை உடனடியாக வைப்பில் இடுதல் - ஆகிய விடயங்கள் இணக்கத்துக்கு வந்துள்ளன.

இவை தவிர, இன்னும் 22 கோரிக்கைகள் தொடர்பாக அடுத்த வாரம் பேச்சில் ஈடுபடுதல் என்றும் முடிவாகியது.

இந்த 22 கோரிக்கைகளில் தொழிலாளர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்குதல், தோட்டத்தைத் துப்புரவு செய்தல் போன்ற பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேற்படி விடயம் தொடர்பாக கடந்த 3 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை ஐந்து தொழிலாளர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்ததுடன், ஏனைய தொழிலாளர்கள் சுழற்சி முறையில் உண்ணாவிரதம் இருந்து ஒத்துழைப்பு வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

விசேடமாக பெண் தொழிலாளர்கள் பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தனர். (ஒ-சி)

# ஜி.எஸ்.பி. வரிச்சலுகை இலங்கைக்குக் கிடைக்குமா?

## ஓகஸ்ட் மாதம் தெரியவரும்

கொழும்பு, ஜூன் 12

இலங்கைக்கு 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகையை வழங்குவதா, இல்லையா என்பது குறித்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தீர்மானிக்கப்படும்.

அடுத்த வருடம் 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச் சலுகையைப் பெறுவதற்குப் புதிதாக விண்ணப்பிக்கும்படி ஐரோப்பிய தூதரகம் இலங்கையைக் கேட்டுள்ளது.

தயாரித்த ஆடைகள், பீங்கான் உற்பத்திகள், தேயிலை, தோற்பொருள்கள் உட்பட 7 ஆயிரம் இலங்கை உற்பத்திகளுக்கு 'ஜி.எஸ்.பி. வரிச்சலுகை வழங்கப்படுகிறது.

ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை இலங்கை இழப்பதால் பெரும் பொருளாதாரத் தாக்கம் ஏற்படாது என இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். (ஒ-சி)

# கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் நியமனத்தில் முஸ்லிம் காங்கிரஸ்-ஐ.தே.க. முறுகல்

## பஷீர் சேகுதாவூத் இடத்துக்கு தயா கமகே


மட்டக்களப்பு, ஜூன் 12

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எதிர்ப்பையும் மீறி ஐக்கிய தேசியக் கட்சி கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவராக தயா கமகேயை நியமித்துள்ளது. இதனால் இரு கட்சிகளுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டதை அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது.

கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.கட்சியுடன் இணைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யானைச் சின்னத்தில் போட்டியிட்டது.

இக் கூட்டணியில் போட்டியிட்ட 14 பேர் வெற்றி பெற்றனர். இவர்களில் 9பேர் முஸ்லிம்களாவர். 5 பேர் மாத்திரம் சிங்களவர்கள். இந்த நிலையில் முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சு நடத்தாமல் ஐ.தே.கட்சி தன்னிச்சையாகக் கிழக்கு மாகாண சபைக்கு எதிர்க்கட்சித் தலைவரை நியமித்திருப்பது முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.



பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியாவுக்கு ரஷ்யாவின் சென்பீற்றர்ஸ்பேர்க் பல்கலைக் கழகம் அண்மையில் கலாநிதிப் பட்டம் வழங்கியது. இதனையொட்டி பொலிஸ் திணைக்களத்தில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படம்.

''கிழக்கு மாகாணம் தமிழ், முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணம். முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிட்டதனாலேயே ஐக்கிய தேசியக் கட்சி இம்மாகாணத்தில் இவ்வளவு ஆசனங்களைப் பெறக்கூடியதாக இருந்தது. கிழக்கு மாகாணத்தில் தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உதயமானது. இந்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த அடாவடித்தனமான போக்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் வன்மையாகக் கண்டிக்கின்றனர்'' - என கிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரி விக்கின்றனர்.

கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஹஸன் அலி எம்.பியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் குறித்து ஐ.தே.கட்சி முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சு நடத்தவில்லை என்பதை உறுதி செய்தார். (ஒ-சி)

# சிரச ஊடகவியலாளர் பிணையில் விடுவிப்பு

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரும், சிரச ஊடக வலையமைப்பின் செய்திப் பிரிவுப் பணிப்பாளருமான ஊடகவியலாளர் சுசில் கிதெல்பிட்டிய நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவரது வாகனத்தில் ஆயுதங்கள் இருந்தன என்றும், தன்னை அவர் அச்சுறுத்தினார் என்றும் பெண் ஒருவர் நாடாளுமன்றத் தேர்தல் சமயம் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து சுசில் கிதெல்பிட்டிய கைதாகி இருந்தார். (ஒ-சி)

4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கோவிந்தபிள்ளை பரராஜசிங்கம்

(திதி: அமாவாசை)



பிறப்பு 09.05.1947 இறப்பு 26.05.2006

அன்புடன் எம்மை ஆதரித்து
அரவணைத்து வாழவழி வகுத்த
எமது அன்புத் தெய்வம்
மறைந்து
ஆண்டுகள் நான்கு சென்றாலும்
அப்பாவின் எண்ணங்கள்
என்றும்
எம்மனதில் பசுமையாகவே
இருக்கின்றன.

குடாரப்பு,
நாகர்கோயில்.

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி: இராசம்மா,
பிள்ளைகள்: பிரார்த்தனன், பிரதீபன், பகீரதன், சாரங்கன், உமாகரன்.

# தேர்த்திருவிழாவில் சங்கிலி அறுக்க முயன்ற பெண் பக்தர்களால் பிடிக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஜூன் 12

தேர்த்திருவிழாவில் சனநெரிசலைச் சாதகமாகப் பயன்படுத்தி வயோதிபப் பெண் ஒருவரின் சங்கிலியை அபகரிக்க முயன்றவரைக் கையும்மெய்யுமாகப் பிடித்தனர் பக்தர்கள்.

இச்சம்பம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

வில்லூன்றி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றபோது பக்தர்கள் கூட்டத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி நகைகளை அபகரிக்க முற்பட்டதாகக் கூறப்படும் பெண்ஒருவர் பக்தர்களால் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு ஆலய நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டார்.

பின்னர் அப்பெண் விசாரணைக்காக யாழ்.பொலிஸில் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தேர்த்திருவிழாவில் ஏற்கனவே ஒருவரின் சங்கிலி களவாடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

(1-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மனம் உண்டானால் இடமுண்டு...!

வன்னிப் போரின்பின்னர், முட்கம்பி வேலி முகாம்களில் தங்கியிருந்து, பின்னர் இடைத் தங்கல் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வசித்து பல்வேறு கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்த பின்னர் - .

தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கான வைத்தியசேவை பூச்சிய நிலையில் இருக்கும் தகவல் நாடாளுமன்றத்தில் ஒலித்திருக்கிறது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களுக்குரிய வைத்தியசேவை நில மட்டத்தில் இருப்பதாகத் தமது உரையில் விவரித்திருக்கிறார்; சுட்டிக் காட்டியிருக்கிறார் .

சுகதேகி ஒருவர், வழமையைவிட சற்றுத் தூர இடம் பயணம் செய்வதானால், தனது சட்டப்பைக்குள் 'பனடோல்' குளிகைகளை வைத்துக் கொண்டுசெல்வதுண்டு. பயணத்தின் போது தலையிடி வந்தால், திடீரெனக் காய்ச்சல் பிடித்துக் கொண்டால் இரண்டு வில்லைகளை விழுங்கிக் விட்டால் அவை நீங்கிவிடும் என்பதால் 'பனடோல்' மருந்தை எடுத்துச் செல்வோர் மிகப் பலர்.

சர்வரோக நிவாரணி, எல்லோரும் பயன்படுத்துவது, குறைந்த விலையில் கிடைப்பது என்று பெயர் எடுத்துள்ள , மக்களிடையே பிரபல்யமான 'பனடோல்' தானும், மீளக் குடியமர்ந்தவர்களுக்குக் கிடைப்பதில்லை. அந்த அளவுக்குச் சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் வைத்திய சேவை எதுவும் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

உணவு, தண்ணீர், உறைவிடம் ஆகியவற்றுக்கு அடுத்து மனிதனுக்குத் தேவைப்படுவது வைத்தியசேவை. வன்னிப் பகுதி காடார்ந்த பிரதேசம். சுகாதாரசேவை இல்லாதவிடத்து ஏற்கனவே மன உளைச்சல் மற்றும் துன்ப துயரங்கள், இழப்புகளினால் பாதிப்புற்ற மக்கள் விரைவில், இலகுவில் நோய்த்தாக்கங்களுக்கு ஆளாவதும் -

மலேரியா மற்றும் ஆபத்தான நோய்களால் இலகுவாகப் பீடிக்கப்படுவதும் சர்வசாதாரணம்.

இத்தகையதொரு பிரதேசத்தில் - பகுதிகளில் - உணவு மற்றும் உறைவிடத் தேவைகளுக்கு அடுத்ததாக முன்னுரிமை வழங்கப்பட வேண்டியது வைத்தியசேவைக்கே. உயிர்காக்கும் வைத்திய சேவை இன்றி , அதற்கான ஏற்பாடுகள் இன்றி, மக்களை மீளக் குடியமர்த்தியது வன்னி மக்களை மறைமுகமாக, கொல்வதற்கான சூழ்ச்சி என்றும் கொள்ளக்கூடியது.

வன்னிப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் வைத்திய சேவைக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குரல் எழுப்பியிருக்காவிடில், இந்த விடயம் அம்பலத்துக்கு வந்திருக்காது. மக்கள் மீளக் குடியமர்ந்த பகுதிகளில் வைத்தியர்கள் தங்கியிருந்து பணியாற்ற விரும்பினாலும், அதற்கான வசதிகள் எதுவும் செய்யப்பட்டதாக இல்லை என்றும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இந்த விடயத்தில் அரசு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்; தாமதியாது காரியத்தில் இறங்க வேண்டும். இடம்பெயர்ந்த மக்களை நாம் துரித கதியில் மீளக் குடியமர்த்தி வருகின்றோம் என்று உலக நாடுகளுக்குக் காட்டுவதற்காக , அதன்பால் பண உதவி பெறுவதற்காக, மீளக் குடியமர்வு ஆரம்பிக்கப்பட்டதாக இருக்கக் கூடாது.

வன்னி மக்கள் வளத்தோடும், நலத்தோடும், தமக்குரிய பலத்தோடும் வாழ்ந்தவர்கள். இந்த நாட்டின் பிரஜைகள். அவர்களை மனிதாபிமானத்தோடு, அவர்களுக்குத் தேவையான வாழ்வாதார வசதிகளை உருவாக்கிக் கொண்டே மீளக்குடியமர்த்த வேண்டும். அந்தக் கைங்கரியத்தில் போலித்தனம் ஆகாது.

ஷெல்வீச்சுக்களாலும், குண்டுவீச்சுக்களாலும் வன்னிமக்கள் கொல்லப்பட்டது பழைய கதை; வரலாற்றிலும் அழிக்க முடியாத கதை. அதன் பின்னர் மீளக் குடியமர்வு என்ற பெயரில், உரிய கட்டுமானங்கள், வசதிகள் இன்றி மக்களை குடியமர்த்தி அவர்களை மறைமுகமாக சேர்ந்திருந்து கொல்லும் வியாதியாக சாகடிக்க அரசாங்கம் திட்டமிடுகிறதோ என்ற சந்தேகத்தை உருவாக்குவதை அரசு தவிர்த்துக் கொள்ள வேண்டும். எந்தச் செயற்பாட்டுக்கும் மனம் உண்டானால் இடமுண்டு என்பது வாழ்வியல் உண்மை.

# வடக்கில் தெங்கு, இறப்பர், கரும்பு பயிரிடுவதற்கான சாத்தியப்பாடு குறித்து யாழ்.செயலகத்தில் கலந்துரையாடல்

## பெருந்தோட்ட அமைச்சரும் கலந்துகொண்டார்

யாழ்ப்பாணம்,ஜூன் 12

வடமாகாணத்தில் தென்னை, இறப்பர், கரும்பு ஆகிய பெருந்தோட்டப் பயிர்களைப் பயிரிடுவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அரச அதிபர் கே. கணேஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பெருந்தோட்ட அமைச்சர் மகிந்த சமரசிங்க, பிரதி அமைச்சர் சாலிய திஸநாயக்க, வடமாகாணத்திலுள்ள அரச செயலக உயர அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில், முல்லைத்தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமார், கிளிநொச்சி செயலகக் கணக்காளர் எஸ். ஜெயராஜா, வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் என். திருஞானசம்பந்தர், வடமாகாண தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். அன்ரனிஸ் மற்றும் யாழ். மாவட்ட பிரதேச செயலர்கள், துறைசார் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடமாகாணத்தில் ஒரு லட்சம் ஏக்கர் நிலத்தில் தெங்கு செய்கைத் திட்டத்தை ஆரம்பிப்பது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. அத்துடன் வடமாகாணத்தில் தெங்குப் பயிர்ச் செய்கையை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

வடபகுதியில் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்குத் தலா 3 தென்னங்கன்றுகள் வீதம் வழங்குவது குறித்தும், அதன் பின்னர் ஐந்தாக உயர்த்துவது குறித்தும் பேசப்பட்டது.

தேசிய வருமானத்தில் தெங்கு உற்பத்தி மூலமும் கணிசமான வருமானத்தைப் பெறுவதற்கு ஏற்ற வழிவகைகள் குறித்தும் இதில் கருத்துரைக்கப்பட்டது.

இவை மட்டுமன்றி, வடபகுதியில் தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளில் இறப்பர், கரும்பு ஆகிய பெருந்தோட்டப் பயிர்களைப் பயிரிடுவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா வடக்கு ஆகிய பகுதிகளில் இறப்பர், செய்கைக்கான சாதகமான காலநிலை, மண்வளம் என்பன காணப்படுவதாகவும், கூறப்பட்டு அந்த விடயம் குறித்து ஆராயப்பட்டது. இதன் பரீட்சார்த்த முயற்சியாக முதல் ஆறுமாத காலத்துக்கு அதனைச் சிறியளவில் பயிரிட்டு அதற்கான சாத்தியப்பாடு குறித்து அறிந்துகொள்வது தொடர்பாகவும் இதில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று கரும்புச் செய்கைக்கான இடங்களாக முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களின் சில பகுதிகள் தெரிவுசெய்யப்பட்டன.

முல்லைத்தீவுப் பகுதியில் பனை நடுகைத் திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் தேசிய வருமானத்தில் பனையின் பங்களிப்பும் இருக்கும் என முல்லைத்தீவு அரச அதிபர் கருத்துத் தெரிவித்தார்.

அத்துடன் வடபகுதியின் தெங்கு உற்பத்தியில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்தும் பெருந்தோட்ட அமைச்சர் கேட்டறிந்தார்.

இந்தக் கலந்துரையாடலின் இறுதியில் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் தெங்கு உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. வடமாகாண தெங்கு அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர், பெருந்தோட்ட அமைச்சர், இராணுவ அதிகாரி பிரிகேடியர் றொட்றிக்கோ, வவ்வுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் அரச அதிபர்கள் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்ட 200 பயனாளிகளுக்கு இந்த மானிய உதவுதொகையை வழங்கினார்கள். (50-14)

# இலங்கைத் தமிழர் பிரச்சினையை நினைவுபடுத்தும் அஞ்சல் முத்திரை

## அமெரிக்கத் தமிழர் அமைப்பு வெளியிடும்

நியூயோர்க்,ஜூன் 12

அமெரிக்க நாட்டுக்குள் கடிதங்களில் பயன்படுத்துவதற்கான அஞ்சல் முத்திரையொன்றை அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் ''ஒபாமாவுக்கான தமிழர்'' என்ற அமைப்பு வெளியிடவிருக்கின்றது. அமெரிக்க டொலர் 0.44 பெறுமதியான இம்முத்திரை கார்த்திகைப் பூவை அடையாளமாகக் கொண்டிருக்கும் என்று தெரிகின்றது.

அமெரிக்க பிரஜைகள் எவரும் தாமே வடிவமைத்து முத்திரைகளை வெளியிட்டுக் கொள்வதற்கு அனுமதியளிக்க அமெரிக்க அஞ்சல் சேவையினர் அண்மையில் தீர்மானம் எடுத்துள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்தோம்.

இதன்மூலம் இலங்கையில் உயிர்களையும், உடைமைகளையும் இழந்துள்ள தமிழ் மக்களுக்கு எமது மரியாதையைத் தெரிவிக்க விரும்புகின்றோம் என்று மேற்படி அமைப்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒரு சோக நிகழ்வை நினைவு கூர்வதற்கு ஒரு நிறுவனம் முத்திரையொன்றை வெளியிடுவது இதுவே முதல் தடவையாகும். இலங்கையின் வடக்கு - கிழக்கில் பெரும் எடுப்பில் தமிழர்கள் கொல்லப்பட்டமையை இதுகுறிக்கும் என்று அப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்காவின் சாதாரண மக்கள் மத்தியில் இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டம் பற்றிய தகவல் சென்றடையச் செய்வதே தங்கள் நோக்கம் என்றும் அவர் கூறினார்.

இந்த முத்திரையை வெளியிடுவதற்கு முன்னர் அமெரிக்க அஞ்சல் சேவையின் அங்கீகாரத்தை அவர்கள் பெற்றாக வேண்டும். (ப)

# கண்டாவளை, கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுகளில் மீள்குடியமர்வுக்கான பதிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்12

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தற்காலிகமாக வெளிமாவட்டங்களில் வசித்துவரும் கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சகல கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கான மீள்குடியமர்வுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

தற்காலிகமாக வெளிமாவட்டங்களில் வசித்துவருவோர் தற்காலிக பதிவுகளை உரிய பிரதேச செயலகங்களில் நீக்கம் செய்து, எதிர்வரும் 21ஆம், 22ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை தருமபுரம் மகாவித்தியாலயத்தில் மீளக்குடியமர்வுக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி அரச அதிபர் கேட்டுள்ளார்.

இதேவேளை -

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தற்காலிகமாக வெளிமாவட்டங்களில் வசித்துவரும் கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கீழ்வரும் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கான மீளக்குடியமர்வுக்கான பதிவுகள் எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

வட்டக்கச்சி, சிவிக்சென்ரர், மாயவனூர், மாவடியம்மன், இராமநாதபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தற்காலிக பதிவுகளை உரிய பிரதேச செயலகங்களில் நீக்கம் செய்து மீளக்குடியமர்வுக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கேட்டுள்ளார். (50-201)

# அடுத்த இரு தினங்களும் பலத்த காற்று வீசும்

கொழும்பு,ஜூன்12

நாட்டின் பல பகுதிகளிலும் அடுத்த இரு தினங்களில் பலத்த காற்று வீசக்கூடிய அபாயம் காணப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டின் சில பகுதிகளில் மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தற்போது மணிக்கு 40முதல் 50கிலோ மீற்றர் வேகத்தில் வீசும் காற்று, இன்னும் இருதினங்களில் 60முதல் 70 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# சிம்லாவின் அழகில் மயங்கினார் ஷிராந்தி

சிம்லா,ஜூன்12

சுற்றுலா மையமான சிம்லாவுக்கு விஜயம் செய்த இலங்கை ஜனாதிபதி தமது விடுதியிலேயே தங்கியிருக்க அவரது துணைவியார் ஷிராந்தி ராஜபக்ஷ நகரப்பகுதியில் உலா சென்று மகிழ்ந்தார். அத்துடன் முக்கிய இடங்களையும் பார்த்து மகிழ்ந்து கடைகளில் தமக்கு விருப்பமான பொருள்களை வாங்கிக் கொண்டு திரும்பினார்.

இந்தியாவுக்கு வருகைதந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இமாசல பிரதேசத்தின் சுற்றுலா மையமான சிம்லாவுக்கும் கடந்த 10ஆம் திகதி தமது பாரியாருடன் விஜயம் செய்தார். ஆனால் விரபரா என்ற இடத்திலுள்ள 'வைல்ட் பிளவர்' ஹோட்டல் விடுதியிலேயே அவர் தங்கியிருந்தார். அவரது துணைவியார் தமது உதவியாளர்களுடன் புகழ்பெற்ற மல்வீதி ஊடாகப் பயணம் மேற்கொண்டு மகிழ்ந்தார். விருப்பமான பொருள்களை வாங்கினார்.

''இந்த நகரில் இருப்பது நன்றாக உள்ளது - சொந்த ஊரில் இருப்பது போல்'' என்று பத்திரிகையாளர்களிடம் கூறினார் திருமதி ராஜபக்ஷ.

''சிம்லாவுக்கு வந்திருப்பது இதுவே முதல் தடவை, உண்மையில் மறக்க முடியாத விஜயம்'' என்று அவர் கூறினார்.

மல்வீதியில் இரண்டு மணிநேரத்துக்கு மேல் செலவழித்த திருமதி ராஜபக்ஷ, இமாச்சல் பெரிய துணிக் கடையொன்றில் சில கம்பளி ஆடைகளையும், அரை டசின் ''குல்லு'' சால்வைகளையும் வாங்கினார். பெண்களுக்கான சில ஆடைகளைத் தனியார் காட்சியறைகளில் கொள்முதல் செய்தார். பிரிட்டிஷார் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சரித்திர முக்கியத்துவமான கட்டடங்களையும் பார்வையிட்டார்.

பிரிட்டிஷார் காலத்தில் கட்டப்பட்ட இம்பீரியல் தியேட்டரை ஆர்வத்துடன் பார்வையிட்ட அம்மையார் ''வரலாற்று முக்கியத்துவமான கட்டடத்தையும் பாருங்கள்'' என்று தமது உதவியாளர்களிடம் சுட்டிக் காட்டினார்.

சிம்லா மல்வீதியில் திருமதி ராஜபக்ஷவின் நடமாட்டத்தையொட்டி பெரும் எடுப்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (ப)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 30 | 13.06.2010 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி | : பிரதமை |
| | பி.ப. 03.48 வரை |
| நட்சத்திரம் | : மிருகசீரிடம் |
| | மு.ப. 09.46 வரை |
| சுபநேரம் | : 08.52 - 10.22 |
| ராகுகாலம் | : 04.22 - 05.32 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநெல்வேலி அம்மன் கோயிலுக்குச் சென்ற

# இளம் பெண்ணின் சங்கிலியை அறுத்த நபரை கலைத்துப்பிடித்தார் இளைஞர்!

திருநெல்வேலி, ஜூன் 12

ஆலயத்துக்குச் சென்று கொண்டிருந்த இளம்பெண்ணின் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிய இளைஞனை எதிரே வந்த இளைஞன் கலைத்துப்பிடித்து சங்கிலியை மீட்டு உரியவரிடம் ஒப்படைத்தார்.

திருநெல்வேலி அம்மன் கோயிலுக்கு நேற்றுமுன்தினம் மு.ப. 11 மணியளவில் சென்றுகொண்டிருந்த இளம்பெண் ஒருவரின் நாலுபவுண் எடையுள்ள சங்கிலியை சைக்கிளில் வந்த இளைஞன் ஒருவர் அறுத்துக்கொண்டு தலைதெறிக்க ஓடினார். அவ்வேளை, எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞனிடம் அந்தப் பெண் விவரம் தெரிவிக்கவே அவர் கலைத்துச் சென்று குறிப்பிட்ட நபரைப் பிடித்து அவரிடம் இருந்து சங்கிலியை மீட்டார். சங்கிலியைப் பெண்ணிடம் ஒப்படைத்த அந்த இளைஞன், சங்கிலியை அபகரித்த நபரை பொலிஸில் ஒப்படைத்தார். (ஒ-1-267)


**கணனி விற்பனைக்கு**

நல்லநிலையில் உள்ள P.4 Computers, Monitor உத்தரவாதத்துடன் உடன் விற்பனைக் குண்டு.

1.7 Ghz , 2.0 Ghz , 3.0 Ghz
14,750/= 16,750/= 21,750/=

தொடர்பு: Sky Computer System
162, Main Streer, Jaffna. T.P: 021 222 1417

**காணி விற்பனை**

யாழ்ப்பாணம் இல. 133, நாவலர் வீதி, முஸ்லிம் வட்டாரத்தில் அமைந்துள்ள நில. பர.01 குளி 2.09 விஸ்தீரணம் கொண்ட காணியும் கட்டடமும் கிணறும் விற்பனைக்குண்டு.
விவரங்களுக்கு:
தொலைபேசி இல: 0779103740

**T.V. கள் விற்பனைக்கு**

புதிய Sony wega 21"-14" T.V.கள், BZ213, BT21, HA21, FX21, TG21, Panasonic Flat 21", குளிர் சாதனப் பெட்டி, பொக்ஸ் வகைகள் (Japan), FH ரேடியோ கசெற் வகைகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு : இ. மகேஸ்வரன் (அப்பளக் கொம்பனி)
சீனிப்புளியடி, ஆரம்பப் பாடசாலை அருகில்,
K.K.S. வீதி, இணுவில். T.P. : 0771393670

**ROOM வாடகைக்குத் தேவை**

யாழ். மாநகரசபை உறுப்பினர் ஒருவருக்கு, கச்சேரி, கண்டுக்குழி, கோயில் வீதி, பெரிய கோயில் ஆகியவற்றிற்கு அண்மித்த பகுதிகளில் Room வாடகைக்குத் தேவை.
தொடர்பு : 0772487642

**தவறிவிட்டது**

1ஆம் வட்டாரம், அனலைதீவைச் சேர்ந்த கந்தசாமி சுதன் என்பவரது தே.அ.அ. [920603025 V] மானிப்பாய்க்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தந்துதவவும்.
தொடர்பு: 0778333430

**காணிவிற்பனை**

கொக்குவில் ஆடியபாதம் வீதியில், கொக்குவில் சந்திக்கும் மருத்துவபீடத்துக்கும் இடையில் சரஸ்வதி மில்லுக்கு முன்னால் உள்ள ஒழுங்கையில் 50 மீற்றர் தூரத்தில் 2¾ பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு. தரகர் வேண்டாம். தொடர்பு: பி.ப 2மணிக்குப் பின் 0777891475

**காணி விற்பனைக்கு**

பலாலி வீதியில் 2 ½ பரப்புக் காணி பங்கு கிணற்றுடன் விற்பனைக்கு. நல்லூர் பிரதேச செயலகத்துக்கு அருகில்.
தொடர்பு: 0777111400

**விற்பனைக்கு**

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோயிலடியில் இரண்டு பரப்புக் காணியில் அமைந்த பெரியவீடு (பிருந்தா இல்லம்) விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நேரம்: வெள்ளி 8 am-4 pm
தொடர்பு: எஸ்.பிறேம்,
தொ.பே: 0772231096

**கடையுடன் காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் வைத்தீஸ்வராக் கல்லூரிக்கும், ஓட்டுமடம் சந்திக்கும் இடையில் மானிப்பாய் வீதியை முகப்பாகக் கொண்ட 3தளத்திற்கான மாநகர சபை அனுமதிபெற்று கீழ்தளம் முற்றாக முடிவடைந்த நிலையில் இருக்கும் கடைத் தொகுதியுடன் 3 பரப்புக் காணியும் கடையும் நல்ல விலைக்கு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776569971,
0787992394.


# மரண அறிவித்தல்

## செல்வரத்தினம் சரஸ்வதி



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக்கட்டுவன் வடக்கை வதிவிடமாகவும், நல்லூரை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் சரஸ்வதி 10.06.2010 வியாழக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் அமரர் செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் அமரர் துரைராஜாவின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரன் (அத்தான் -மகாசில்க்ஸ்), யசோதரா (சிற்றி ரெக்ஸ், நல்லூர்), பகீரதன் (ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), பகீரதி, சியாமளா, மோகன்குமார் ஆகியோரின் பாசமிகு தாயும் செல்வரதி, ஜெயக்குமார், ஆனந்தராணி, கதிர்காமநேசன், சூரியபாலன், சுபாசினி ஆகியோரின் அன்பு மாமியும் சைலஜா, புவிகரன், கம்சா, கோகுலன், நவநீதன், பிரிந்தன், ஜனேஸ், யதூஸ், ஜீவிகாஸ், சகீன், டிலக்ஷன், பவித்திரா, மதூசன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.06.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

52,பலாலி வீதி, கோண்டாவில்கிழக்கு,
கோண்டாவில். (சி/568339)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கரணவாய் ம.வி. பரிசளிப்பு விழா

கெருடாவில், ஜூன் 12

கரணவாய் மகாவித்தியாலய வருடாந்தப் பரிசளிப்புவிழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் சி.நற்குணலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கலந்துகொள்வார். (ஒ-1-253)

## பிரவேச, பாலபண்டிதர் பரீட்சைகள்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் சைவ சித்தாந்த பிரவேச, பாலபண்டிதர் பரீட்சைகள் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்று பூர்த்திசெய்து எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு பரீட்சை செயலாளர் இரா. செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (ஒ-1)

## பெறுபேற்று சான்றிதழ்

'கேற்வே' மொழிகள் மற்றும் தகவல் தொடர்பாடல் நிலையத்தினால் நடத்தப்பட்ட 'ஜோன்கீல்ஸ்' இலவச ஆங்கில புலமைப்பரிசில் கற்கைநெறியின் இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளன.

மாணவர்கள் தவறாதுசமுகம்தந்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு நிலைய முகாமையாளர் வி.செல்வராசா அறிவித்துள்ளார். (ஒ-1)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தீவக வலயப் பாடசாலைகளில் புவியியல், வரலாறு, குடியுரிமைக்கல்வி பாடங்களைக் கற்பிக்கும் தரம் 6தொடக்கம்11 ஆம் வகுப்பு வரையான ஆசிரியர்ளுக்கான செயலமர்வு இன்று வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

செயலமர்வில் அழைக்கப்பட்ட ஆசிரியர்கள் கலந்துகொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் சி.வி.இராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார். (1-267)


**கார் வாடகைக்கு**

திருமணத் தேவைகளுக்கான முற்றிலும் குளிரூட்டப்பட்ட சொகுசுக்கார் வாடகைக்கு விடப்படும்.



தொடர்புகளுக்கு:
0212228984,
0773747825, 0776152992.
இல.45, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**புறொயிலர் விற்பனை**

நிறை கூடிய புறொயிலர், கல்பேட் மற்றும் முட்டை என்பன மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். புறொயிலர் விலை 20/- வால் குறைக்கப்பட்டுள்ளது. மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும்.
தொடர்பு : மல்ரி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி. (99413) T.P. : 0217912783


# இதய அஞ்சலி



எங்கள் தேவஸ்தானத்தின்
முன்னாள் தலைவரும்
பேரறிஞருமாகிய
அமரர் அதிபர்.ஜெ.து.ஜெயரட்ணம்
அவர்களின் பாரியார்

## திருமதி இராணிரத்தினம்

அவர்களின் பிரிவு குறித்து மிகுந்த வேதனையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திபெற துர்க்கா தேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இலட்சுமியம்மா விஸ்வநாதன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமியம்மா விஸ்வநாதன் 07.06.2010 திங்கட்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வநாதனின் அன்புத் துணைவியாரும் திருமதி விக்கினேஸ்வரி கந்தையா (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/மல்லாகம் மகா வித்தியாலயம்), திருமதி மங்கையர்க்கரசி சிவநேசன் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/அருணோதயாக் கல்லூரி), சிவராஜாசிங்கம், அமரர் சிவானந்தராசா, சிவஞானசேகரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/பரியோவான் கல்லூரி), அமரர் சிவதாசன், சிவரூபன் (HNB, Colombo) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (08.06.2010) செவ்வாய்க் கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் வீதி,
அளவெட்டி. (99419)

தகவல்:
பிள்ளைகள்.

## தம்பு ஸ்ரீபத்மநாதன்

திருநெல்வேலி, மணல்தறை லேன், முடமாவடியைப் பிறப்பிடமாகவும், கனடா, ஸ்காபுறுவை வதிவிடமாகவும் கொண்ட தம்பு ஸ்ரீ பத்மநாதன் 08.6.2010 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் அமரர் தம்பு - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் புஸ்பராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும், ஸ்ரீ ஜெயப்பிரபா (கனடா), மோகனஹாசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாக்கியநாதன், கணநாதன், குருநாதன் (குருமன்காடு, வவுனியா), சொர்ணலட்சுமி, அன்னலட்சுமி (உ.க.ப. கல்வி வலயம், தீவகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ரமேஸ் ரொபின்சனின் மாமனாரும், பிருந்தா மேரி ஜேன், ஜோயல், ஜொஸ்ரன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/568331)

தகவல் :
மோகனஹாசன்
(மகன், கனடா).

## திருமதி நாகம்மா நாகரத்தினம்

வேலணை கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா நாகரத்தினம் நேற்று (11.06.2010) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்பு மனைவியும் சரஸ்வதி (ஹொலண்ட்), கமலாதேவி, சண்முகரத்தினம், காலஞ்சென்ற ஜீவரத்தினம் மற்றும் ரதி, தர்மரத்தினம், செல்வரத்தினம், சந்திரவதனா (U.K) ஆகியோரின் அன்புத் தாயும் பால்ராஜா (ஹொலண்ட்), காலஞ்சென்ற துரைராஜா மற்றும் தனலட்சுமி, தயாநிதி, காலஞ்சென்றவர்களான ஆனந்தி, நடேசமூர்த்தி மற்றும் அம்பிகா, யோகநாதன் (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும் இரத்தினசபாபதி, காலஞ்சென்றவர்களான நாகராசா, காந்தம்மா, சின்னம்மா மற்றும் முத்துத்தம்பி, செல்லம்மா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (11.06.2010) வெள்ளிக்கிழமை நடைபெற்று சாட்டி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

4ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு. (99420)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை பொழிந்த திடீர் மழையால் யாழ்.முற்றவெளிப் பிரதேசத்தில் வெள்ளம் தேங்கிக் கடல்போல் காட்சியளிப்பதையும் வாகனங்கள் சிரமப்பட்டு போக்குவரத்தில் ஈடுபடுவதையும் முதலிரு படங்களிலும்-

யாழ்.மத்திய கல்லூரி மைதானம் வெள்ளநீரால் சூழ்ந்து காணப்படுவதையும் யாழ்.கந்தப்பசேகரம் வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் வெள்ள நீர் புகுந்திருப்பதையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்: நந்தன், தமிழினியன்)

# நேற்று அதிகாலை கொட்டியது கடும் மழை! குடாநாட்டின் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ். குடாநாட்டில் நேற்று அதிகாலை வேளை கொட்டித் தீர்த்த கடும் மழையினால் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது.

நேற்று அதிகாலை குடாநாட்டின் பல பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கடும் மழை சில மணி நேரம் கொட்டித் தீர்த்தது.

இதனால் தாழ்ந்த பகுதிகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கின. தொடர்ச்சியாகச் சுமார் 3 மணிநேரம் இந்தத் திடீர் மழை கொட்டித் தீர்த்தது. இதனால் குடாநாட்டில் பல பகுதிகள் வெள்ளக் காடாகக் காட்சியளித்தன.

தாழ்ந்த பகுதிகளில் இருந்த குடிசைகள், வீடுகள் என்பவற்றுக்குள் அதிகாலை பெய்த கடும் மழையினால் வெள்ளம் உட்புகுந்தது. இதனால் உறக்கத்தில் இருந்த மக்கள் எழுந்து தமது பொருள்களைத் தூக்கி உயரமான இடங்களில் வைத்து விட்டு விழிப்புடன் பொழுதைக் கழித்தனர்.

குறிப்பாக பண்ணை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, நாவாந்துறை, ஆரியகுளம், கொட்டடி ஆகிய பகுதிகளில் உள்ள குடிமனைகளுக்குள்ளேயே வெள்ளம் புகுந்தது. சில வீதிகளிலும் வெள்ளம் தேங்கியமையால் போக்குவரத்து செய்தவதிலும் சிர மம் ஏற்பட்டது. சில இடங்களில் கடும் காற்றினால் மரங்கள் முறிந்தமையால் மின் விநியோகம் தடைப்பட்டது.

குடாநாட்டில் வலி.வடக்கு , வலி. கிழக்கு, வடமராட்சிப் பகுதிகளில் அதிகளவு மழை பெய்யவில்லை. வலிகாமம், தென்மராட்சி, யாழ் நகர் ஆகிய பகுதிகளிலேயே கடும் மழை பெய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224-135-160)




# கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன இம்மாத இறுதியில் யாழ். வருகிறார்

## 'மக்கள் களரி' நாடக அரங்கில் கலந்து கொள்வார்

யாழ்ப்பாணம், ஜூன் 12

கல்வி அமைச்சர் பந்துல குணவர்ததன இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

'மக்கள் களரி' என்னும் அமைப்பினால் யாழ். வலயக்கல்வி அலுவலகத்திற்கு அருகில் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை 'மக்கள் களரி' நகரும் நாடக அரங்கு நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காகவே அமைச்சர் பந்துல யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளதாகத் தெரியவருகின்றது.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள இந்த நாடகவிழாவை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த நாடக விழாவில் தினமும் பல விருதுகளை வென்ற - விசேட நாடகங்கள் மேடையேற்றப்படுவதுடன் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணக் கலைஞர்களின் நிகழ்வாக திருமறைக் கலாமன்றத்தினரின் ''அற்றைத் திங்கள் கூத்து'' நாடகமும் இடம்பெறவுள்ளது.

இந்த நாடக விழாவில் தினமும் முற்பகல் 9 மணிக்கும் மாலை 6 மணிக்கும் இந்த நாடகங்கள் அரங்கேற்றப்படவுள்ளன குறிப்பிடத்தக்கது. (50-16)

# எங்கே தமிழ்?




யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்ப்பாணத்துக்குப் படையெடுக்கின்ற சுற்றுலாப்பயணிகள் தவறாமல் செல்கின்ற ஓர் இடம் நயினாதீவு, நயினை நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்தப் பெருவிழாவும் இன்று ஆரம்பமாகவுள்ளது. இதனால் முன்னரைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையான பயணிகள் நயினாதீவுக்கு வருகை தரக்கூடுமென்று கூறப்படுகின்றது.

இந் நிலையில் நயினாதீவுக்குப் பயணிப்போர் வசதி கருதி யாழ்.பண்ணைப் பகுதியில் நயினாதீவுக்குச் செல்லும் வழியை அடையாளப்படுத்தும் அறிவிப்புப் பலகையொன்று நடப்பட்டுள்ளது. இது நல்ல செயல் தானே? என்று நீங்கள் எண்ணக்கூடும் ஆனால் அங்கேதான் இருக்கிறது ஒரு விடயம். தமிழ்ப்பிரதேசத்தில் உள்ள மிக முக்கியமான தலமொன்றுக்கு வழிகாட்ட நடப்பட்ட இந்த அறிவிப்புப் பலகையில் நயினாதீவு என்பதை சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. தமிழ் காணாமற்போய்விட்டது. இதுவரை ஆள்கள் மட்டுமே காணாமற்போய்க்கொண்டிருந்த யாழ்ப்பாணத்தில் இப்போது தமிழ் மொழியும் காணாமல் போகத் தொடங்கிவிட்டதோ என்று பலரும் ஆதங்கப்படுகின்றனர். (எ-224)

# அனைத்துப் பாடசாலைகளிலும் 15 ஆம் திகதி சிரமதானப்பணி

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ். மாவட்டத்தில் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக அனைத்துப் பாடசாலைகளிலும் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:

தற்போது குடாநாட்டில் பரவிவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அனைத்துப் பாடசாலைகளிலும் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாடசாலைக் கட்டடம், பாடசாலை வளவு மற்றும் அதன் சுற்றுப்புறச் சூழல் என்பவற்றிலுள்ள குப்பை கூழங்கள், செடி, கொடி, புல், பூண்டு என்பவற்றை வெட்டி ஓரிடத்தில் குவித்துப் பின்னர் உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்.

அதனை அகற்றுவதற்கு அவர்கள் உடனடி நடவடிக்கை எடுப்பார்கள்- என்றார்.

இது தொடர்பான அறிவித்தல் யாழ்ப்பாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரூடாக அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றது. (50-16-207)

# காரைநகர் கசூரினா கடற்கரையில் அதிகரித்து வரும் கலாசாரச் சீர்கேடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 12

காரைநகர் கசூரினா கடற்கரையில் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் கலாசார சீர் கேடுகளினால் அப் பகுதி மக்கள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

கசூரினா கடற்கரைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன் வார இறுதி நாள்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இங்கு வந்து செல்கின்றனர்.

இங்கு வருபவர்களில் சிலர் மது போதையில் அட்டகாசம் புரிவதுடன் அங்குள்ளவர்களை தகாத வார்த்தைகளினால் பேசுவதாகக் கூறப்படுகின்றது. இதனால் குடும்பத்துடன் பொழுதைக் கழிக்கவருபவர்களும், மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாகக் கூறப்படுகின்றது.

ஈழத்துச் சிதம்பரத்திற்கும், அதன் புனித தீர்த்தக் கரையான கசூரினா கடற் கரைக்கும் அருகில் இருந்து மது அருந்தி அட்டகாசம் புரிவோரால் இப் பிரதேசத்தில் தினமும் பெரும் பரபரப்பும் பீதியும் நிலவுவதாகவும் கூறப்படுவதுடன், அங்கு கடற்தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்களின் வள்ளங்கள், வலைகள் என் பவற்றையும் இவர்கள் நாசம் செய்வதாக கடற்தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை - வாகனங்களுக்கு வரி அறவிடுவதில் முனைப்புக் காட்டும் பிரதேச சபையினர் உடைமாற்றும் இடம், குடிதண்ணீர் வசதி, உணவுசாலைகள், சட்டம், ஒழுங்கு, பாதுகாப்புப் போன்றவற்றில் காணப்படும் குறைபாடுகளை விரைந்து தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-250)

# புங்குடுதீவுக்கான மின்னிணைப்புப் பணி அடுத்த வாரத்தில் பூர்த்தி செய்யப்படும்



நல்லூர், ஜூன் 12

புங்குடுதீவு பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்ப வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

மின்சாரக் கம்பங்கள் நடப்பட்டு கம்பிகள் பொருத்தப்படும் வேலைகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன. இந்த வேலைகள் அநேகமாக அடுத்த வாரத்தில் பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

புங்குடுதீவின் உட்பகுதிகளுக்கான இணைப்பு வேலைகள் பூர்த்தியானதும் வேலணையில் இருந்து அம்பலவாணர் பாலம்வரை நடப்பட்டுள்ள மின்கம்பங்களுக்கு இணைப்புக்கம்பிகள் பொருத்தப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து மடத்துவெளி, ஆலடிப் பகுதியிலுள்ள உப மின் நிலையங்களுடன் இவை இணைக்கப்பட்டு மின்விநியோகம் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்பின்னர் இறுதிப் பகுதிக்கான இணைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-111)

# நேற்றிரவு பெய்த கடும் மழையால் தென்மராட்சியில் விவசாயிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று நள்ளிரவு தொடங்கி ஆறு மணித்தியாலயங்கள் தொடர்ந்து பெய்த மழையினால் விவசாயப் பயிர்கள் அழிந்துபோகும் அபாயம் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

அண்மையில் புதைக்கப்பட்ட விதை வெங்காயப் பாத்திகளுக்குள் மழை வெள்ளம் தேங்கியிருப்பதாலும் புதிதாக நடப்பட்ட வெங்காயம் வெள்ளத்துடன் செல்வதாலும் வெங்காயச் செய்கையாளருக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் நெல்வயல்களில் மேற்கொள்ளப்பட்ட விவசாயப் பயிர்கள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுவதாகவும் இங்கு பயிரிடப் பட்ட அனைத்துப் பயிர்களும் அழிந்து போகும் நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தனர். (50-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, மானிப்பாய் மக்லியோட் வைத்தியசாலை, இணுவில்

1. யாழ்.போதனா வைத்தியசாலையில் நிபுணத்துவ வைத்திய சேவை புரிந்துகொண்டிருக்கும் பின்வரும் வைத்திய நிபுணர்கள் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கும், இணுவில் மக்லியோட் வைத்தியசாலைக்கும் வைத்திய நிபுணத்துவ சேவை வழங்குவதற்கு வருகை தந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை அறியத்தருகின்றேன்:

I) Dr.S.மருதைநயினார் M.B.B.S., M.D. (Paediatrics) - குழந்தையியல் நிபுணர். சனி மாலை 4 - 5 மணி (இருவைத்தியசாலைகளுக்கும்)

II) Dr.s.சுகுமாரன் M.B.B.S., M.D. , (dermatology) தோல் வியாதி நிபுணர் ஞாயிறு காலை 10 - 11 மணி. (இரு வைத்தியசாலைகளுக்கும்)

2. தேவை

இணுவில் மக்லியோட் வைத்தியசாலையிலும், மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையிலும் மருத்துவசேவை வழங்குவதற்கு M.B.B.Sபட்டம் பெற்ற வைத்தியர்கள் அல்லது R.M.O. (Registered Medical Officers) தேவைப்படுகின்றனர். இரவுக் கடமை, பகல் கடமை, கிழமையில் ஒருநாளோ, இரண்டு நாளோ அல்லது சில மணித்தியாலங்களோ எதுவாயினும் விரும்பிய வைத்தியர்கள் விண்ணப்பித்து என்னை நேரில் காணலாம்.

3. இணுவில் மக்கிலியோட் வைத்தியசாலையில் பின்வரும் முக்கிய பரிசோதனைகள் செய்து கொடுக்கப்படும்.

i. Electrolytes
ii. Lipid Profile
iii. Liver Profile
iv. G.Gt
v. SGOT
vi. Blood Grouping typing
vii. Sputum A F B
viii. Troponin I
ix. U.Micro albumin
x. $HB_sAg$
xi. Hb AIC

(99350)

தொலைபேசி
021 222 2747, 021 222 7669
0776171451, 0772132517

மருத்துவ மேலதிகாரி
Medical Superintendent.


# தென்மராட்சியில் 17 பாடசாலைகளில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்12

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 17 பாடசாலைகளில் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

உலகவங்கியின் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட (ஈ.எஸ்.டி.பி.) நிதி அனுசரணையுடன் மாகாண கல்வி அமைச்சு வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது.

12 பாடசாலைகளில் கட்டடத் திருத்த வேலைகளுக்கும், மூன்று பாடசாலைகளில் தற்காலிக வகுப்பறைக் கொட்டில்கள் அமைப்பதற்கும், இரு பாடசாலைகளில் மலசலகூடத் திருத்த வேலைகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், நாவற்குழி மகாவித்தியாலயம், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலயம், கெற்பேலி அ.த.க. பாடசாலை, அல்லாரை அ.த.க. பாடசாலை, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், கைதடி - நாவற்குழி அ.த.க. பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கட்டடத் திருத்த வேலைகளும், இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை, மந்துவில் றோ.க.த.க. பாடசாலை, கரம்பை அ.மி.த.க. பாடசாலை ஆகியவற்றில் தற்காலிகக் கொட்டகைகளும், வரணி வடக்கு அ.த.க. பாடசாலை, மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் ஆகியவற்றில் மலசலகூடத் திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் தெரிவித்தார். (5-207)


## வீடு வாடகைக்குத் தேவை

மூன்று பேர் கொண்ட அரச தொழில் புரிபவருக்கு யாழ்.நகருக்கும் நல்லூருக்கும் இடையில் வீடு வாடகைக் குத் தேவை. முற்பணமும் வாடகையும் கொடுக்கப்படும்.

தொடர்பு: 021 300 7275

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.நகரை அண்டிய பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0771606036

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்டு உத்தரவாதமளிக்கப்பட்ட No.1 தரமான Broilar கோழிக் குஞ்சுகள் 21.06.2010 காலை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். T.P. No:.021 222 6944
சூட்டி பாம், வட்டுக்கோட்டையிலும் பதிவு செய்யலாம். T.P. No:. 021 321 6290

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில் கௌரவமான சிறிய ஆசிரியர் குடும்பம் ஒன்றிற்கு தங்கியிருந்து வீட்டுவேலை செய்வதற்கு 40 வயதிற்கு உட்பட்ட பெண் வேலையாள் தேவை. (யாழ்ப்பாணத்தில் இருந்து பாதுகாப்பாகக் கூட்டிச் செல்லப்படுவார்)

தொடர்பு: 0714980324


# திறந்த பல்கலைக்கழக பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 12

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2010/2011 கல்வியாண்டுக்கான அடிப்படைச்சிங்கள சான்றிதழ் கற்கை நெறிக்கு பதிவு செய்தவர்களுக்கான நாட்பாடசாலை இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறும்.

* * *

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் சமூகவியல் இளமாணிப்பட்ட கற்கை நெறி 2009/2010 ஆம் கல்வியாண்டுக்கான இறுதிப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும்.

* * *

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் பட்டமேற் கல்வி டிப்ளோமா 2009/2010 கல்யாண்டு மாணவர்களுக்கான மீட்டல் நாட்பாடசாலைஇன்று சனி - கல்வி முகாமைத்துவம் பிரிவுக்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை - கல்வி உளவியல் பிரிவுக்கும் காலை 9 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில்நடைபெறும்.

இந்த விவரங்களை பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சின்னத்தம்பி
சின்னராசா (செல்வராசா)

அன்னை மடியில் 05.02.1950

ஆண்டவன் அடியில் 03.06.2008

திதி: அமாவாசை

அன்பின் ஆதாரமாய் பண்பின் சிகரமாய்
வாரி வழங்குவதில் வள்ளலாய்
உறவுகளுக்கு உறுதுணையாய், காவல் தெய்வமாய்
ஆண்டவன் அடியில் அர்ச்சனைப் பூவாகி
நித்தியமாய் நிலைத்த எம் அப்பாவே!
வேண்டி நிற்போம் நாம் உங்கள் முன்னே
வழிகாட்டி எம்மோடு வருகவென்றே
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவரே
தெய்வத்துள் இருந்தெம்மைக் காத்திடுங்கள்.

3 ஆம் கட்டை,
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.

உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி அன்னம்மா பிரான்சீஸ்



தோற்றம் 20.09.1920

மறைவு 13.05.2010

(இ/568328)

தாயாகத் தரணியில் எம்முடன் உலாவந்தீர்
தரமான வாழ்வு நாம் வாழ சீராக எமை வழிநடத்தினீர்
தடைகள் பல வந்த பொழுதிலும்
தளராது எமைக் காத்தீர், நீங்கள் எமைவிட்டுப்
பிரிந்தாலும் என்றும் எம்நெஞ்சம் மறவாது!...

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று (12.06.2010) சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'அமிர்தவாசா',
அகஸ்டஸ் லேன், இளவாலை.

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## பதினொராம் ஆண்டு நினைவுகளுடன்...



தாய் மடியில் 1980*12*13

காலன் பிடியில் 1999*06*12

## சோதிநாதன் சோபநாத்

சோபா... நீ எமைப்பிரிந்து
பதினோராண்டுகள் சென்றாலும் – என்றும்
உன் நினைவுகளை நெஞ்சோடு
சுமந்து – மீண்டும் உன்
வரவிற்காகக் கண்ணீருடன் காத்திருக்கின்றோம்.

சிவகுல வீதி,
உரும்பிராய் மேற்கு.

தாய், சகோதரர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் ஜெகசோதி தணிகைக்குமரன்

தோற்றம் 16.02.1990

மறைவு 12.06.2009

பாசமிகு அண்ணா
பாசத்திலே பள்ளி கொண்டேன் - அண்ணா
கடவுளே நீ என்றேன் - என்
கண்களில் உனைவைத்தேன்
நீ என் கண்ணை கொண்டு சென்றாய்

அண்ணன் ஒரு விடி விளக்கு - உன்
தங்கை அதில் ஒளி விளக்கு
வீட்டில் எரியும் விளக்கில் கூட
உன் விம்பம் தெரிகிறதே அண்ணா

இரு கரங்களால் உன்னைத் தொழுதேன் - எந்நாளும்
இளம் வயதில் எனைப் பிரிந்தாய்
வாழ்நாளில் பாசமிகு அண்ணாவே
என் கவலையை கவிதையில் வடித்துள்ளேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (99333)

பாசமிகு தங்கையும்
குடும்பத்தினரும்.


## COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் 2010

அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 3 Months 3500/= | Diploma in Desktop Publishing 4 Months ~~22500/=~~ 4500/= | Diploma in Web Page Designing 3 Months ~~22500/=~~ 4500/= |
| Diploma in Graphic Designing 4 Months ~~22500/=~~ 4500/= | Diploma in Hardware Engineering 3 Months ~~20000/=~~ 4000/= | Diploma in Auto CAD 3 Months ~~22500/=~~ 4500/= |
| Diploma in Accounting Package 3 Months ~~22500/=~~ 4500/= | Diploma in Computer Science 4 Months ~~22500/=~~ 4500/= | Honors Diploma in Computer Science 3 Months ~~32500/=~~ 6500/= |


80% Off

50% Off Advance Courses
Dip. in. Multimedia ~~10000~~ 5000/=
Dip. in. Video Editing ~~9500~~ 4750/=

Batch i - 14.06.2010 - 9Am or 3pm
Batch ii - 16.06.2010 - 9Am or 3pm
Batch iii - 18.06.2010 - 9Am or 3pm
Batch iv - 19.06.2010 - 9Am or 3pm

1 Week Courses (Monday to Friday)
Start On 14.06.2010 At 9AM
1) Diploma in Hardware Engineering
2) Diploma in Video Editing
3) Diploma in Graphic Designing


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




என்.டி.பி வங்கியால் யாழ்.பொது நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்கள் நேற்றுக் கையளிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்த நிகழ்வில் என்.டி.பி வங்கியின் அதிகாரி ராஜ் அபுபக்கர் நூல்களை யாழ்.மாநகர மேயர் யோ.பற்குணராஜாவிடம் கையளிப்பதை முதற் படத்திலும், கையேற்ற நூல்களை யாழ்.மாநகர மேயர் நூலகப் பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கத்திடம் கையளிப்பதை இரண்டாவது படத்திலும், கையளிக்கப்பட்ட நூல்களை யாழ்.மாநகர ஆணையாளர் மு.வ.சரவணபவ பார்வையிடுவதை இறுதிப்படத்திலும் காணலாம்.
(படங்கள்: சுகந்தன்)

# விரிவுரை நேரத்தில் குடும்ப நல பயிற்சியாளர்களை வீட்டுக்கு அனுப்பிய சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

யாழ்ப்பாணம்,ஜூன் 12

யாழ்.தாதியர்பயிற்சிக் கல்லூரியில் குடும்ப நல மருத்துவமாது கற்கை நெறியைத் தொடரும் மாணவிகளை விரிவுரை நேரத்தில் பலவந்தமாக வீடுகளுக்கு அனுப்பியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரி எஸ். கனகராஜ் கல்லூரிக்குச் சென்று விசாரணைகளை நடத்தினார்.

இவ்வாறு மாணவிகளை பலவந்தாமாக வெளியேற்றிய சம்பவமானது மிகவும் தவறான செயல் எனவும் கல்லூரி நிர்வாகத்துக்கு மனித உரிமை ஆணைக்குழு அதிகாரியால் விசாரணையின் பின்னர் உணர்த்தப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

குடும்பநல மருத்துவமாது கற்கை நெறியைத் தொடரும் 2009 ஆம் கல்வியாண்டு மாணவிகள், விரிவுரை நிகழ்த்தும் பெண் விரிவுரையாளரின் செயற்பாடுகள் தமக்கு அதிருப்தி ஏற்படுத்துவதாகக் கல்லூரி அதிபரிடமும், வைத்தியசாலை நிர்வாகத்திடமும் முறைப்பாடு செய்தனர்.

அதேவேளை, யாழ்.மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்திலும் மாணவிகளால் முறைப்பாடு செய்யப்பட்டது.

கடந்தமாதம் ஐந்தாம் திகதி இந்த முறைப்பாடு செய்யப்பட்டது.

குறித்த விரிவுரையாளரின் செயற்பாடுகள் குறித்து அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மாணவிகளும் அவர்களது பெற்றோர்களுமாக 106 பேர் அதில் கையெழுத்திட்டுள்ளனர்.

இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து அதனை அறிந்த குறிப்பிட்ட விரிவுரையாளர் கடந்த மாதம் 17 ஆம் திகதி தனது பதவியை ராஜினமா செய்துள்ளதாக கல்லூரி அதிபரினால் எழுத்து மூலம் மனித உரிமை ஆணைக் குழு அதிகாரிக்கு கடந்த மாதம் 20ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில்- நேற்று முன்தினம் சம்பந்தப்பட்ட மாணவிகள் சுமார் 80 பேர் விரிவுரையில் பங்கேற்றிருந்த வேளை கல்லூரி நிர்வாகத்தால் வெளி யேற்றப் பட்டனர். வெளியேற்றப்பட்ட மாணவிகள் அனைவரையும் இன்று சனிக் கிழமை பெற்றோர் சகிதம் சமுகமளிக்கு மாறு அதிபரால் வேண்டப்பட்டிருந்தனர்.

இதனை அறிந்தே மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் எஸ்.கனகராஜ் கல்லூரிக்கு விஜயம் செய்து அதிபர் உள்ளிட்டவர்களுடன் விசாரணைகளை மேற்கொண்டார். (1-14)

## விழுதுகள் ஏற்பாட்டில் இன்றும் நாளையும் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 12

ஐரோப்பாவில் சமூக ஜனநாயக கோட்பாடுகள் வளர்ச்சியடைந்த வரலாறு பற்றிய கண்காட்சி இன்றும் நாளையும் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம், கொழும்பு அரசியல் கல்லூரி ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்தக் கண்காட்சி இடம் பெறுகின்றது.

முதல்நாள் பி.ப. 2 மணிமுதல் மாலை 6 மணிவரையும் இரண்டாம் நாள் காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரையும் கண்காட்சியைப் பார்வையிடலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (1)




## நடைபாதைக் கடையில் நள்ளிரவில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜூன் 12

கொட்டும் மழையை பயன்படுத்தி யாழ்.நகரில் உள்ள நடைபாதைக் கடை ஒன்றின் மீது திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்று அதிகாலை வேளை இடம் பெற்றுள்ளது.

யாழ்.முனீஸ்வரன் வீதியில் உள்ள நடைபாதைக் கடை ஒன்றின் முன் கதவை உடைத்துக்கொண்டு உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதிமிக்க உடுபுடவைகளைக் களவாடி சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(50-224)

## வீதி அகலமாக்கும் பணிகளுக்காக நாளை மின் தடை

யாழ்ப்பாணம்,ஜூன் 12

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி அகலமாக்கும் பணிகளுக்காக மின்சார விநியோகத் தூண்களை இடமாற்றம் செய்வதன் காரணமாக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை மின்சார விநியோகம் தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் பிராந்திய நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு உள்ளிட்ட வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் மின்சார விநியோகம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50-201)

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த ஒத்துழைக்காத வீட்டு உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை

## சுகாதாரப் பகுதியினர் ஒலி பெருக்கி மூலம் அறிவிப்பு

சண்டிலிப்பாய், ஜூன் 12

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்காத வீட்டு உரிமையாளர் மீது நீதிமன்றம் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ள சண்டிலிப்பாய் பிரதேச சுகாதாரப் பிரிவினர் இது குறித்து ஒலிபெருக்கி மூலம் கிராமம் கிராமமாகச் சென்று பிரச்சாரம் செய்து வருகின்றார்கள்.

குடாநாட்டில் இடை இடையே பெய்து வரும் மழையைத் தொடர்ந்து கட்டுப்பாட்டுக்குள் இருந்த டெங்குநோய் மீண்டும் பரவ ஆரம்பித்துள்ளது. இந்த நோயின் தாக்கத்திற்குள்ளான பலர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைபெற்று வருகிறார்கள்.

கடந்த காலங்களில் சண்டிலிப்பாய் பிரதேசத்தில் பலர் இந்நோய்த் தாக்கத்திற்குள்ளானதுடன் மரணித்தும் உள்ளனர். இதைத் தொடர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி முற்கூட்டியே நடவடிக்கைகளை எடுக்க முன்வந்துள்ளார்.

டெங்குநோயை ஏற்படுத்தும் நுளம்பு உற்பத்தியாகும். மழைநீர் தேங்கி நிற்கும் பொருள்களை வீடுகளிலிருந்தும் சுற்றாடலிலிருந்தும் அப்புறப்படுத்துமாறு ஒலி பெருக்கிமூலம் தெரிவித்து வரும் சுகாதாரப் பகுதியினர் பற்றைகளை அழித்துத் துப்புரவாக வைத்திருக்குமாறும் சுகாதாரப் பகுதியினருக்கு ஒத்துழைப்பு வழங்காதவர்கள் மீது நீதிமன்றம் மூலம் சட்ட நடிவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்து வருகின்றார்கள். இதேவேளை இப்பிரதேசத்தில் சுதுமலையைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் சுகாதாரப் பகுதியினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அவர் தண்டிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (50-115)

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஜூன் 12

'செகராசசேகர வைத்தியத் திறவுகோல்' என்னும் நூல் அறிமுக விழா இன்று சனிக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வட்டுக் கோட்டை விசாலாட்சி சமேத ஸ்ரீகாசி விசுவநாத ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதற்பிரதி மற்றும் சிறப்புப் பிரதி வழங்கல், நூல் விமர்சனம், ஏற்புரை என்பன இடம்பெறவுள்ளன. அடியார்கள், நண்பர்கள், வைத்தியர்கள், வைத்திய ஆர்வலர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து கொள்ளுமாறு நூல் சபைக்குழுவினர் கேட்டுள்ளனர்.

(50-201)

## வறிய மாணவர்களுக்கு 30 சைக்கிள்களை வழங்கி உதவுமாறு அமைச்சரிடம் கோரிக்கை

சண்டிலிப்பாய், ஜூன் 12

சாவல்கட்டு கிராமத்தில் வசிக்கும் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு 30 சைக்கிள்களை தந்துதவுமாறு சாவல்கட்டு கடற்றொழிலாளர் சங்கம், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரியுள்ளது.

பின் தங்கிய நிலையிலுள்ள இக்கிராமத்தில் வசிக்கும், கல்வி கற்றுவரும் மாணவர்கள் கல்லூரிக்குச் செல்வதற்கு வாகன வசதிகள் இல்லாததினால் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள்.

கல்வி அறிவில் பின்தங்கிய நிலையிலிருந்த எமது கிராமத்தில் உள்ள மாணவர்கள் தற்பொழுது கல்வி கற்பதில் அதிக அக்கறையுடன் ஈடுபட்டு வருகிறார்கள். பலர் பல்கலைக்கழகம் சென்றுள்ளார்கள்.

எனவே, கல்விகற்று வரும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் 30 துவிச் சக்கரவண்டிகளைத் தந்துதவுமாறு சங்கத் தலைவர் என். பொன்னம்பலம் அமைச்சரிடம் கேட்டுள்ளார். (50-115)

## கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 3 நாள் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஜூன் 12

அண்மையில் புதிதாக நியமனம்பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களுக்கான மூன்று நாள் பயிற்சி வகுப்பு நேற்று ஆரம்பமானது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு இப்பயிற்சி வகுப்பை மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் ஆரம்பித்து வைத்தார்.

இப்பயிற்சி வகுப்பிற்கான விரிவுரைகளை ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் நடத்தி வருகின்றனர். (50-224)

## றோலர் படகுத் தொழில் மீண்டும் இன்று முதல்

வண்ணை, ஜூன் 12

கடந்த 5ஆம் திகதி சனிக்கிழமை இரவு 10 மணியளவில் ஆழ்கடல் பிரதேசத்தில் ஏற்பட்ட திடீர் சூறாவளி காரணமாக இடை நிறுத்தப்பட்டுள்ள றோலர் இழுவைப் படகுத் தொழில் மீண்டும் இன்று சனிக்கிழமை தொடக்கம் அனுமதிக்கப் படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு ஆழ்கடல் பிரதேசத்தில் தோன்றிய சூறாவளிக் காற்றினால் தொழிலுக்குச் சென்றிருந்த றோலர் இழுவைப் படகுகள் மற்றும் தொழிலாளர்கள் பெரும் ஆபத்தில் இருந்து தப்பிக் கரை வந்து சேர்ந்ததும் குறிப்பிடத்தக்கது.

அதனை அடுத்து ஆழ்கடலுக்குச் செல்லும் றோலர் இழுவைப் படகுத் தொழில் கடந்த சில தினங்களாகத் தடைப்பட்டிருந்தது. (ஒ-160)

# போதனா வைத்தியசாலையில் 'லிப்ற்' வசதி நிறுத்தப்பட்டதால் நோயாளிகள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜூன் 12

யாழ்.போதனா வைத்தியசாலை புதிய விடுதிக்கான 'லிப்ற்' வசதி நிறுத்தப்பட்டமையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

புதிதாக அமைக்கப்பட்ட விடுதியின் இரண்டாம் மாடிக்கு ஏற்கனவே 'லிப்ற்' வசதி செய்யப்பட்டிருந்தது.

தற்போது அந்தக் கட்டடத்தின் அடுத்த மாடிக் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளமையால் அந்த 'லிப்ற்' வசதி நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது இந்த இரண்டாம் மாடிக்கே 17 ஆம், 18 ஆம் இலக்க விடுதிகள் இடமாற்றப்பட்டுள்ளன.

இந்த விடுதியில் தங்கி சிகிச்சை பெறும் முறிவு, நெரிவு நோயாளர்களை வைத்தியசாலை பணியாளர்கள் பெரும் சிரமப்பட்டு இரண்டாம் மாடிக்குத் தூக்கிச் செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைகடல் நடுவில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்

**வரலாற்றுப் புகழ் மிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று (12.06.2010) சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

சக்திபீடங்கள் அறுபத்து நான்கினுள் ஒன்றாகப் போற்றப்படுவது நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயமாகும். ஏழ்கடல்சூழ்ந்த சமுத்திரத்தின் மத்தியிலே அருட்பொலிவும், ஆன்மீகச் சிறப்பும்பெற்று, சரித்திர வரலாறுகளுடன் திகழ்வது நயினாதீவு. ''மணிபல்லவம்'' என்று போற்றப்படும் வரலாற்றுச்சிறப்பும், இலக்கியச் சிறப்பும் இதற்கு உண்டு. இவ்வழகிய தீவிலே அம்பிகை எழுந்தருளி அகில உலகமெல்லாமுள்ள ஆன்மாக்களுக்கு அருள் பாலித்துக்கொண்டு இருக்கிறாள். தன்னை நாடி வரும் அடியார்கள் வேண்டும் வரங்களை மனமுவந்து அள்ளிச்சொரிந்து அருளாட்சி செய்து கொண்டிருப்பவள் அன்னை நாகபூஷணி. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்றவள். அடியார்கள் '' அரோகரா'' என்று வந்து கால் பதிக்கும் இறங்குதுறை நயினாதீவுக்கே இயற்கையால் கொடுக்கப்பட்ட கொடை எனலாம். ஆசைக் கடலில் அகப்பட்டு அலைவோருக்கு வாசக்கமலங்களை தலைமேல் வைத்து அருள்நேசக் கரங்களை நீட்டி நிம்மதி தருகின்றாள்.

தூய்மையான நாகவழிபாட்டினை இவ்வாலயத்தில் காணலாம். புராதன காலந்தொட்டே நாகவழிபாடு நடைபெற்று வருகின்றது. முன்னதாக நாகவழிபாட்டிலே தொடங்கி காலப்போக்கில் ''நாகபூஷணி'' வழிபாடாக வளர்ந்து, நினைவுச்சின்னமாக நயினை நாகபூஷணி விளங்குகின்றாள். முன்னொருகாலத்தில் ஒரு சர்ப்பம் இங்கே வசித்து தவம்செய்து வந்ததால் தனது சாபம் நீங்கப் பெற்றதாகவும், அதனைத் தனது திருமேனியில் அணிந்து சாப நிவர்த்தி செய்தருளியமையூல்தான் இங்கு எழுந்தருளியிருக்கும் அம்பிகை 'நாகபூஷணி' என்னும் திருநாமத்துடன் விளங்குகின்றாள் என்பது வரலாறாகும். அடியார்கள் அம்பிகை மீது பற்று வைத்து ' நாகசாந்தி' செய்வதற்கு நயினாதீவுக்கு வருகின்றார்கள். நாகசாந்தி செய்வதன்மூலம் நாகதோஷம் நீங்குகிறது என்ற நம்பிக்கை அடியார்கள் மத்தியில் காணப்படுகின்றது. நாகதோஷத்தை நிவர்த்தி செய்து, அம்பிகையின் அருளால் பிள்ளைப் பாக்கியம் பெற்றவர்கள் பலர். காலாதி காலமாக அடியவர்கள் முழுமையான நம்பிக்கையோடு, அம்பிகையைத் தரிசித்து நற்பேறடைந்துள்ளார்கள். அடியார்கள் அனுதினமும் உயிரைக் கையில் பிடித்த வண்ணம் அலை கடலில் நீந்தி, அருட்கடலை நாடி வந்து நெக்குருகி நின்று, நினைந்து அம்பிகையை வழிபடும் பக்தியே பக்தி.

அம்பிகை மீது நயினைப் புலவர்கள் பலர் பாமாலை பாடியுள்ளார்கள். அவ்வாறு பாடிய புலவர்களில் குறிப்பிடக்கூடியவர் அமரத்துவம் அடைந்த நயினை வரகவி நாகமணிப்புலவராவார்.

*'' பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும்*
*பேணலால் அன்னை பெற்றிடுவோர்*
*உற்றதாலன்னை விரும்பிய அனைத்தும்*
*உதவலாலன்னை எக்கலையும்*
*சொற்றதாலன்னை உலகொடு வாழும்*
*தொழுதலாலன்னை யென்றென்றும்*
*பற்றதாங் கருணை பொழிதலாலன்னை*
*பராபரை நாகபூஷணியாள்''*

என்பது அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் மீது அவர் பாடிய பாடல்களில் ஒன்றாகும்.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே, பழமையும், தொண்மையும் பெற்ற ஆலயமாக ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் விளங்குகின்றது. பெருமையும், மகிமையும் கொண்டது. நாகபூஷணி அம்மனின் மூல விக்கிரகம் பூர்வீகமான பழமை மிகுந்த சிறப்பினைக் கொண்டது. ஆன்மகோடிகளுக்கு அருள் பிரவாகத்தையும், அனுபூதியையும் அருளவல்ல தனித்துவம் கொண்டது. இம்மூலவிக்கிரகத்தின் அமைப்பும், அற்புதமும் உலகிலே வேறெந்தத் திருத்தலங்களுக்கும் இல்லை எனலாம். மூலஸ்தானத்தில் அம்பாள் உருவம் போல விளங்குவது பழைய நாகப்பிரதிஷ்டை என்பது ஆராய்ச்சியாளர்களின் கூற்றாகும். இதற்குப் பின்புறத்தில் ஐந்து தலை நாகப்பிரதிஷ்டை காணப்படுகின்றது. இது மிகவும் பழைமையானது. தூய்மையான நாகவழிபாடு இவ்வாலயத்தில் மிகவும் பழமையான காலத்திலிருந்தே நடைபெற்று வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

தூய்மையான நாகவழிபாடு இவ்வாலயத்தில் பண்டைக் காலத்திலிருந்தே நடைபெற்று வந்தமைக்கான சரித்திர வரலாற்றுடன் கூடிய நிகழ்வு ஒன்றினை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக அமையும். முன்பு நாகம் ஒன்று நயினாதீவுக்கு வடக்கேயுள்ள அனலைதீவின் புளியந்தீவிலிருந்து நாள்தோறும் பூக்கள்கொண்டு வந்து நயினாதீவிலுள்ள அம்பிகையை வழிபட்டு வந்தது.ஒருநாள் கொண்டு வரும் வழியில் ஒரு கருடன் நாகத்தை வழிமறித்து, அதனைக் கொல்ல நினைத்தது. நாகம் அச்சமடைந்து, கடல் நடுவே இருந்த கல் ஒன்றினைச் சுற்றிகொண்டது. கருடனும் மற்றொரு கல்லில் அமர்ந்திருந்து அதனைக் கொல்லச் சந்தர்ப்பம் பார்த்திருந்தது. வணிகன் ஒருவன் மரக்கலம் ஒன்றிலே பண்டங்களை கடல் வழியாக ஏற்றிவரும் பொழுது இக்காட்சியைக் கண்டான்.பாம்பின் மீது இரக்கங் கொண்ட வணிகன் நாகத்தைக் கொல்ல வேண்டாம் என்று கருடனை வேண்டினான். அதற்குக் கருடன் நீ உனது செல்வம் அனைத்தையும் கொண்டு வந்து நாகேஸ்வரி அம்மனுக்குக் கோயில் ஒன்றைக் கட்டுவதாய் உறுதியளித்தால் நான் இந்த நாகத்தைக் கொல்லாது விட்டுவிடுவேன் என்றது. வணிகனும் அவ்வாறே உறுதியளிக்க, கருடன் நாகத்தைக் கொல்லாது விலகியது. வணிகனும் தனது நாட்டுக்குச் சென்று நிகழ்ந்தவற்றையெல்லாம் தனது மனைவிக்குச் சொன்னான். அவர்கள் இருவரது கண்களைக் கூசும்படியான ஒரு தெய்வீக ஒளி ஒன்று தோன்றியது. நாகரத்தினக் கற்களிலிருந்து தோன்றிய ஒளி என்பதைக் கண்டு, அம்பிகையின் நல்லருளை எண்ணி ஆச்சரியப்பட்டு, நயினாதீவுக்கு வந்து நாகபூஷணிக்கு அழகிய ஆலயம் ஒன்றினைக் கட்டினார்கள். மேற்கூறப்பட்ட கதைக்குச் சான்றாக நயினாதீவின் வடகடலில் ''பாம்பு சுற்றியகல்'' ''கருடனிருந்த கல்'' என இரண்டு கற்கள் காணப்படுகின்றன. அடியார்கள் இக்கற்களை வழிபட்டு சரித்திர சான்றுகளை நினைவுபடுத்துகின்றனர். பதினோராம் திருவிழாவன்று இவ்விருகற்களுக்குப் பூசைகளும், வழிபாடுகளும் இடம் பெற்று வருகின்றது. இந்த வழிபாடுகளின்போது கருடப் பறவை வானத்தில் வட்டமிடுவதாகவும் அடியார்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். நாகபூசையும், கருட பூசையும் அடியார்களை மெய்சிலிர்க்க வைப்பனவாகும்.

அழகுக்கொருவரும் ஒவ்வாதவல்லியாக, விளங்குகின்ற நாகபூஷணி அம்பாள் ஐந்துதலை நாகத்தில் பவனி வருகின்ற காட்சி தேவலோகக்காட்சி, மஞ்சத்தில் எழுந்தருளி பவனி வருகின்ற காட்சி அடியார்களை மெய்சிலிர்க்க வைக்கும்.



**நயினை நாக. குமாரசூரியர்**

கைலாசவாகனத்தில் பவனி வருகின்ற காட்சியைக் காணக் கண்கள் கோடி வேண்டும். தேரில் உலா வரும் காட்சி காணும் அடியார்கள் பேறுபெற்றவர்கள். கண்ணீரைச் சொரிய வைக்கின்ற இவ்வற்புதமான காட்சிகள் அடியார்களுக்கு உணர்வுபூர்வமானவையாகும்.

ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் வருடாந்த மகோற்சவம் காண ஆண்டுதோறும் அம்பிகையைத் தரிசிக்க வருகின்ற அடியார்களுக்கு அமுது வழங்கும் பெரும் பணியைச் சிறந்த முறையில் மேற்கொண்டுவரும் ' அமுதசுரபி' அன்னதான சபையினரின் பணி போற்றுதற்குரிய ஒன்றாகும். ✱

## சுந்தரச் சித்திரக் கொடியேற்ற மாமின்று

பல்லவி
பெண்ணே தென்னம் தோப்பினிலே வண்ணக்கிளி
சின்னக்குயிலுக்கு சொன்ன செய்தி சொல்வேன்

அனுபல்லவி
அன்னை நாகபூஷணிக் குநயி னையிலே
இன்றுபடம் வரைந்தகொடியேறு தென்று


சரணம்
அந்தணர் வாழ்த்த அமரர் போற்ற
செந்நெறி வளர்க்க சேவைகள் புரியும்
பந்தமில் விரதிகள்தோத் திரம்பாட மறையவர்
மந்திரமோ தமங்களவாத்தியம்மணிகள் ஒலிக்க
சுந்தரச் சித்திரக் கொடியேற்ற மாமின்று

பா.பாலச்சந்திரன்
மயிலணி, சுன்னாகம்.

## தாயே எம் துயகரற்று....!

பாம்பணை மீதினிலே
பஞ்சணை கொள்பவளே
நயினையின் நாயகியே
நோய்ப்பிணி தீர்ப்பவளே!
கொடியேறும் உனைக்காண
பலகோடி பக்தர்கள்
படகேறி தலம் வந்தோம்
தாயே எம் துயகரற்று....!

ம.நிரோஷனா
தென்கோப்பாய்.



ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமஹ

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் வைகாசித் திங்கள் 30ஆம் நாள் (13.06.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 07.15 மணி தொடக்கம்08.20 மணிவரை உள்ள மிருகசீரிட நட்சத்திரமும் கடகலக்கினமும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு.திருமதி வ.சுப்பிரமணியம் தம்பதியரின் புதல்வன் **சுரேஸ்** அவர்களுக்கும்



திரு.திருமதி இராஜதுரை தம்பதியரின் புதல்வி **சுபஜோதி** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு ''வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தான மாரி அம்மன் திருமண மண்டபத்தில்'' திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றாம்.

வரவேற்பு உபசாரம்:- மணமகன் இல்லத்தில் (14.06.2010) திங்கட்கிழமை
மணமகள் இல்லத்தில்:- (16.06.2010) புதன்கிழமை
இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே நாடும்

திரு.திருமதி சு.இன்பராசா (குடும்பத்தினர்)
நிரந்தர முகவரி: கண்ணகி அம்மன் கோயிலடி, வசாவிளான்.
த.முகவரி:அந்தோனியார் வீதி, மாதகல்.

(இருவீட்டார் அழைப்பு)

திரு.திருமதி இ.பாலச்சந்திரன் (குடும்பத்தினர்)
திரு.திருமதி இ.ஜெகராஜ் (புமம்)
தேவநாதன் குடும்பத்தினர், அண்ணாமார், அண்ணிமார்.
பாலஜோதி இல்லம்
இல.26/27. பூநாறி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு கொக்குவில், யாழ்ப்பாணம்.

[99340]

## நாடகமும் அரங்கியலும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 12

'மக்கள் களரி' என்னும் அமைப்பினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் நாடகமும் அரங்கியலும் மற்றும் சிறுவர் நாடகம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வொன்று நடத்தப்படவுள்ளது.

இதனடிப்படையில் நாளை மறுதினம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை தென்மராட்சிக் கல்வி வலயத்துக்கான செயலமர்வு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வடமராட்சி கல்வி வலயத்துக்கான செயலமர்வு புலோலி மெதடிஸ்தமிஷன் பாடசாலையிலும் நடத்தப்படவுள்ளது.

ஜூலை மாதம் 5 ஆம் திகதி திங்கட்கிழமை தீவக கல்வி வலயத்துக்கான செயல்மர்வு வேலணை மத்திய கல்லூரியிலும், 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வலிகாமம் வலயத்தக்கான செயலமர்வு இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

யாழ்.கல்வி வலயத்துக்கான செயலமர்வு ஜூலை மாதம் 7 ஆம் திகதி புதன்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே மேற்படி செயலமர்வுகளில் பங்குபற்றும் ஆசிரியர்கள் ''பியாமா' உடை மற்றும் மதிய உணவு என்பவற்றை எடுத்துவருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(50-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்ற ஆயிரம் பேர் மட்டு., திருமலையில் கைது!

கொழும்பு, ஜூன்12

மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற சுமார் ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என மின்சார சபைத் தலைவர் சந்தியா அமரபால தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, திருகோணமலை, மூதூர் ஆகிய பிரதேசங்களில் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையின் போதே இந்த ஆயிரம் பேரும் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாருடன் இணைந்து மின்சார சபைப் பிரிவினர் இந்த சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று மின்சார சபைத் தலைவர் மேலும் கூறினார். (ளி)

## அம்பாறை நிருபர் ஒன்றியக் கூட்டம்

அம்பாறை, ஜூன் 12

அம்பாறை மாவட்ட நிருபர்கள் ஒன்றியத்தின் விசேட நிர்வாக சபைக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு அட்டாளைச்சேனைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட நிருபர்கள் ஒன்றியத்தின் தவிசாளர் எம்.ஏ. தாஜஹான் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் அட்டாளைச் சேனைப் பிரதேசசபை உறுப்பினர் ஏ.எல். அப்துல்லத்தீப் அதிதியாகக் கலந்து கொள்வார்.

கூட்டத்தில் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளது. அதிலும் குறிப்பாக இண்டர் நியூஸ் நிறுவனம் நடத்தும் வதிவிட கருத்தரங்குகள் செயலமர்வுகளில் பெரும்பாலான முழுநேர ஊடகவியலாளர்கள் புறக்கணிக்கப்படுவது பற்றியும் ஆராயப்படவுள்ளது. (ளி)

## கிழக்கு மாகாணத்தில் டெங்கை கட்டுப்படுத்த உள்ளூராட்சித் திணைக்களம் நடவடிக்கை!

மட்டக்களப்பு, ஜூன் 12

கிழக்கு மாகாணத்தில் டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்களின் முழுமையான பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த 10 வருடங்களாக இலங்கையில் பொதுச் சுகாதாரத்திற்கு பாரிய அச்சுறுத்தலாக விளங்கிவரும் டெங்குக் காய்ச்சல் பரவுவதைத் தடுப்பதற்காக ஜனாதிபதியால் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கியதாக விசேட செயலணியொன்று நிறுவப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்புடன் டெங்குநோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன் ஓர் அங்கமாக திண்மக் கழிவகற்றல் முறையைச் சீர்செய்வதன் மூலமாக டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அழிப்பதுடன், உள்ளூராட்சி மன்றப்பிரிவுகளில் முறையான வடிகாலமைப்புத் திட்டங்களை முன்னெடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, டெங்கு நோய் பெருகும் விதத்தில் நீர்தேங்கி நிற்பதைத் தவிர்க்கும் வகையில் வடிகான்களை சுத்தம் செய்வதற்கும் உள்ளூராட்சி மன்றங்கள் மூலமாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள் ளன.

கிழக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைவாக உள்ளூராட்சிமன்றப் பிரிவுகளில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (ளி)

## ஏறாவூர்ப்பற்றுப் பாடசாலைகளில் ஆங்கில மொழியை மேம்படுத்தத் திட்டம்

மட்டக்களப்பு, ஜூன் 12

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று - 02 கல்விக் கோட்டப் பாடசாலைகளில் இருந்து அடுத்த ஆண்டு ஜீ.சீ.ஈ. உயர்தரப்பரீட்டைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்வதற்கான விசேட வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உயர்த்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை பல்கலைக்கழங்களுக்கு அனுமதிப்பதற்காக ஆங்கிலப் பாடத்தில் பெறும் புள்ளிகளையும் கவனத்தில் எடுப்பதற்கு கல்வியமைச்சு மேற்கொண்டுள்ள தீர்மானத்தைக் கருத்திற்கொண்டு இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக கோட்டக் கல்விப்பணிப்பாளர் அ.சுகுமாரன் தெரிவித்தார்.

வந்தாறுமூலை விஷ்ணு மகாவித்தியாலயம், களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலம் மற்றும் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளையும் சேர்ந்த உயர்வகுப்பு மாணவர்களுக்காக விசேட ஆங்கில மொழிவிருத்திப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


100 மணித்தியாலங்களைக் கொண்ட இந்த வகுப்புக்களின் மூலமாக மாணவர்கள் உயர்தர ஆங்கில மொழிப்பரீட்சைக்கு விடையளிக்கும் விதம் தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

உலக தரிசனம் எனப்படும் அரச சார்பற்ற தனியார் நிறுவனமொன்றின் ஒத்துழைப்புடன் இந்த மொழிவிருத்திப் பயிற்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக், கோட்டக் கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டார். (ளி)

## இலங்கை வங்கியின் நகை அடகு பிடிக்கும் நிலையம் மருதமுனையில் விஸ்தரிப்பு

அம்பாறை, ஜூன்12

மருதமுனையில் இயங்கிவரும் இலங்கை வங்கியின் நகை அடகு பிடிக்கும் நிலையத்தை சகலவசதிகளும் கொண்ட வங்கிக் கிளையாக தரமுயர்த்தும் நோக்கோடு பல நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என முகாமையாளர் எஸ்.ஏ. அப்துல் ஹப்பார் தெரிவித்தார்.




இப்போது நடைமுறைக்கணக்கு, சாதாரண சேமிப்பு மற்றும் சிறுவர் சேமிப்பு, வட்டியில்லா இஸ்லாமிய சேமிப்பு மற்றும் நடைமுறைக்கணக்கு என்பன துரிதமாக ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என முகாமையாளர் ஹப்பார் தெரிவித்தார்.

மேலும் உள்நாட்டு, வெளிநாட்டு காசேலைகளை உடனுக்குடன் பணமாக மாற்றிக் கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார். (ளி)

## கல்லடிப் பால வேலை மீண்டும் ஆரம்பமானது

மட்டக்களப்பு, ஜூன் 12

கல்லடிப் பால நிர்மாண வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பாலத்துக்கான அடிக்கல் 2008 ஆண்டு மார்ச் மாதம் 11ஆம் திகதி நாட்டப்பட்டு, வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், ஒரு சில மாதங்களில் வேலைகள் இடைநிறுத்தப்பட்டன.

மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தேசிய நல்லிணக்க, இன ஒருமைப் பாட்டு அமைச்சராக இருந்த வேளையில் ஜனா திபதியுடனும், நெடுஞ்சாலைகள் அமைச்சருடனும் நடத்திய பேச்சுகளை அடுத்து தற்போது, வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கல்லடிப் பாலத்தை உள்ளடக்கிய 99 கிலோ மீற்றர் நீளமான அக்கரைப்பற்று - திருக்கொண்டியாமடு வீதி 390 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்படுகின்றது.

இதனை 3 வருடங்களுக்குள் முடிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், ஏற்கனவே 2 வருடங்கள் கழிந்துவிட்டன. கல்லடிப் பாலமும், தாழங்குடா தொடக்கம் மயிலம்பாவெளி வரைக்குமான சுமார் 10 மைல் நீளமான வீதியும், எஞ்சியுள்ளன. எனினும் வேலைகள் தொடர்ந்து நடை பெற்றுவருகின்றன. (ளி)

## ஹப்புகஸ்தன்ன தோட்டத் தொழிலாளர்கள் மேற்கொண்ட பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

நுவரெலியா, ஜூன் 12

மஸ்கெலியா, ஹப்புகஸ்தன்ன தோட்டத் தொழிலாளர்கள் கடந்த 22 நாட்களாக மேற்கொண்டுவந்த பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர்களில் ஒருவரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான முரளிரகுநாதன் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாகவே இந்த முடிவு எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.தொ.காவின் ஹற்றன் பிரதிநிதிகளும், தோட்ட முகாமையாளரும், தோட்டத் தொழிலாளர் பிரதிநிதிகளும் நேற்று முன்தினம் ஹற்றன் தொழில் ஆணையாளர் முன்னிலையில் ஆஜராகியிருந்தனர்.

இதன்போது தொழிலாளர்களின் கோரிக்கைக்கமைய 405 ரூபா சம்பளத்தை வழங்குவதற்கு தோட்ட முகாமையாளர் இணக்கம் தெரிவித்தார்.

இதனையடுத்து தொழிலாளர்கள் தமது பகிஷ்கரிப்பைக் கைவிட்டு நேற்று முன்தினம் வேலைக்குத் திரும்பினர்.

இதேவேளை, பறிக்கப்படும் கொழுந்தின் நிறையை நிர்ணயிப்பதற்கான பேச்சு ஒன்று எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது - என மேலும் தெரிவிக்கப்பட்டது. (ளி)

## ஹாரிஸ்பத்துவவில் டெங்கு அபாயம்

கொழும்பு, ஜூன் 12

ஹாரிஸ்பத்துவவில் மீண்டும் டெங்கு நோய் அபாயம் தலைதூக்கியுள்ளது.

டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவாக பொதுமக்கள் சூழலை வைத்திருக்கின்றமையாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே விடுக்கப்பட்ட பணிப்புரைக்கமைய சுற்றுச்சூழலைத் தூய்மையாக வைத்திருக்காதோருக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. கடந்த வருடத்தில் அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர் கள் இப்பிரதேசத்திலேயே இனங்காணப்பட்டனர்.

சுகாதார ஆலோசனைகளை மக்கள் பின்பற் றாமையே இதற்குக் காரணம். எனவே, சூழலை அசுத்தமாக வைத்திருப்போர் எவராயினும் இனிமேல் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் - என ஹாரிஸ்பத்துவ பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் பீ.ஜீ.என். வீரக்கொடி தெரிவித்தார். (ளி)




## அக்குறணை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சட்டவிரோத வர்த்தக நிலையங்களை அகற்ற முடிவு

கொழும்பு, ஜூன் 12

அக்குறணை பிரதேசசபை அதன் எல்லைக்குள் அமைந்துள்ள சட்டவிரோத வியாபார நிலையங்கள் மற்றும் நடைபாதைக் கடைகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக அக்குறணை நகர் முதல் அளவத்துகொட நகர்வரை உள்ள சட்ட விரோத வியாபார நிலையங்கள் பலரின் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் அண்மையில் அகற்றப்பட்டன.

சட்டவிரோத வியாபார நிலையங்கள் மற்றும் விளம்பரப் பலகைகளால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய பல்வேறு அசௌகரியங்களையும் மற்றும் வீதி விபத்துகளையும் கருத்தில்கொண்டே கட்டம் கட்டமாக இவைகள் அகற்றப்பட்டு வருகின்றன - எனப் பிரதேச சபை அதிகாரிகள் தெரிவித்தனர். (ளி)

## கண்டி, மாத்தளைப் பிரதேசங்களில் கள்ளநோட்டுகளுடன் இருவர் கைது

கண்டி, ஜூன் 12

கண்டி,மாத்தளைப் பிரதேசங்களில் போலி நாணயத்தாள்களை வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து போலியாக அச்சடிக்கப்பட்ட 12 ஆயிரம் ரூபா நாணயத் தாள்களும் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட இருவரும் 24-31 வயது டையவர்கள் என்றும், இவர்கள் கம்பளை மற்றும் அளவத்து கொட பிரதேசவாசிகள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அளவத்துகொட வாசியிடம் போலி நாணயத்தாள்கள் இருக்கின்றன என பொலிஸாருக் குக் கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் அவர் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து மூன்று போலி ஆயிரம் ரூபா நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டன.

அவரிடம் மேற்கொண்ட தீவிர விசாரணையின் பின் மற்றவர் ஒன்பது நாணயத்தாள்களுடன் கம்பளையில் கைது செய்யப்பட்டார். விசாரணைகள் நடைபெற்று வருகின்றன எனப் பொலிஸார் மேலும் கூறினர். (ளி)

## மஸ்கெலியா - சாமிமலை பிரதான வீதி புனரமைப்பு

நுவரெலியா, ஜூன் 12

கடந்த பல வருடங்களாக புனரைமைக்கப்படாமல் இருந்த மஸ்கெலியா - சாமிமலை பிரதான வீதியைப் புனரமைக் கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நோர்வூட் பெருந்தெருக்கள் அதிகார சபையால் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகளில் இதுவரை சுமார் நான்கு கிலோமீற்றர் வீதி செப்பனிடப்பட்டுள்ளது. தொடர்ந்து வேலைகள் இடம்பெற்று வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. இன்னும் இரண்டுவாரங்களில் நெடுஞ்சாலையின் புனரமைப்புப் பணிகள் நிறைவடையும் என நோர்வூட் அதிகாரசபை யின் பொறியியலாளர் தெரிவித்தார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண மட்டத் தமிழ் மொழித்தின போட்டிகளில் வெற்றியீட்டியோர் விவரம்

வலி.வடக்கு,ஜூன் 12

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் வடமாகாண மாவட்ட கல்வி வலயங்களுக்கு இடையே நடைபெற்ற தமிழ் திறன் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

பிரிவு 1 பாவோதல்: இ.கிருஷிகா (சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி - மன்னார்), கு.நிர்மியா (சைவப்பிரகாச மகளிர் கல்லூரி -வவுனியா தெற்கு), பி.எடின்சியா (யோகபுரம் மகாவித்தியாலயம்- முல்லைத்தீவு).

பிரிவு 2: ர.யதுசா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை -யாழ்ப்பாணம்), கி.ஜெனிபர் (சென்.மேரிஸ் பெண்கள் வித்தியாலயம் - மன்னார்), தெ.மிதிலை மாறன் (புதுக்குளம் மகா வித்தியாலயம் - வவுனியா வடக்கு).

பிரிவு 3: நெ.அனற்றிசானா (அடம்பன் மகாவித்தியாலயம் - மன்னார்), உ.ரசிந்தா (கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் - யாழ்ப்பாணம்), சி.டன்சினி (கிளிநொச்சி இந்துக் கல்லூரி).

பிரிவு 4: ம.சைலாதேவி (ஸ்ரீ நாகராஜா வித்தியாலயம் - வவுனியா தெற்கு), சி.யதார்த்தனா (புனிதசவேரியார் பெண்கள் கல்லூரி- மன்னார்), நி.சாமந்தி (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் - யாழ்ப்பாணம்)

பிரிவு 5: செறின் சியாமளா (சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி -மன்னார்), சு.வத்சலா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி - யாழ்ப்பாணம்) செ.குணவதி (கல்மடு மகாவித்தியாலயம் -வவுனியா வடக்கு).

**பிரிவு 1 இசையும் அசைவும்**

கோ.லஜனிகா (விபுலானந்தாக் கல்லூரி - வவுனியா தெற்கு), இ.கிலானி (கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை - மன்னார்), ம.ரம்மியா (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி - யாழ்ப்பாணம்)

**பிரிவு 2 இசை - தனி**

வி.வத்சாஸ்கிதசர்மா (யாழ்.இந்துக் கல்லூரி -யாழ்ப்பாணம்), ஜீ.ஜெதுசன் (தமிழ் மத்திய மகா வித்தியாலயம் - வவுனியா தெற்கு), பீ.மேரிடிலக்சினி (புனித சவேரியார் பெண்கள் கல்லூரி - மன்னார்)

பிரிவு 3: ந.சிபிஷா (இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயம் - வவுனியா தெற்கு), தி.வருணியா (இந்து மகளிர் கல்லூரி -யாழ்ப்பாணம்), அ.ஆன் அஜந்திகா (புனித ஆனாள் மத்திய மகாவித்தியாலயம் - மன்னார்).

பிரிவு 4: அ.சண்முகப் பிரியன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி -யாழ்ப்பாணம்), ஜெ. ஜல்சி லெம்பேட் (புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயம் - மன்னார்), கே.ஜீவலதா (புதுக்குளம் மகாவித்தியாலயம் -வவுனியா வடக்கு).

பிரிவு 5: க.வர்ஜீகன்(செங்குந்தா இந்துக் கல்லூரி-யாழ்ப்பாணம்), இ.அனுஷா (பெரிய கோமரசன் குளம் மகாவித்தியாலயம் - வவுனியா தெற்கு), தாவீது நிர்மல கென்றீசன் (முழங்காலில் மகா வித்தியாலயம் - கிளிநொச்சி) (209-86)

(வளரும்)


**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 654 திகதி 10-06-2010

வெற்றி எண்கள்

**05 11 29 57 X**

ஜக்பொட் பரிசு ரூ. 22,302,280/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 22,302,280/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 2,000/= | 22,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 382 | 1,000/= | 382,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 583 | 1,000/= | 583,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14710 | 60/= | 882,600/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6824 | 40/= | 272,960/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 171332 | 20/= | 3,426,640/= |
| | | மொத்தம் ரூ. | 6,369,200/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| நுவரேலியா | 700080695-0-20 |
| யாழ்ப்பாணம் | 700080663-0-46 |
| அம்பாறை | 700082418-0-00 |
| வவுனியா | 700083314-0-37 |
| மட்டக்களப்பு | 700088960-0-46 |
| மொணராகலை | 700080179-0-27 |
| அம்பாந்தோட்டை | 700085632-0-18 |
| மாத்தறை | 700081834-0-02 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,769,200/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 22,766,350/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஜூன் 14 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்


## சமய சந்திகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 12

ஆனைக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமைகொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திரு விழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (201)

* * *

நல்லூர், ஜூன் 12

புங்குடுதீவு, பெரியபுலம் வீரபத்திர விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும்.

நாளை ஞாயிற் றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தத்திருவிழா இடம்பெறும். (204-111)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 12

நல்லூர் மூத்த விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறு நாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 12

இருபாலை, கட்டப்பிராய் முத்து மாரியம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திரு விழாவும் மறுநாள் சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசலிங்கம் நவமணி



யாழ்ப்பாணம், கைலாசபிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான திருமதி இராசலிங்கம் நவமணி 09.06.2010 அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-இராசம்மா தம்பதியரின் மகளும் இராசலிங்கத்தின் (ஓய்வூதியர் - சுகாதாரத் திணைக்களம், கனடா) அன்பு மனைவியும் அமுதாம்பிகை (கனடா), யோகன் (கனடா), துளசி (அவுஸ்திரேலியா), சீதா (வவுனியா விபுலானந்தாக் கல்லூரி), சிவகுமார் (கனடா), கௌரி(கனடா) ஆகியோரின் அன்புத் தயாயும் விபுலாநந்தா (கனடா), வெலித்தா (கனடா), ஜெயந்திரா (அவுஸ்திரேலியா), பரந்தாமன் (வவுனியா மத்திய மகா வித்தியாலயம்), நிமால் (ரஞ்சன் - கனடா), வானதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் லக்மன், நிமலன், ஜனா, யசிந்தா, கரன், கஸ்தூரி, ரஜீவ்கரன், அபிசாயினி, நிலான், நிசாந், சுருதி, சுரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், நாகராசா மற்றும் சண்முகராசா நாகேஸ்வரி, மகேஸ்வரி, ஞானாம்பிகை, சந்திரா, ஜெயலட்சுமி, ஆனந்த நடேசன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடா ரொரன்ரோவில் இன்று (12.06.2010) சனிக்கிழமை நடை பெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சீதா பரந்தாமன்,
வவுனியா. (99335) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை இராசேந்திரம்



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டன் Sutlon ஐ வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசேந்திரம் 04.06.2010 வெள்ளிக்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் அல்வாயைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் பொன்னாச்சி தம்பதியரின் மருமகனும், புவனேஸ்வரியின் (லண்டன்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற குலசேகரத்தின் (இலங்கை) அன்புச் சகோதரரும், சந்திரமோகன் (லண்டன்), ரவிச்சந்திரன் (லண்டன்), சந்திரகௌரி (பிரான்ஸ்), அரவிந்தன் (லண்டன்), பத்மினி (லண்டன்), பாலச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாளினி (லண்டன்), கிருத்திகா (லண்டன்), அழகரட்ணம் (பிரான்ஸ்), விஜயசொரூபி (லண்டன்), லிங்கநாதன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், நிரோஜன், சாணுகா, ருபிசா, அபிலாஷ், ஜஸ்பியா, சோபி, நிவ்ஜோ, டினுசா, தரணியா, டினுஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் தகனக்கிரியைகள் நாளை (13.06.2010) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு North East Surrey Crematoriam Lower Morden Lane, Morden Surrey Sm4 4Nu என்ற இடத்தில் நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: ரவிச்சந்திரன்,
பிரித்தானியா.
+447852286602

(99348)

தகவல்:
**மனைவி, மக்கள், மருமக்கள்** (லண்டன்).

## மரண அறிவித்தல்



### வீரசிங்கம் சிவானந்தம் (டோயா)

மலேசியாவை பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வதிவிடமாகவும், தற்போது வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய வீரசிங்கம் சிவானந்தம் 09.06.2010 புதன்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற Dr. வீரசிங்கம் இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், தனேஷ்வரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவகுரு, அன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரி, சத்தியானந்தன், பரமானந்தன், காலஞ்சென்ற பூலேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், சிவபிரியன், சிவப்பிரபா, சிவோட்ஜனன், சிவதர்ஷினியின் அன்புத் தந்தையும் துஷ்யந்தி, கலாஜினி, கீதனா, இளங்குமரன் ஆகியோரின் மாமனும், கோகுலன், காயத்திரி, லக்ஷன், லாவன்யா, சனந்தன், சாதனா, விஷ்னு, சங்கரன், ஏபிரகாம் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று சனிக்கிழமை பொறளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை வைக்கப்பட்டு, நாளை ஞாயிற்றுக்கிழமை (13.06.2010) இறுதிக்கிரியைகள் நடைபெற்று, முற்பகல் 10 மணியளவில் பொறளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**தகவல் : குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களின் திருப்தி

இரண்டாம் உலக யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவராகிய ஜெனரல் ஐஸன்ஹோவர் சொர்க்கத்திற்குப் போனார். ஒருநாள் அவர் கடவுளிடம் போய், '' எனக்கு நகரத்திற்குப் போய்ப் பார்க்க வேண்டும்'' என்றார். கடவுள் ஏனென்று கேட்டார். '' இல்லை ஹிட்லருக்கு அங்கே என்ன விதமான துன்பங்கள் தரப்படுகின்றன என்று பார்க்க வேண்டும்'' என்றார். எனவே நரகரத்திற்கான நுழைவுச்சீட்டை வாங்கிக் கொண்டு போனார். அங்கிருந்து




காவலாளிகளிடம், அதாவது அங்கிருந்த பேய்களிடம், '' ஹிட்லரை எங்கே துன்புறுத்துகிறார்கள்?'' என்று கேட்டார். அழைத்துக் கொண்டு போனார்கள். அங்கே போன போது ஒரு செப்டிக் டேங்கில் கழுத்துவரை மலம் இருக்க அங்கே அடால்ப் ஹிட்லர் முகத்தில் ஒரு புன்னகையோடு நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தார். முதலில் அந்த மலத்தைத்தான் ஐஸன் ஹோவர் பார்த்தார். உடனே மிகவும் சந்தோஷமாக '' உனக்கு இது வேண்டும்'' என்றபடியே நிமிர்ந்தார். ஆனால் அடால்ஃப் ஹிட்லர் சந்தோஷமாகச் சிரித்துக் கொண்டு இருந்தார். ' அட வெட்கமில்லாதவனே, இப்படி ஒரு அசிங்கத்தில் நின்று கொண்ட ஏன் சிரிக்கிறாய்?'' என்று கேட்ட போது ஹிட்லர் இன்னும் உரக்கச் சிரித்துவிட்டு சொன்னார். ''நான் முசோலினியின் தோள்கள் மீது நின்று கொண்டிருக்கிறேன்'' என்று. எனவே சுகமோ,சுகமின்மையோ அவையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடியவைதான், தெரியுமா?

*(சத்குரு ஜக்கி வாசுதேவ்)*

# நமது வீழ்ச்சிக்கு எது காரணம்?

ஒருநாள், ஓர் எருது வயலில் மேய்ந்து கொண்டிருந்தது. நீண்ட வாலையுடைய பறவை ஒன்று அந்த எருதின் உடலில் இருந்த உண்ணிகளைக் கொத்தி எடுத்துக் கொண்டிருந்தது. அவை ஒன்றுக்குகொன்று பழக்கமானவை. அவர்கள் நண்பர்கள் போன்றவர்கள். எனவே இது



தொடர்ந்து கொண்டிருந்தது. அப்போது, அந்தப் பறவை, விட்டு நினைவுகளில் மூழ்கிச் சொன்னது, '' நான் இளமையாக இருந்தபோது, என்னால் பறந்துபோய், அங்கிருந்து பெரிய மரத்தில் உச்சிக்கிளையில் அமர முடிந்தது, ஆனால் இப்போது நான் முதல் கிளையைக் கூட அடைய முடியாது'' எருது அலட்சியமாய் சொல்லியது, '' ஓ! என்ன பிரச்சினை? என்னுடைய சாணத்தைச் சாப்பிடு, உச்சிக் கிளைக்குப் போவதற்குத் தேவையான ஊட்டச்சத்து அனைத்தையும் இது கொடுக்கும்'' என்று பறவை சொன்னது. '' உண்மையாகவா? உங்கள் சாணத்தைச் சாப்பிடுவதால் மரத்தின் உச்சிக்கிளையை நான் அடைவேன் என்று சொல்கிறீர்களா?'' '' ஆம். முயற்சி செய்து பாருங்கள்'' என்று எருது பதிலளித்தது. எனவே, பறவை தயக்கத்தோடு சிறிது சாணத்தை உண்டது. அன்றே முதல் கிளைவரை பறந்தது. மேலும் மேலும் சாணத்தை உண்ணத் துவங்கியது. ஒரு பதினைந்து நாள்களுக்குள் உச்சிக் கிளையை அடைந்து அங்கே அமர்ந்தது. இந்தச் சாணத்தைச் சாப்பிட்டு, உச்சிக்கிளையில் வந்து அமர முடிவதைக் குறித்து அந்தப் பறவை மிகவும் சிலிப்படைந்தது. பால்கனில் அமர்ந்திருந்த விவசாயி, மரத்தின் உச்சிக்கிளையில் அமர்ந்திருந்த இந்த கொழுத்த பறவையைப் பார்த்து, அவர் தன் துப்பாக்கியை எடுத்து, அந்தப் பறவையை மரத்திலிருந்து சுட்டு வீழ்த்தினார். இந்தக் கதையின் நீதி என்னவென்றால், எருதின் சாணத்தால் உங்களை உச்சிக்கு கொண்டு செல்ல இயலும். ஆனால் ஒரு போதும் அங்கேயே இருக்கவிடாது. உங்கள் தத்துவங்களால், நீங்கள் எங்கும் சென்றடைய முடியாது. மனதளவில் இதைச் செய்தீர்களேயானால், நீங்கள் மேலும் மேலும் இதைத் தவிர்க்கவே முயற்சித்துக் கொண்டிருக்கிறீர்கள். இதுவே நமது வீழ்ச்சிக்குக் காரணம்.

*(சொன்னவர்: சத்குரு ஜக்கி வாசுதேவ்)*

# லூக்கா கோரிகோவின் வியக்க வைக்கும் எதிர்வு கூறல்கள்!

*(நேற்றைய தொடர்ச்சி)*

ஒரு தடவை பிரான்ஸ் நாட்டின் அரசியான கத்தரின் லூக்கா கோரிகோவை தனது அரச சபைக்கு வரவழைத்திருந்தார். அவரை நோக்கிய அரசி கத்தரின், தனது காதலரான இளவரசர் ஹென்றியைப் பற்றி எதிர்வு கூறலொன்றைத் தெரிவிக்குமாறு கோரினார். அச்சபையில் இளவரசர் ஹென்றியைப் பற்றி லூக்கா கோரிகோ தெரிவித்த எதிர்வு கூறல் கீழ் கண்டவாறு அமைந்திருந்தது.

ஹென்றி அரியணையில் அமர்ந்த முதலாவது ஆண்டிலேயே அரண்மனையில் இரத்தம் சிந்தப்படும். இளவரசர்கள் இருவர் நேரடியாக மோதிக் கொள்வதோடு , அங்கு இளவரசர்களில் ஒருவர் உயிரிழப்பார். ஹென்றி பேரரசராக முடிசூடிக் கொண்டதன் பின்னர் அதேபோன்ற நேரடி மோதலொன்றுக்குச் சென்று அந்த மோதலின் போது தமது இரு கண்களையும் குருடாக்கிக் கொள்வதோடு, தலையில் ஏற்படும் காயங்களின் காரணமாக அவர் துரதிஷ்டவசமான மரணத்தைத் தழுவிக் கொள்வார் என்பதாகும்.

லூக்காவின் அந்த எதிர்வுகூறலில் குறிப்பிடப்பட்டதைப் போன்றே இளவரசர்கள் இருவர் நேருக்கு நேர் மோதிக் கொண்ட நேரடி மோதலானது 1547 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதியன்று அரண்மனையில் நிகழ்ந்தது. அந்த நேரடி மோதலில் ஒரு இளவரசர் மாண்டு போனார். பேரரசர் ஹென்றி சம்பந்தமாக அடுத்து லூக்கா கோரிகோ தெரிவித்திருந்த எதிர்வு கூறல் அவ்விதமே பலித்து விடுமோ என அஞ்சிய மகாராணியான கத்தரின், அன்றைய அளவில் பெரிதும் புகழ் பெற்றிருந்த நொஸ்ரதாமுஸை பாரீஸ் நகருக்கு வரவழைத்து லூக்கா கோரிகோவின் எதிர்வு கூறல் அவ்விதமே நடந்தேறி பேரரசர் உயிரிழப்பாரா? என வினவினார். அதற்கு நொஸ்ரதாமுஸ் மறைமுகமான பதிலையே வழங்கினார். அதாவது பேரரசர் நேரடி மோதலொன்றுக்கு எத்தனிக்காதிருந்தால் அந்த எதிர்வு கூறல் எவ்விதம் நடந்தேற முடியும்? என்பதாகவே நொஸ்ரதாமுஸ் பதிலளித்திருந்தார்.



லூக்கா கோரிகோவின் எதிர்வு கூறலைப்பற்றி மறந்து போன பேரரசர் ஹென்றி 1599 ஆம் ஆண்டின் ஜூலை மாதத்தின் தினமொன்றில் தமது முழு உடலும் பாதுகாக்கப்படும் விதமாகக் கவசம் அணிந்து தலையிலும் இரும்புக் கவசமொன்றை அணிந்து கொண்டு தமது பாதுகாப்புப் பிரிவின் தளபதிக்கு தம்முடன் நேரடி யுத்தமொன்றுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். ஐயோ, பரிதாபம்! அந்த நேரடி மோதலில் பாதுகாப்புப் பிரிவின் தளபதியான '' மொன்ரிகொமரி'' யினால் வீசப்பட்ட ஈட்டி பேரரசர் ஹென்றியின் இரு கண்களையும் ஊடுருவிச் சென்றது. அடுத்து வந்த மாதங்களில் அக் காயங்களின் காரணமாகவே பேரரசர் ஹென்றி மரணத்தைத் தழுவிக் கொண்டார். லூக்கா கோரிகோவின் எதிர்வு கூறல் அவ்விதம் அச்சொட்டாக நிறைவேறியது.

இவற்றிற்கு மேலதிகமாக இத்தாலியில் வன்முறை ''மாபியா'' தலை தூக்கவுள்ளதென்பதாக அந்தளவு மிக நீண்ட காலத்துக்கு முன்னரே லூக்கா கோரிகோவினால் எதிர்வு கூறப்பட்டிருந்தது.

இருபதாம் நூற்றாண்டாகும் போது இத்தாலி முழுவதிலும் ''மாபியா'' என்ற பாதாள உலகக் குழுக்கள் பலம் பெற்றதோடு, ராஜதந்திர அமைவுக்குக் கூட சவால்களை விடுத்து நிற்கும் அளவுக்குப் பிரபலமடைந்த அந்த ''மாபியா'' குழுக்கள், லூக்கா கோரிகோவின் எதிர்வு கூறல்களை யதார்த்தமாக்கிவிடுவதற்குத் திறன் பெற்றிருந்தன.

(வளரும்)

சரா

# எல்லோர் பேச்சையும் கேட்டால் என்ன கதி?

ஒரு கிராமத்தில் ஒருவன், ''புதிய மீன் இங்கு விற்கப்படும்'' என்ற விளம்பரத்துடன் ஒரு மீன் கடையைத் திறந்தான்.

முதல்நாளே ஒருவன்அவன் கடைக்கு வந்து புதிய மீன் இங்கு விற்கப்படும் என்பதைப் படித்துப் பார்த்தான். உடனே அவன் சிரித்து விட்டான். ''புதிய மீனா? ஊசிப் போன மீனை யாராவது எங்காவது விற்பார்களா? ''புதிய'' என்று எழுதியுள்ளதில் என்ன அர்த்தம் உள்ளது?'' என்று கேட்டான். அவன் கூறுவது சரியானது தான் என்று கடைக்காரன் நினைத்தான். அதோடல்லாமல் ''புதிய'' என்கிற வார்த்தை ''ஊசிப்போன'' என்கிற கருத்தை வாடிக்கையாளர்களிடம் ஏற்படுத்தும். உடனே அவன் அந்தப் பெயர்ப் பலகையில் இருந்து ''புதிய'' என்ற வார்த்தையை அழித்துவிட்டான். இப்போது அந்தப் பெயர்ப் பலகையில் ''மீன் இங்கு விற்கப்படும்'' என்று இருந்தது.



அடுத்த நாள் அந்தக் கடைக்கு வந்த ஒரு கிழவி ''மீன் இங்கு விற்கப்படும்'' என்று உரக்கப்படித்தாள். உடனே அவள்,'' நீ இங்கு அல்லாமல் வேறு எங்காவது மீன் விற்கிறாயா?'' என்று கேட்டாள்.

உடனே ''இங்கு'' என்ற வார்த்தை அழிக்கப்பட்டது. இப்போது அந்தப் பலகையில், ''மீன் விற்கப்படும்'' என்று இருந்தது.

மூன்றாவது நாள் வேறொரு வாடிக்கையாளர் கடைக்கு வந்தார்.'' மீன் விற்கப்படும்'' என்பதைப் பார்த்து, ''விற்கப்படும் என்பது ஏன்? யாராவது மீனை சும்மா கொடுப்பார்களா?'' என்று கேட்டார். உடனே ''விற்கப்படும்'' என்ற வார்த்தை அகற்றப்பட்டது. இப்போது ''மீன்'' என்கிற ஒரே ஒரு வார்த்தை மட்டுமே இருந்தது. ஒரு வயதானவன் கடைக்கு வந்தான். கடைக்காரனிடம் ''மீனா?'' ஒரு குருடன் கூட இங்கு மீன் விற்கப்படுகிறது என்பதை தூரத்தில் வரும்போதே அறிந்து கொள்வானே'' என்று கேட்டான். உடனே ''மீன் '' என்னும் வார்த்தையும் அகற்றப்பட்டது. இப்போது அது வெறும் பலகையாக இருந்தது.

அப்போது அந்தப் பக்கமாகப் போனவன் ஒருவன் ''ஏன் இந்த வெறும் பலகை?'' என்று கேட்டான். அதனால் அந்தப் பலகையும் நீக்கப்பட்டது. எனவே ஒவ்வொன்றாக அகற்றியபின் ஒன்றும் இருக்காது. ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு வார்த்தையாக அகற்றப்பட்டது. இப்போது அங்கு மீதமிருப்பது ஒன்றும் இல்லை. வெறும் வெறுமைதான்.

*(ஓஷோவின் சிந்தனைகள்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழைக்காட்டுக் கதைகள்

- கோகுலராகவன் -

## வேலி — கதை ஒன்று

(சென்றவாரத் தொடர்ச்சி)

கோயிற்காசு, சீசு வாங்க அவரது முத்தத்திற்கு யாரும் போக முடியாது. எல்லா அலுவலும் வெளிக் கடவையில்தான். எப்பவும் நல்ல கடியன் நாய் வளர்ப்பார்.

ஆச்சரியம்; ஆனால் உண்மை அவரது ஐந்து பெட்டைகளும் காதலித்து களவாகவே கல்யாணம் செய்து கொண்டார்கள். அதற்குப் பின் அவர் வேலி அடைப்பதேயில்லை.

வீடுகளில் ஒரு விசேடம் என்றால் முழு வேலியும் சுற்றி அடித்தாக வேண்டும். எல்லாம் கிடுகு வேலிதான். அடைத்த பிறகு புதுக்குமரி போலத்தான் வேலி எடுப்பாக இருக்கும். சிறு வயதில் இந்தக் கிடுகுவேலி அடைப்பதில் எமக்குக் கிடைப்பது வரிச்சுக் கோர்ப்பதுதான்.

சிலவேளை வரிச்சை கதியாலைச் சேர்க்காமல் கோர்த்துவிட்டால் வரிச்சை வெளியில் இருந்து இறுக்குபவர் நாரி அடிபட விழ வேண்டும் விழுந்த பின்னர் -

'அட மடப்புழலி மோனே! என்னெண்டடா கோத்தனி'

வேலிக்கு பின்னால்தானே நல்லாய் சிரிக்கலாம்.

இரண்டாம் தரம், மூன்றாம் தரம் இப்படிப் பிழைவிட்டால் குத்தூசிக் கம்பியாலே வேலியால் எட்டி அடிவிழும்.

வேலி மனித வாழ்வின் அச்சுறுக்கை குறித்து நிற்கும் ஒரு முக்கிய காரணி.

(வேலியைப் புடுங்கிவிட்டு



பகுதி - 5

குளித்தவர்களும் நாங்கள் தான்)

'வேலி அம்பலம் படலை சிதம்பரம்' என்பது எல்லா ஊரிலும் சொல்லும் பழமொழி. (Folk Lore)

'ஒரு படலை கட்டிப்போடத் தெரியாது. ஒரு பனையோலை மிதிக்கத் தெரியாது'

சின்னதம்பி மாமா தன் மூத்த மகள் இந்திரா தன் மச்சானுடன் ஓடியபின்னர் தனது தமக்கையின் மகளுக்கு கொடுத்த தகுதிச் சான்றிதழ்.

மதில், இரும்புகேற் வந்த பின் இந்தத் தகுதி தேவையில்லாமல் போய்விட்டது. (இன்னும் சொல்வேன்)

## கனகரும் சாங்கதியும்

(எண் சீர்க் கழிநெடிலடி விருத்தம்)



பொலிகையூர் பொன்.சுகந்தன்

வண்டியொன்று விரைந்துவர ஏறிக்கொண்டார்
வாகனத்தின் வேகமது கூடிக் கொள்ள
வண்டியுள்ளே நெரிசலாலே சரிந்த கனகர்
விழப்போன வேளையில் முன்னே நின்ற
பெண்ணினது கூந்தலையே பற்றிப் பிடிக்க
பாங்காயே கையுடனே கூந்தல் வரவே
கண்டதுமே கனகருக்கு கலக்கிக் கொள்ள
கண்டாரே பஞ்சாப் போட்ட பாட்டியை!

(அடுத்த சனிக்கிழமை கனகர் சந்திப்பார்)

# கவிதைமொழி கொண்டு நாடகம் படைத்த ஷேக்ஸ்பியர்

(சென்றவாரத் தொடர்ச்சி)



ரோசலின் அரண்மனையைவிட்டு வெளியேறி காட்டுக்குப் போய்விட வேண்டும் என்று உத்தரவிட்டார். ரோசலின் இல்லாமல் தன்னால் தனிமையில் வாழ முடியாது என்று கண்ட சீலியா தானும் தனது ஒன்றுவிட்ட சகோதரியுடன் காட்டுக்குப் போகப் புறப்பட்டாள்.

ஆனால் இளம்பெண்கள் இருவர் தனியாக செல்வது நலமில்லையென்று கண்ட சீலியா ஒரு யோசனை கூறினாள்.

இருவரில் உயரம் கூடியவளான ரோசலின் ஆண்மகன் போல் உடை தரித்துக் கொள்வது உயரம் குறைந்த

ரம்யன்

வளான சீலியா பெண்ணாக உடை தரித்துக் கொள்வது இருவரும் அண்ணனும் தங்கையும் போல் பாவனை செய்து கொள்வது என்று முடிவு செய்தனர்.

ரோசலின் தன்னை கனிமேட் என்று அழைத்துக் கொள்வது என்றும் சீலியாவை அலீனா என்று அழைப்பது என்றும் தீர்மானித்துக் கொண்டார்கள். இருவரும் நாட்டுப்புற பையனாகவும், நாட்டுப்புற இளம் மங்கையாகவும் உடை தரித்துக் கொண்டு தங்களுக்கு வேண்டிய பழம் மற்றும் நகைகளையும் எடுத்துக் கொண்டு காட்டை நோக்கி நீண்ட பயணத்தை ஆரம்பித்தார்கள்.

பல நாள் பிரயாணம் செய்த பின்னர் அண்ணன் தங்கையாக பாவனை செய்துகொண்ட இரு இளம் பெண்களும் ஆர்டன் என்று அழைக்கப்படும் காட்டுப் பகுதிக்கு வந்து சேர்ந்தார்கள். பிரயாணத்தினாலும் சரியான உணவின்மையாலும் இருவரும் மெலிந்தும் களைத்தும் போய்விட்டார்கள். அதனால் ஒரு சாலையின் ஓரத்தில் இருவரும் ஓய்வு எடுத்துக் கொண்டார்கள். அந்த வேளையில் கிராமவாசி ஒருவன் அந்த வழியாக நடந்து வந்து கொண்டிருந்தான்.

கனிமேட் அந்த மனிதனைப் பார்த்து ஓர் இளைஞன் தைரியமாகப் பேசுவது போல் பாவனை செய்து கொண்டு, அவனை அழைத்து; நாங்கள் இருவரும் பத்திரமாகத் தங்கி ஓய்வு எடுத்துக்கொள்ளக் கூடியதான ஓர் இடத்திற்கு எம்மை இட்டுச் செல்வாயானால் உனக்குப் பணமும் தந்து எமது நன்றியையும் தெரிவித்துக் கொள்வேன். இவள் என் தங்கை வெகுதூரம் நடந்துவந்ததால் பசியால் களைத்துப் போயிருக்கிறாள். என்று கூறினான். (இன்னும் வரும்)

# நம்பினால் நம்புங்கள் இதுதான் அங்கு நடந்தது!

'எந்த நிகழ்விற்கும் போகாமல் விட்டாலும் பரவாயில்லை கட்டாயம் செத்த வீட்டுக்குப் போக வேண்டும்' என்று எனக்குள்ளே தீர்மானித்தபடி -

அந்த மரணவீட்டுக்குப் போனேன். '' பாவம் போனகிழமை யெல்லாம் நல்லாத்தான் இருந்தவா. திடீரென்று இப்படியாப் போச்சு'' என்று அங்கு நின்றவர்கள் அனுதாப வார்த்தைகளை வாரியிறைத்துக் கொண்டிருந்தனர்.

சடலத்தைப் பார்த்துவிட்டு கதிரையில் வந்து உட்கார்ந்தேன். ''பொடி'' வைச்சிருக்கின்ற பெட்டி மட்டும் 65 ஆயிரமாம் என்று எனக்குப் பக்கத்தில் இருந்தவர் மற்றவருக்கு சொல்லிக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது.

''எப்பாவாம் பொடி எடுக்கிறது'' என்று விசாரித்தேன். மூன்று நாள் செல்லுமாம். ஏன் அப்பிடி பிள்ளையெல்லாம் வெளிநாட்டிலிருந்து வந்திட்டினம் தானே.

பிரேதம் கொண்டு போறதுக்கு 'ஏசி' காருக்குப் போனவை யாம் அது மூன்று நாளுக்கு புக்கிங்காம். அதுதான் லேட்டா பொடி எடுக்கினம்.

'' என்ன ஏசிக்காரா? எதிலதான் கொண்டு போனாலும் நெருப்பிலதானே எரிக்கிறது. அடப்பாவிகள்.....'' எனக்குள்ளே எரிந்து கொண்டிருந்தேன்.




அப்போது சோடாவினை 'றே'யில் வைத்துக் கொண்டு வந்த பையன் ஒருவன் 'அண்ணை சோடா எடுங்கோ' என்று நீட்டினான்.

செத்தவீட்டிலும் சோடாவா? என்று எனக்குள்ளே ஆச்சரியத்தைப் பரப்பியவாறு சோடாவை எடுத்துக் குடித்து விட்டு அங்கிருந்து வெளியேறினேன்.

மூன்று நாள் கழித்து பிரேதம் எடுக்கும் நாளன்று போனேன். அன்று அங்கு மேலும் பரபரப்பான சம்பவங்கள்.

'பாண்ட்' வாத்தியக் கலைஞர்கள் 32 பேர் அங்கு நின்றிருந்தனர்.

அண்ணை எங்கட வீட்டிற்கும் சுடலைக்கும் இடையில் ஒரு மைல் தூரம் வரும். இங்கேயிருந்து சுடலைவரைக்கும் நில பாவாடை விரிச்சுக் கொண்டுதான் போகவேண்டும் என்று ஒருவர் கூறிக் கொண்டிருந்தார்.



கவிநேசன்

சுடலைவரைக்கும் நிலப்பாவாடையா? மேலும்ஆச்சரியப்பட்டேன் எனக்குள்ளே!

'ஏசி' காரும் வந்தது. பிரேதம் எடுக்கும் நேரமும் நெருங்கியது.

பட்டாசுவெடிகளின் ஆரவாரத்தின் மத்தியில் பிரேதம் சுடலையை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டது.

சுடலையிலும் ஒரு ஆச்சரியம் ... அட என்னடா? அது என்று நீங்கள் நினைப்பது- அவசரப்படுவது எனக்குத் தெரிகிறது இறுதியாக...!

'' பாண்ட்' வாத்தியக் கலைஞர்களுக்கு காசு மாலை போட்டார்கள்.

அங்கு நின்றவர்களெல்லாம் திகைத்துப் போனார்கள். இப்படி பரபரப்பான மரணவீடு வலிகாமப்பகுதியில்அண்மையில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

பார்த்தீர்களா? சம்பவத்தை எந்தப் பிள்ளைகளாயினும்சரி தனது தாய், தந்தையரின் இறுதிக்கடமைகளை சிறப்பாக செய்யவேண்டும் என்பதில் துடியாய் துடிப்பார்கள். அதில் ஒரு நியாயம் இருக் கத்தான் செய்கிறது. அதைவிட, அது வாழ்க்கைக் கடமையும் அதுதானே!

அதற்காக இப்படியா? மரண வீட்டினை எளிமையாக நடத்தி மிகுதிப் பணத்தினைக் கொண்டு ஏதாவது அறப்பணிகளைச் செய்திருக்கலாம். அல்லது இறந்து போனவரின் நினைவு கள் அழியா வண்ணம் அந்தக்கிராமத்தில் உள்ள கல்விச் சாலைகளுக்கு மாணவர்கள் பயன் படக் கூடிய வகையிலான செயற்பாடுகளைச்செய்திருக்கலாம்.வன்னிப்போரில்அநாதைகளான பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக ஏதாவது செய்திருக்கலாம். இப்படி ஆற்றவேண்டிய நல்லபணிகள் எம்மத்தியில் பல உள்ளன.

அதை விடுத்து, எவற்றையும் சிந்திக்காது ஏன்தான் எம்மவர்கள் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்களோ தெரியாது!

இப்படியானவர்களுக்கு எப்போதுதான் ஞானம் பிறக்கப்போகிறது! சமூகத்தின் தேவைகள் பலவும் இருக்க, அவற்றுக்குப் பலரும் பணமில்லை என்று பதற, பணத்தை - காசைக் கரியாக்கும் பட்டாபடோபங்கள் தேவைதானா...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவீசம்மா! கைவீசு! கதிரையோடு கைவீசு!



வல்வனுக்குப் புல்லும் ஆயுதம் என்பார்கள். இதை யதார்த்தத்தில் புரிய வைக்கும் வகையில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மூதாட்டி ஒருவர் கதிரையின் உதவியுடன் நடமாடி வருவதைக் குறிப்பிடலாம்.

75 வயதுடைய இந்த மூதாட்டியைத் தாக்கிய கடும் நோய் காரணமாக அவர் தனியே நடமாட முடியாத நிலை ஏற்பட்டது. பணக்காரர்கள் என்றால் 'எவர்சில்வரால்' செய்யப்பட்ட சதுர அமைப்புடைய ஊன்று கருவியை வாங்கி அவற்றின் உதவியுடன் மெதுவாகவேனும் நடப்பார்கள். ஆனால் பாவம்! இந்த மூதாட்டியின் ஏழ்மை அதற்கு இடமளிக்கவில்லை.

ஆயினும் எப்படியாவது நடந்தே தீரவேண்டுமென்ற தவிப்பில் இருந்த மூதாட்டிக்கு இப்போது கதிரை கை கொடுத்துள்ளது.

கதிரையின் உதவியுடன் சமநிலையைப் பேணியாவது மீண்டும் நடக்கத் தொடங்கிய இந்த மூதாட்டி சிகிச்சை பெறுவதற்காக அரைகிலோமீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள மானிப்பாய் வைத்தியசாலையின் வாசலைத் தாண்ட முடியாமல் கொஞ்சநேரம் நின்றபடியே இளைப்பாறுவதைத்தான் படத்தில் காண்கிறீர்கள்.

முதுமை, வறுமை இரண்டுக்குமிடையில் நம்பிக்கையோடு நடக்கின்ற மூதாட்டிக்கு உதவி செய்ய ஏதாவது வழி கிடைக்குமா? தொண்டு நிறுவனங்களின் கண் திறக்குமா?




தொகுப்பு: ஔண்யன்



# இது இந்தக் காலம்!

## தொல்புரம் சி.கதிர்காமநாதன்

### ஏன் போறியள்

கோயில் திருவிழாக்கள் "களை" கட்டத் தொடங்கிவிட்டன. ஒரு கோயில் திருவிழா முடிவு பெறும்போது அடுத்த கோயிலொன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. உற்சாகத்திற்கும் ஆரவாரத்திற்கும் பஞ்சமேயில்லை. காரணம் குடாநாட்டில் இருந்த பல தடைகள் இப்போது நீக்கப்பட்டு வருகின்றன.முடிய இரவுகள் விழிக்கத் தொடங்கிவிட்டன. கச்சேரிகள், களியாட்டங்கள் ஆரம்பமாகிவிட்டன.



பகலில் வானொலியில் கேட்ட பாட்டுக்கள் இரவு மேடையில் வாத்தியக் கருவிகளுடன் கேட்கத் தொடங்கிவிட்டன.

ஒலிபெருக்கிகளில் சத்தங்கள் நான்கு திசைகளிலும் மனிதர்களை ஆட்டம் போட வைக்கின்றது. போதையும் ஏறினால் மிகுதி சொல்ல வேண்டியதில்லை. எங்கெங்கு தூண்கள், உயர்ந்த மரங்கள் உள்ளனவோ அங்கு ஒலிபெருக்கி சாதனங்கள் பொருத்திவிட வேண்டியது தான். அருகில் என்னென்ன இடங்கள் இருக்கின்றன, இந்த இடத்தில் இதனை 'பொருத்துவதால்' யாருக்காவது கஸ்ரம் துன்பம் அசௌகரியங்கள் ஏற்படுகின்றனவா?

இதைப் பற்றி எங்களுக்கு அக்கறையுமில்லை, பிரச்சினையுமில்லை. ஒலி பெருக்கியிலிருந்து சத்தம் வந்தால் போதும்- காலையிலிருந்து மாலைவரை காதுகளுக்கு ஓய்வேயில்லை.

சத்தம் .... சத்தம்.... சத்தம்...

அந்தக் கோயில் அமைந்துள்ள சூழலுக்கு அமைய பக்கத்தில்- உள்ளோர் கேக்கிற மாதிரி, அளவாக, அடக்கமாக, இறை பக்தியை உணர்ந்து கேட்பதற்கு... அதில் மனதைச் செலுத்தி, அமைதியடையும் உணர்வை ஏற்படுத்த சத்தத்தை வைத்தால் என்ன?

காதில் கேட்கும் சத்தத்தால் இருக்கின்ற பக்தியும் " தொலைந்து" விடுவதுபோல் அல்லவா இருக்கின்றது. எங்களுடைய சந்தோஷத்துக்காக மற்றவர்களின் நிம்மதியைக் குழப்புவதா? (இன்னும் வரும்)

# யாழ்ப்பாண மணிக்கூட்டுக்கோபுரம்: வாழும் இன்னொரு மரபுரிமைச் சொத்து

## ம.திருக்குமாரன்

குறிப்பாக பிரித்தானியக் காலனியத்துவத்தில் காண்பிய பிரதிநிதித்துவங்களில் ஒன்றான மணிக்கூட்டுக் கோபுரங்கள் பிரித்தானிய காலனியத்துக்குட்பட்ட இலங்கை, இந்தியா போன்ற பிராந்தியங்களில் பரவலாக நிர்மாணிக்கப்பட்டன. இவற்றின் தொடர்ச்சியாக காலணியத்துவத்திற்குப் பிற்பட்ட காலகட்டத்திலும் இலங்கை, இந்தியா போன்ற பிராந்தியங்களில் பொது இட அமைவுகளாக மணிக்கூட்டுக் கோபுரங்களை அமைத்தல் இன்றும் காணப்படுகின்றது.

யாழ்ப்பாண மணிக்கூட்டுக் கோபுரமும் இத்தகைய காலனியப் பின்புலம் வழி உருவான ஒரு கட்டுமாணம்தான். இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் காலணிய காலத்திலும் அதற்குப் பிற்பாடும் கட்டப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரங்களில் கட்டுமாண ரீதியாகவும், அழகியல் ரீதியாகவும் முதன்மைச் சிறப்புடையது யாழ்ப்பாணத்திலுள்ள மணிக்கூட்டுக் கோபுரம் ஆகும். சிலவேளைகளில் ஒட்டு மொத்தமாக ஆசியப் பிராந்தியத்தில் கட்டப்பட்ட பிரித்தானிய கால மணிக்கூட்டுக் கோபுரங்களில் சிறந்தவற்றின் வரிசையில் முன்னணியில் இருப்பதும் இதுவாக இருக்கக் கூடும் என்பதில் சந்தேகமில்லை.

மேற்படி யாழ்ப்பாணத்து மணிக்கூட்டுக் கோபுரம் சேர்.ஜேம்ஸ் லோங்டன் காலத்தில் கட்டப்பட்டது. 1875 இல் இளவரசர் வேல்ஸின் (பின்னர் 7 ஆம் எட்வேர்ட் மன்னர்) யாழ்ப்பாண வருகைக்கான கையுறையாக யாழ்ப்பாணத்து மக்களால் பரிசாக தரப்பட்டதே இந்தக் கட்டுமாணம் ஆகும்.

அந்தவகையில் இந்த விதந்துரைக்கத்தக்க மணிக்கூட்டுக் கோபுரத்தை 1881 இல் அரச கட்டடவியலாளரான திருவாளர் ஸ்மித்தர் வடிவமைத்தார். 1882 இல் இதன் பொருட்டாக அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகையும் தந்தார். வட பிராந்திய எந்திரியான திருவாளர் டெஸ்லாண்டஸ் இதைக் கட்டுவதில் மிகுந்த ஈடுபாட்டோடு பணியாற்றினார்.

இற்றைக்கு நூற்றாண்டுகளைக் கடந்து தனது 135 ஆவது வருடத்தில் உயிர் வாழும் இந்தக் கட்டுமாணம் காலனிய காலத்தில் உருவான இந்தோ சரசனிக் எனும் காலனிய கால கட்டுமாணப் பாணியை பின்பற்றியது. இந்தோ சரசனிக் என்பது பிரித்தானிய காலனியக் கட்டடக் கலைஞர்களால் கீழைத்தேய, மேலைத்தேயக் கட்டடப்பாணிகளினைக் கலப்பதனால் உருவாக்கப்பட்ட ஓர் பண்பாட்டுக் கலப்பு வழியிலான ஓர் புதிய தோற்ற அமைவாகும். அந்த வகையில் கட்டடவியலாளரான ஸ்மித்தரினால் இது தவிர்ந்த இலங்கையில் கட்டப்பட்ட கட்டுமாணங்களிலும் மேற்படி பாணியின் தாக்கத்தினை அவதானிக்கலாம். குறிப்பாக இலங்கை அரும்பொருளகம், சுங்க அலுவலகம் முதலியவற்றிலும் இதனைப் பார்க்கலாம்.

இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தக் கட்டுமாணம் நமது பண்டைய மரபுரிமைகளின் வரிசையில் சேர்க்கப்பட வேண்டியது. இலங்கையின் மிகச் சிறந்த மணிக்கூட்டுக் கோபுரம் என்ற வகையிலும் காலனியத்துக்கு உட்பட்ட மக்களின் காலனியவாதிகளினை எதிர் கொள்ளலின் ஒரு வகையான காண்பிய வரலாற்றுச் சான்று என்ற வகையிலும் இதன் சமூக வரலாற்று முக்கியத்துவம் அதிகமானது.

இதனை இயங்கும் ஓர் மணிக்கூட்டுக் கோபுரமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பதில் யாழ்ப்பாணத்து மக்களும், மாநகர நிர்வாகமும் எடுக்கும் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கதே. ஆயினும் அதன் அமைவினைப் பொறுத்த வரையிலும் இலத்திரனியல் மணிக்கூடு அதற்குப் பொருத்தமானதல்ல. பதிலாக பழைய மணிமுள்ளு நகர்ச்சி உடைய கடிகாரமே அதற்கு உரித்தானதாகும். அதுவே அதன் பாணியோடு பொருத்திக் கரையக் கூடியதும் அதன் மிடுக்கை மேலும் அதிகரிப்பதும் ஆகும். இலத்திரனியல் மணிக்கூடோ கோபுரத்தோடு பொருந்தாது அதன் மிடுக்கையும், வனப்பையும் கீழிறக்கி விடுகின்றது. எனவே தயவு செய்து வருங்காலத்தில் இதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை ஒரு மரபுரிமைச் சொத்தை எவ்வாறு பேணவேண்டும் என்பதன் வழி எடுக்க வேண்டும். மாநகர சபையில் இப்போது அதாவது கட்டடக் கலைஞர் திருமதி மல்லிகா ராஜரட்ணத்தின் அகால மரணத்தின் பின் காலி யாக இருக்கும் கட்டடக் கலைஞருக்கான பதவி யினை பொருத்தமான துறைசார் நிபுணத்துவமுடைய கட்டடக் கலைஞர்களுக்கு வழங்கு வதன் மூலம் இவ்வித மான நிலவரங்க ளினை இலகுவாகக் கையாளலாம்.



மேலும் இவ்விதமான பண்பாட்டு வரலாற்றுச் சிறப்பினையுடைய மணிக்கூட்டுக் கோபுரத்தில் விளம்பரப் பதாகைகள் போன்றவற்றை காட்சிக்கு வைத்து அதன் சிறப்பினை குன்றச் செய்யாது ஒரு மரபுரிமைக்கு உரிய மதிப் போடு அதனை நாம் பாதுகாக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்



கையில் இருக்கும் பணத்தைச் செலவழித்து விட்டு பிறரிடம் கைமாத்து வாங்குவீர்கள். சுயநலமாக நடந்து கொள்ளும் சிலரைக் கண்டு எரிச்சல் அடைவீர்கள். வீட்டுக்குத் தேவையான சில பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். உடல் நலத்தில் சிறு குறைபாடுகள் ஏற்படலாம். நண்பர்கள் சிலர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம்.

### இடபம்



குழப்பம் இல்லாமல் எதிலும் தெளிவாகச் செயற்படும் நாள். வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்த நண்பர்கள் அதை காப்பாற்றி பெருமை சேர்ப்பர். ஏற்கனவே அறிமுகமான ஒருவர் மூலம் புதியவர் ஒருவரின் அறிமுகம் கிடைக்கும். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

### மிதுனம்



நடந்து முடிந்த சில சம்பவங்களை அசை போட்டுப் பார்ப்பீர்கள். உங்கள் நலனில் அக்கறை கொண்ட ஒருவரை அறிந்து கொள்வீர்கள். தொழில் ரீதியாகச் சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். அவசர செலவுக்காக ஒருவரிடம் பணம் கைமாத்து வாங்கலாம். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாக செலவாகலாம்.

### கடகம்



எதிர்ப்புகள், போட்டிகளை முறியடித்து வெற்றி காணும் நாள். உடன் பிறப்புக்கள் உறுதுணையாக இருப்பர். வெளிநாட்டுத் தொடர்புடையவர்கள் நல்ல செய்திகளைக் கேட்கலாம். பிள்ளைகள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். வரவாக வந்த பணம் ஒன்றை மற்றவர்களுக்கு கைமாத்தாகக் கொடுக்கலாம். நட்பு வட்டம் விரிவடையும்.

### சிங்கம்



காலை முதல் மாலை வரை பரபரப்பாகச் செயற்பட நேரிடலாம். நினைத்த ஒரு காரியம் நடக்காமல் போனாலும், நினைக்காத ஒரு காரியம் நடக்கும். தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நீண்ட கால திட்டம் ஒன்றை செயற்படுத்துவீர்கள்.

### கன்னி



வயிறு தொடர்பான உபாதைகளைத தவிர்க்க உணவு விடயங்களில் கவனம் அவசியம். வேலையாள்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். உங்கள் குடும்பத்தினருக்குச் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். செய்ய நினைத்த வேலை ஒன்றைச் சோம்பலால் திடீரென மாற்றி அமைப்பீர்கள்.

### துலாம்



மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல், அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். கடன் பிரச்சினைகளால் கலக்கம் அடையலாம். சிறிய வேலை ஒன்றுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். புதிய முயற்சிகளைத் தவிர்க்க வேண்டிய நாள். கோபம், வேகத்தை அதிகரிக்கும் சம்பவங்கள் நடக்கலாம். தண்டச் செலவு நேரும்.

### விருச்சிகம்



யாருடைய பணமாவது உங்களின் கைகளில் புரளும். அரசு தொடர்பான காரியங்கள் இழுபறிக்குப் பின் முடிவுக்கு வரும். நண்பர்கள் சிலர் செலவில் உங்களின் தேவைகள் நிறைவேறலாம். அலைந்து திரிந்தாவது முடிக்க வேண்டிய வேலை ஒன்றை முடிப்பீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும்.

### தனுசு



தம்பதியர் இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையலாம். மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என நினைக்காமல், துணிந்து சில வேலைகளைச் செய்வீர்கள்.
நண்பர்கள் சிலர் உங்களிடம் முக்கியமான சில ரகசியங்களைச் சொல்லலாம்.

### மகரம்



அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டு செய்வீர்கள். புதியவர்களின் அறிமுகம் மற்றும் உதவி கிடைக்கலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் கட்டளைகளை நிறைவேற்றாமல் அதிருப்திக்கு ஆளாகலாம். நண்பர்களுடன் கேளிக்கை, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். கட்டண பாக்கி ஒன்றைச் செலுத்துவீர்கள்.

### கும்பம்



வழக்கத்திற்கு மாறாக வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். உடன் பிறப்புக்களுடன் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். கணிசமான தொகையைச் செலவிட்டும் சில காரியங்கள் நடக்காமல் போகலாம். அவசரப்பட்டு எந்த விடயத்திலும் முடிவுகள் எடுக்க வேண்டாம். குடும்ப உறுப்பினர் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம்.

### மீனம்



நல்லவர், கெட்டவர் எனப் பாராமல் நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். புத்துணர்ச்சி, தெம்புடன் செயற்படுவீர்கள். உங்களின் தவறு ஒன்றை மற்றவர்களுக்குத் தெரியாமல் மறைத்து விடுவீர்கள். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும், நினைத்த காரியம் நடக்கும். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர்.

# தென்மராட்சியில் டெங்கு ஒழிப்பு பிரசாரம்

தென்மராட்சியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் தொடக்கம் டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு பிரசாரத்தை ஒலிபெருக்கி மூலம் மேற்கொள்வதுடன், துண்டுப் பிரசுரங்களையும் சுகாதாரப் பிரிவினர் விநியோகித்து வருகின்றனர்.

பிரிவிலுள்ள பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, விழிப்புணர்வுச் செயற்பாடுகளை அனுசரிக்கத் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-207)


உ
சிவமயம்



திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான ஸ்ரீ விகிர்தி வருடம் வைகாசி மாதம் 29ஆம் நாள் (12.06.2010) சனிக்கிழமை பிரதமை திதியும், மிருகசீரிட நட்சத்திரமும், அமிர்தசித்த யோகமும் கூடிய சுபதினத்தில் பகல் 11.57 மணி முதல் 3.27மணி வரையுள்ள கன்னி இலக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறைசெல்வன்
சுதாகுமார் (சுதன்)
அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புத்திரி திருநிறைசெல்வி
தேனமிர்தம் (அமுதா)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, அதனைத்தொடர்ந்து நடைபெறும் விருந்து உபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமணம் நடைபெறுமிடம் - ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்,
5, Chapel Road, West Ealing, W13 9AE, London.

தங்கள் நல்வரவை நாடும்,

(இரு வீட்டார் அழைப்பு)

திரு.திருமதி நடராஜா
மீசாலை வடக்கு,
கொடிகாமம்,
இலங்கை.

LONDON T.P:
0044 2084220285
0044 7958308480

LONDON T.P:
0044 2088640544
0044 7900192474

திரு.கதிர்காமநாதன்
அல்லாரை தெற்கு,
மீசாலை,
இலங்கை.

இவர்கள் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க...



## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kg மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRA NO-1 புறொயிலர் குஞ்சுகள் 12.06.2010 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும் [25/= ரூபாவால் விலை குறைக்கப்பட்டுள்ளது]

★ ராஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ ஜென்சி பாம், 1ஆம் கட்டை, பருத்தித்துறை.
★ P. ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
★ திருமகள் களஞ்சியம், சிவலிங்கப் புளியடி.

தொ.பே:- 0212222867, 0776090926, 0213213952.



நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?

இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

## சித்தாரா பொன்னாங்காணித் தைலம்

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

(C/564561)



## VISA - வீசா
Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

Call : 0776 209 887

SIC, 734, Hospital Road, Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**17.01.1992**

✱ திருகோணமலை, கோணேஸ்வரர் ஆலயத்தில் நாளாந்தப் பூசைகளை மேற்கொள்வதற்காக ஆலயக் குரு செல்லும் போது அவருக்கு ஆயுதம் தாங்கிய பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படுவதாகத் தெரிவிப்பு.

✱ நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம்பெறும் உறுப்பினர்கள், இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான எந்த யோசனைகளையும் பகிரங்கமாக விவாதிக்கக் கூடாதென தடைவிதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

**18.01.1992**

✱ தமிழகத்திலுள்ள ஈழத் தமிழ் அகதிகளை பலவந்தமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் இந்தியாவின் செயற்பாடுகளை தடுத்து நிறுத்துமாறு ஐ.நா. செயலருக்கு விடுதலைப் புலிகள் கோரிக்கைவிடுத்துள்ளதாகத் தெரிவிப்பு.

✱ அமைச்சர் தொண்டமானை அமைச்சரவையிலிருந்து நீக்குமாறு காலி மாவட்ட மகாசங்கம் அரசைக் கோரியிருப்பதாகத் தெரிவிப்பு.

**19.01.1992**

✱ அமைச்சர் தொண்டமானின் சமரச முயற்சிக்கு தெற்கில் உருவாகியிருக்கும் பலத்த எதிர்ப்பின் பின்னணியில் ஜனாதிபதி பிரேமதாஸாவே செயற்படுவதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு.

✱ வடக்கு, கிழக்கில் இராணுவம் தனது தாக்குதல் நடவடிக்கைகளை மீண்டும் முனைப்புடன் ஆரம்பிக்க வேண்டும் என முன்னாள் அமைச்சரும் சிங்களத் தேச பாதுகாவலர் இயக்கத் தலைவருமான காமினி ஜெயசூரிய தெரிவிப்பு.

**20.01.1992**

✱ சமஷ்டி அரசமைப்பு முறையின் அடிப்படையில் அல்லது விரிவான அதிகாரப் பரவலாக்கல் முறையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணுமாறு அரசிடமும் எதிர்க் கட்சிகளிடமும் கொழும்புப் பல்கலைக் கழகக் கல்விமான்கள் கோரிக்கை.

✱ சில சக்திகளால் எனக்கு விடுக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கைகளுக்கோ அச்சுறுத்தல்களுக்கோ நான் அஞ்சப் போவதில்லை என அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.

**21.01.1992**

தமிழகத்திலிருந்து தாயகம் திரும்ப சம்மதித்திருந்த ஈழத் தமிழ் அகதிகளில் சுமார் 200 பேர் நேற்று சென்னையிலிருந்து புறப்பட்ட கப்பலில் ஏற மறுப்புத் தெரிவித்துவிட்டதாக அறிவிப்பு.

✱ தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட்டு, அவர்களது தாயகமும் தன்னாட்சி உரிமையும் ஏற்றுக் கொள்ளப்படும் வகையிலான தீர்வுத் திட்டமே அவசியம் என விடுதலைப் புலிகளின் சர்வதேச பிரிவைச் சேர்ந்த லோரன்ஸ் திலகர் தெரிவிப்பு.

**22.01.1992**

✱ திருகோணமலை, சீனன் குடா விமான தளத்தில் நேற்று இடம்பெற்ற பயங்கரக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 40 விமானப்படையினர் பலியானதாகத் தெரிவிப்பு.

✱ திருகோணமலை மாவட்டம் குச்சவெளிக்கு அருகே விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றின் போது 20 படையினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

**23.01.1992**

✱ வவுனியாவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இருவேறு தாக்குதல் சம்பவங்களில் மொத்தம் 11 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

✱ யாழ்.மக்களின் கஷ்டங்களை நேரில் கண்டறிய கத்தோலிக்க திருச்சபையின் பல்வேறு துறவற சவைகளைச் சேர்ந்த முதல்வர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருப்பதாகத் தெரிவிப்பு.

**24.01.1992**

✱ இந்த வருடத்தின் முதலாவது மாதத்தின் 22 நாள்களில் மட்டும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் மொத்தம் 107 படையினர் கொலையுண்டதாக புள்ளி விவரங்கள் தெரிவிப்பு.

✱ விடுதலைப் புலிகள் மலையகப் பகுதிகளிலும் ஊடுருவி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் வின்செண்ட் பெரேரா நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

**25.01.1992**

✱ இலங்கையில் மனித உரிமைகள் பெருமளவில் மீறப்படுவதாகத் தெரிவித்து இலங்கை அரசைக் கண்டிக்கும் அறிக்கையொன்றை ஐ.நா.சபையின் மனித உரிமை கண்காணிப்புக்குழு வெளியிட இருப்பதாகத் தெரிவிப்பு.

✱ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான யோசனையொன்றைக் கத்தோலிக்க ஆயர்கள் இணைந்து தயாரித்து நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிப்பு.

**26.01.1992**

✱ தென்னிலங்கை மக்கள் மத்தியில் சிங்கள வார இதழ் ஒன்று நடத்திய கருத்துக் கணிப்பில் சிறுபான்மை மக்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கும் வகையில் அரசமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பதற்கு பேராதரவு கிட்டியிருப்பதாகத் தெரிவிப்பு.

✱ தென்னிலங்கையில் தொடர்ந்து நம்பிக்கைக்குரிய தலைவர் என ஜனாதிபதி பிரேமதாஸாவையே பெரும்பாலான மக்கள் கருதுவதாக 'ராவய' பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பீடு மூலம் உறுதிப்படுத்தப்படுவதாகத் தெரிவிப்பு.

**27.01.1992**

✱ அம்பாறை மாவட்டம், அரந்தலாவைக்கு அருகே நேற்று இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவமொன்றில் விமானப் படைச்சிப்பாய்கள் உட்பட சுமார் 50 பேர்வரை உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

✱ யாழ்.குடாநாட்டிலுள்ள இலங்கைப் படைமுகாம்களில் மேலும் பெருமளவு துருப்புக்கள் குவிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிப்பு.

**28.01.1992**

✱ ஹங்கேரி நாட்டிடமிருந்து இலங்கை இராணுவம் கொள்வனவு செய்த 25 இலகு ரக கவச வாகனங்கள் பாவனைக்கு உதவாதவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் தெரிவிப்பு.

✱ அகதி அந்தஸ்துக் கோரும் ஈழத் தமிழர் குறித்து கனேடிய அகதிகள்சபை கடுமையான நடவடிக்கைகள் எடுக்கும் என அறிவிப்பு.

**29.01.1992**

✱ ராஜீவ் காந்தி கொலைச்சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், பிரதித் தலைவர் மாத்தையா ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய குற்றப்பத்திரம் தயாராகி விட்டதாக சிங்கள நாளேடு ஒன்று தெரிவிப்பு.

✱ தமிழகத்தில் தங்கியிருக்கும் ஈழத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்ப ஆரம்பித்திருப்பது தமக்கு நிம்மதி தருவதாக தமிழ் நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவிப்பு.

**30.01.1992**

✱ பொலன்னறுவ மாவட்டம், சிங்கபுர பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

✱ இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் சம்மந்தப்பட்ட தரப்பினர் எவரிடமும் ஆர்வம் காணப்படவில்லை என இலங்கைக்கு விஜயம் செய்த கனேடிய மனித உரிமைக் குழுவினர் தெரிவிப்பு.

**31.01.1992**

✱ மட்டக்களப்பு மாவட்டம், கொக்கட்டிச்சோலை கடந்த வருடம் ஜூன் மாதம் ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக 67 தமிழ் மக்களை இலங்கை இராணுவத்தினரே படுகொலை செய்ததாக அதுகுறித்து விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிப்பு.

✱ இலங்கை அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் தொடர்பாக உதவி வழங்கும் நாடுகளின் அதிருப்தியை சமாளிக்கவே கொக்கட்டிச்சோலை படுகொலை தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதாக பி.பி.சி. வானொலி தெரிவிப்பு.

# மக்கள் முகம்

# இ.போ.ச காரைநகர் சாலை புதிய முகாமையாளர்



இ.போ.ச காரைநகர் சாலையின் புதிய முகாமையாளராக கே.சி.கந்தசாமி பொறுப்பேற்றுள்ளார்.

1971 ஆம் ஆண்டு இ.போ.சபையின் புத்தளம் சாலையில் இணைந்துகொண்ட இவர் நடத்துனராக, சிரேஸ்ட சாலைப் பரிசோதகராக 39 வருடம் சேவையாற்றி ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி முதல் இ.போ.ச காரைநகர் சாலையின் முகாமையாளராகப் பொறுப்பேற்றுள்ளார்.

காரைநகர் வேதரடைப்பைச் சேர்ந்த இவர், காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர். காரைநகர் சோலையான் விளையாட்டுக் கழகம், வேதரடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கம், வேதரடைப்பு சனசமூக நிலையம் என்பவற்றை ஸ்தாபித்ததுடன் அவற்றின் தலைவராக இருந்து செயற்பட்டு வருகின்றார்.

சிறந்த நாடகக் கலைஞரான இவர் காரைநகர் லலிதா கலா மன்றத்தின் செயலாளராகவும் கடமையாற்றுகின்றார். வரலாற்று நாடகம், சமூக நாடகங்கள் என்பவற்றில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்த இவர் அதன் ஊடாக மக்களுக்கு சமூக சீர்திருத்தக் கருத்துக்களை முன்வைத்து வந்துள்ளார்.

# வாசகர் திருமுகம்

## பூநகரிக்கும் இரணைமடுக் குளத் தண்ணீர்த் திட்டம் விஸ்தரிக்கப்பட வேண்டும்

கிளிநொச்சி மாவட்ட இரணைமடுக்குளத்தில் இருந்து தீவுப் பகுதிகள் அடங்கலாக யாழ்.மாவட்டத்திற்கு குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தினை தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை முன்னெடுப்பது பெரிதும் வரவேற்கத்தக்கதும் பாராட்டத்தக்கதுமாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பகுதியான பூநகரிப் பகுதிக்கு இரணைமடுக் குளத்தில் இருந்து நீர் விநியோகிக்கவும் இத்திட்டம் விஸ்தரிக்கப்பட வேண்டியது மிக அவசியமான பணி ஆகும். பூநகரி மக்கள் மீள்குடியேறி தற்போது அடிப்படை வசதிகளில் ஒன்றான குடிதண்ணீர் இன்றி சிரமப்பட்டு வருவதும், பவுசர் மூலம் இடம்பெற்ற குடிதண்ணீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டிருப்பதும் கவலைக்குரிய விடயமாக உள்ளது.

300 குடும்பங்கள் வரை வாழ்ந்த பூநகரி இரணைதீவு மக்கள் போக்குவரத்து, குடிதண்ணீர்ப் பிரச்சினை காரணமாக ஏற்கனவே முற்றாக இடம்பெயர்ந்து, முழங்காவில் இரணைமாதா நகரில் வசிப்பதும் குறிப்பிடத்தக்கதாகும் குடமுருட்டியில் நீர்த்தேக்கம் (பூநகரி - பரந்தன் வீதி) அமைக்கும் திட்டமும் கைவிடப்பட்டுள்ளது.

தண்ணீர்ப் பிரச்சினை காரணமாக ஏற்கனவே பிறமாட்டங்களுக்கு வெளியேறியவர்களுடன், மேலும் வெளியேறப் பலர் தயாராகிவருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பூநகரியில் இருந்து யாழ்ப்பாணம் 21 மைல் தூரத்திலும் கிளிநொச்சி 22 மைல் தூரத்திலும் அமைந்திருக்கின்றன. பூநகரி சங்குப்பிட்டி - கேரதீவு போக்குவரத்தின் போது அரை மணித்தியாலத்திற்கு ஒரு தடவை நாவற்குழி ஊடாகப் பஸ் சேவை இடம்பெற்று வந்தது. மேலும் இங்குள்ள யாழ்.கடலேரியை அண்மித்த கடல் தொழிலாளர்கள், பூநகரி நாச்சிக்குடா, பாலாவி, பள்ளிக்குடா போன்ற பகுதிகளில் கடல்தொழிலில் ஈடுபட்டும் வந்தனர். பூநகரியில், விவசாயம், தெங்குப் பயிர்ச்செய்கை, மீன்பிடி போன்ற சகல துறைகளிலும் யாழ்.குடாநாட்டு மக்கள் கணிசமனோர் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில் யாழ்.மாவட்டத்திற்கான அபிவிருத்தித் திட்டங்கள் ஒவ்வொன்றிலும் பூநகரி இணைக்கப்படல் வேண்டும்.

தீவுப் பகுதி வரை விஸ்தரிக்கப்படும் இரணைமடுக்குள நீர் விநியோகத்திட்டம் பூநகரிப் பகுதிக்கும் குறிப்பாக நல்லூர், செட்டிய குறிச்சி, மட்டுவில்நாடு கொல்லகுறிச்சி கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு முதற்கட்டமாக விஸ்தரிக்கப்பட வேண்டும். நீர் வழங்கல் வடிகால் சபை இது விடயத்தில் கவனம் எடுக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

*நல்லூர், பூநகரி.* கே.கார்த்திகேசு.

# எமது உயர்கல்விக்கு உதவுவார்களா?

நாம் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் டிப்ளோமாப் பட்டத்தினைப் பெற்றவர்கள். யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்பு அலகினால் கலை முதற் தேர்வுக்குப் பதிவு செய்ய யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டது. நாம் தேசிய கல்வியியற் கல்லூரியில் டிப்ளோமாப் பட்டத்தினைப் பெற்றுள்ளதனால் எமக்கு கலை முதற்தேர்வில் முதலாம் வருடத்தில் பாடவிலக்களிப்பினை தருமாறும் பகுதி 1இல் இருந்து கற்கைநெறியினைத் தொடருவதற்குமான அனுமதியினை வழங்க முடியுமா என பதிவாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது அவ்வாறு மேற்கொள்ளமுடியாது எனக் கூறினார்.

ஆரம்பத்தில் தேசிய கல்வியியற் கல்லூரியில் டிப்ளோமாப் பட்டத்தினைப் பெற்றவர்களுக்கு இவ்விலக்களிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களும் பகுதி 1 இல் இருந்து பரீட்சைக்குத் தோற்றி தமது பட்டத்தினை நிறைவுசெய்துள்ளதுடன் அவர்கள் அரச சேவையில் மிக உயர்ந்த பதவிகளில் பணியாற்றுகின்றனர்.

இவர்களுக்கு வழங்கப்பட்ட பாடவிலக்களிப்பினை போல் எமக்கும் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டோம். இவ்வாறான விலக்களிப்புக்கள் தற்போது வழங்கப்படுவதில்லை எனவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் இருந்து இதற்கான அனுமதி கிடைக்கப்பெறவில்லை எனவும் கூறினார்.

ஆரம்பத்தில் இந் நடைமுறைக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் இருந்து அனுமதி பெற்றிருப்பின் ஏன் தற்போது இந் நடைமுறை நீக்கப்பட்டது அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் இருந்து அனுமதி பெற்றுக் கொள்ளப்படாது இவ் நடைமுறை பின்பற்றப்பட்டதா அவ்வாறாயின் அப்பட்டம் செல்லுபடியற்றதா. அப்பட்டத்தினைக் கருத்தில்கொண்டு வழங்கப்பட்ட நியமனங்கள், பதவி உயர்வுகள் செல்லுபடியற்றவையா இதற்கு யார் பொறுப்பாளிகள். இவ்விடயம் பற்றி சமூகத்திற்கு தெளிவுபடுத்தப்போவது யார்? இவ்விடயம் ஒரு புரியாத புதிராகவே உள்ளது.

மிக உயர்ந்த அறிவாளிகளும் அறிஞர்களும் அதிகளவில் உள்ள பல்கலைக் கழகத்தில் ஏன் இவ்வாறான முரண்பட்ட நடைமுறைகளும் திட்டமிடப்படாத செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. எத்தனையோ கஷ்ரங்களின் மத்தியிலும் யாழ்.மக்களின் பிரதான சொத்தான கல்விச் செல்வத்தினை அள்ளிவழங்குகின்ற பல்கலைக்கழகம் ஏன் இவ்வாறு நடந்து கொள்கின்றது எவருக்கும் புரியாததாகவே உள்ளது.

இதனை சம்பந்தப்பட்டவர்கள் கருத்தில் எடுத்து எமது உயர்கல்விக்கு வழி வகுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக யாழமுதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா, இந்தியாவுடனான நட்பின் மூலம் இலங்கை சுயாட்சியை இழக்க நேரிடும்!

## ஆஸியின் முன்னாள் இராஜதந்திரி பேட்டி

கொழும்பு, ஜூன் 12

சீனா, இந்தியா ஆகிய நாடுகளுடனான இலங்கையின் நட்பு இறுதியில் கண்ணீரில் தான் முடியும். இதன் மூலம் இலங்கை அதன் சுயாட்சியை இழக்க நேரும். இந்தியாவுக்குத் தலையையும், சீனாவுக்கு வாலையும் காட்டும் இச்செயற்பாடு மிகவும் முட்டாள்தனமானது. இந்தியாவை மீறி சீனாவுடன் நட்பைப் பேணுவது ஆபத்தானது.

- இவ்வாறு ஆஸ்திரேலியாவின் பிரபல முன்னாள் இராஜதந்திரிகளில் ஒருவரும், இலங்கைக்கான ஆஸ்திரேலியாவின் துணை உயர்ஸ்தானிகராக 1994 ஆம் ஆண்டு கடமையாற்றியவருமான புரூஸ் ஹெய்க் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கை அரசு ஊடகச் சுதந்திரத்தைக் கொலைசெய்து விட்டது என்றும் -

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் புலம்பெயர் தமிழர்களுக்கு எதிரான நிகழ்ச்சி நிரல்கள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் புரூஸ் ஹெய்க் தெரிவித்தார்.

இவர் இலங்கையின் நடப்பு விவகாரங்கள் குறித்து ஊடகம் ஒன்றுக்கு நேற்று வழங்கிய விசேட பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்பேட்டியில் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு -

இலங்கைத் தூதரகங்கள் அரசியல் மயப்பட்டு விட்டன. அவை புலம்பெயர் தமிழர்களுக்கு எதிரான நிகழ்ச்சி நிரல்களை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன. தமிழர்களுக்கு தொல்லைகளைக் கொடுக்கின்றன. இலங்கைத் தூதரகங்கள் அமைந்திருக்கும் அந்தந்த நாடுகளின் இணக்கத்துடன் இச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் தற்போது நிலைமை மாறுகிறது. ஏனெனில் அந்நாடுகள் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டன.

சீனா, இந்தியா ஆகிய நாடுகளுடன் ஆன இலங்கையின் நட்பு இறுதியில் கண்ணீரில் தான் முடியும்.

புத்திசாலித்தனமாகச் செயற்பட முடியும் என்று இலங்கை நினைக்கிறது. இது மாபெரும் தவறாகும். ஆனால் இது பிழையான நினைப்பு. இலங்கை அதன் சுயாட்சியை இழக்க நேரும். இந்தியாவுக்குத் தலையையும், சீனாவுக்கு வாலையும் காட்டும் இச்செயற்பாடு மிகவும் முட்டாள்தனமானது. இந்தியாவை மீறி சீனாவுடன் நட்பைப் பேணுவது ஆபத்தானது.

இலங்கை அரசு ஊடகச் சுதந்திரத்தைக் கொலைசெய்து விட்டது. ஐ.நாவின் சர்வதேச யுத்தக் குற்ற விசாரணைகளுக்கு இடம் கொடுக்காமல் இருப்பதன் மூலம் இலங்கையின் பெயர் கெடுகிறது. இலங்கையே அதன் பெயரைக் கெடுக்கிறது. இலங்கையின் யுத்தக் குற்றங்கள் உள்நாட்டு விடயங்கள் அல்லன. யுத்தக் கைதிகளைப் படுகொலை செய்தல், அப்பாவிப் பொது மக்களைக் கொலை செய்தல், அப்பாவிப் பெண்களைக் கற்பழித்தல் என்பன எப்படி உள்நாட்டு விடயங்கள் ஆகிவிட முடியும்?

இலங்கைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் கிடைக்கப் பெற்றது உண்மையான வெற்றி அல்ல. ஏனெனில் சிவில் யுத்தத்தின் மூலப் பிரச்சினையைக் கண்டறிந்து தீர்க்கப்படவில்லை தமிழ் அரசியல் கட்சிகள் அர்ப்பணிப்பு, பற்றுறுதி, விசுவாசம், நம்பிக்கை , புரிந்துணர்வு ஆகியவற்றுடன் பேச்சுகளை முன்னெடுப்பதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். ஆனால் அரசுத் தரப்பில் இவை ஒன்றையும் காண முடியாமலுள்ளது. (சி)

# நெடுங்கேணியில் கொள்ளையரின் வெறியாட்டத்தில் காயமடைந்தவர் வைத்தியசாலையில் மரணம்

## குடும்பஸ்தரின் மனைவிக்கு தொடர்ந்தும் சிகிச்சை

கொழும்பு, ஜூன் 12

வவுனியா வடக்கு, நெடுங்கேணிப் பகுதியில் கொள்ளையர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் சிகிச்சைகள் பயனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை வவுனியா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, சம்பவத்தின்போது கை துண்டிக்கப்பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள குறித்த குடும்பஸ்தரது மனைவி தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகிறார்.

நெடுங்கேணிப் பகுதியில் அண்மையிலேயே மக்கள் மீளக்குடியேற்றப்பட்ட பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த இனந்தெயாத நபர்கள் அங்கிருந்த கணவன் மனைவியைக் கடுமையாகத் தாக்கி வாளால் வெட்டியும், துப்பாக்கியால் சுட்டும் விட்டு அங்கிருந்து நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

கடந்த செவ்வாயன்று இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீட்டுக்குள் புகுந்த நபர்கள் கணவன் மனைவி மீது கடும் தாக்குதலை நடத்தியுள்ளனர். கணவன் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய அவர்கள் மனைவியின் கையை வாளால் வெட்டியுள்ளனர்.

இவ்வாறு கொடூரமான முறையில் தாக்குதல் நடத்திய நபர்கள் வீட்டிலிருந்த நகைகளை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த பெண்ணின் விரலைத் துண்டித்து மோதிரத்தை எடுத்துள்ளதுடன், அவர் அணிந்திருந்த தங்கக் காப்புகளைப் பெறுவதற்காக அவரது ஒரு கையை முழங்கைக்கு மேலாக வெட்டித் துண்டித்துள்ளனர். அதே சமயம், கணவன் மீது துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டதையடுத்து, இருவரும் படுகாயமடைந்தனர்.

இந்நிலையில் குறித்த தம்பதியினரால் தலையணைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்க நகைகள் மற்றும் பணமும் மேற்படி கொள்ளையர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

படுகாயமடைந்த நெடுங்கேணியைச் சேர்ந்த இராசலிங்கம் (வயது - 64) மற்றும் இ.விக்னேஸ்வரி (வயது - 52) ஆகியோர் அயலவர்களால் நெடுங்கேணி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். பின்னர் அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், அவ்விருவருக்கும் வவுனியா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் சிகிச்சைகள் பயனளிக்காத நிலையில் குறித்த குடும்பஸ்தர் நேற்று முன் தினம் அதி காலை உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# ஜனாதிபதி பதவிக்கால நீடிப்புக் குறித்த அரசமைப்பு மாற்றத்திற்கு அங்கீகாரமா?

## ஐ.தே.க. கடும் கண்டனம்

கொழும்பு, ஜூன் 12

ஜனாதிபதி தாம் விரும்பியவாறு எத்தனை தடவைகளாயினும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வகையில் அரசமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் ஜனநாயகத்திற்கு முரணான அரசின் செயற்பாட்டுக்கு ஐக்கிய தேசியக் கட்சி தனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறது - என்று அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அரசின் இந்த ஏகாதிபத்திய வெறியினைத் தோற்கடிக்க அணித்திரளுமாறு அரசியல் கட்சிகள் மற்றும் வெகுஜன அமைப்புகள் மாத்திரமல்லாது நாட்டு மக்களுக்கு ஜயசூரிய அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது, ஜனாதிபதியொருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் பதவி வகிக்க மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் உள்ளிட்ட அரசமைப்புத் திருத்தங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது என தெரியவருகிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழித்து விட்டு, நாடாளுமன்ற அதிகாரத்தை ஏற்படுத்துவதாக அரசு 1994 ஆம் ஆண்டு மக்களுக்கு வாக்குறுதியளித்திருந்தது. 1994 ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி இரண்டு முறை பதவி வகித்த போதிலும் அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

அதேபோல் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவும் இதே வாக்குறுதிகளை வழங்கினார்.

தான் அதிகாரத்திற்கு வந்ததும் நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதாகக் கூறினார். அத்துடன் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு, அதே வாக்குறுதியை வழங்கினார். தற்போது இந்த வாக்குறுதிகளை புறந்தள்ளிவிட்டு, தான் விரும்பிய தடவைகள் அந்தப் பதவியை வகிக்கும் வகையில் மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியை ஒரு தலைப்பட்சமாக பயன்படுத்தி, சர்வாதிகார தோரணையில் செயற்பட்டு வருவது நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பாரதூரமான நிலைமையாகும்.

- இப்படி இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# அரசின் பொருளாதாரக் கொள்கைளால் உணவு உற்பத்தியில் நாடு படுகுழியில்!

## ஐ.தே.கட்சி எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 12

இலங்கைக்கு 55 சதவீதமான உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. உணவு உற்பத்தியில் நாடு எங்கே செல்கின்றது என்பதை இதிலிருந்தே புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது'' - என்று ஐ.தே.கட்சியின் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹஷீப் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் விசேட வியாபாரப் பண்ட அளவீட்டு வட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் குறித்து பேசும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

நீங்கள் கடந்த ஏப்ரல் 8 ஆம் திகதி தேர்தலில் பாரிய வெற்றி பெற்றீர்கள். எனவே, நீங்கள் மக்களின் எதிர்பார்ப்புக்களையும் அபிலாஷைகளையும் நிறைவேற்றுவது உங்கள் பொறுப்பாகும். இவற்றை நீங்கள் குறையாக நிறைவேற்றுகின்றீர்களா என்பதை கண்காணிப்பதே எமது பொறுப்பாகும். பால்மா விலை அதிகரிக்கப்படும் எனப் பிரதியமைச்சர் நியோமால் பெரேரா தெரிவித்துள்ளார். மக்கள் மீது சுமையை சுமத்தாமல் பால்மா மீதான வரியை குறைக்க முடியும்.

நாளுக்கு நாள் வாழ்க்கைச் செலவு அதிகரித்துக் கொண்டே போகின்றது. மக்கள் அன்றாட வாழ்க்கைக்கான வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியாமல் தவிக்கின்றனர். சோளத்துக்கான வரிபெருமளவு அதிகரித்துள்ளதால் கோழித்தீன் விலையும் அதிகரித்துள்ளது. இதனால் முட்டை, கோழி இறைச்சி ஆகியவற்றின் விலை அதிகரித்துள்ளது.

வாகனங்களின் வரிகள் 50 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளன. ஆனால், உணவுப் பொருட்களின் விலை பெருமளவு அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. அரசின் பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகவே இந்தநிலை ஏற்பட்டுள்ளது.

- இப்படிக் கபீர் எம்.பி. தெரிவித்தார்.

# உள்ளூராட்சி சபைகளின் எல்லையை மீள்நிர்ணயம் செய்ய அரசு திட்டம்

கொழும்பு, ஜூன், 12

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை மீளவும் வட்டார ரீதியாக நடத்துவதற்கு ஏற்றவகையில் எல்லைகளை மீளநிர்ணயம் செய்யும் முயற்சிகளில் அரசு இறங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசு உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்து வட்டார ரீதியாக உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் முறையைக் கொண்டு வரவுள்ளது.

இந்நிலையில் அதற்கு முன்னோடியாக உள்ளூராட்சி சபைகளின் வட்டார எல்லைகளை மீளநிர்ணயிக்கும் வேலைகளைத் தொடங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

மாவட்ட செயலாளர்கள் தலைமையில் எல்லை நிர்ணயக் குழுக்களை அமைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுடன் சேர்ந்த இயங்குமாறு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

கிராம அலுவலர் பிரிவின் சனத்தொகை மற்றும் அதன் அமைவிடம் ஆகியவற்றைக் கொண்டு இந்த வட்டார எல்லைகள் நிர்ணயம் செய்யப்படவுள்ளன.

புதிதாக அமைக்கப்படவுள்ள வட்டாரங்கள் ஒவ்வொன்றினதும் மக்கள்தொகை, ஆகக் குறைந்தது 800 ஆகவும், ஆகக் கூடியது 2400 ஆகவும் இருக்கும். புதிய நடைமுறைகளின்படி, உள்ளூராட்சி சபைகளின் தலைவரை உறுப்பினர்களே தெரிவு செய்வர் எனக் கூறப்படுகிறது.


வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 821 திகதி: 10.06.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| D | 15 | 29 | 38 | 49 | 17 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 16,282,107.50 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 2,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 290 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 13820 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 194123 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 8,244,460.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை 16,572,355.50

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை 234/2, காலி வீதி, கொழும்பு 03. அவசர தேவைக்கு: 2473360, 2433631 இணையம்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நெற் செய்கையில் ஈடுபடும் கணேசபுரம் விவசாயிகளுக்கு மானிய உரம் உரிய காலத்தில் வழங்கப்படவில்லை

## தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் விசனம்

கிளிநொச்சி, ஜூன் 12

கிளிநொச்சியின் கணேசபுரம் கிராமத்தில் நெற்செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய உரம் உரிய காலத்தில் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நெல் விதைக்கப்பட்டு இரு வாரங்களில் போடப்பட வேண்டிய உரம் நான்கு வாரங்களுக்கு மேலாகியும் வழங்கப்படவில்லை. இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களிடம் விவசாயிகள் கேட்ட போதும் திருப்தியான பதில் எதுவும் கிடைக்கவில்லை எனவும், இடப்பெயர்வின் பின் நடைபெறும் முதலாவது செய்கைக்கு இவ்வாறான நிலை காணப்படுவது விவசாயிகள் மத்தியில் விசனத்தையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இரு வாரங்களுக்கு முன் இப்பகுதி வாய்க்கால்களில் குறைந்தளவு நீர் வந்தமையால் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கிய விவசாயிகளுக்கு ஓரளவு நீர்ப் பிரச்சினை தீர்ந்த போதிலும், தற்போது உரம் உரிய காலத்தில் வழங்கப்படாமை பெரும் பிரச்சினையாகமாறியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவிடயத்தில் அக்கறை கொண்டு விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வர வேண்டும் என மீள் குடியமர்ந்துள்ள விவசாயிகள் கோருகின்றனர். (50-405)

## பழைய மாணவர்சங்கத்தின் போஷகராக சோதிநாதன்

கிளிநொச்சி, ஜூன் 12

கிளிநொச்சி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் போஷகராக ஓய்வு பெற்ற கல்லூரியின் முன்னாள் அதிபர் ந.சோதிநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2ஆம் திகதி உதயனில் வெளியான செய்தியில் ந.சோதிநாதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதாக வந்த செய்தி தவறானதாகும். கல்லூரியின் தற்போதைய அதிபரான க.இரத்தினகுமாரே சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவராவார்.

(50 - 405)

## மீள் எழுச்சித்திட்ட அறிமுக நிகழ்வு உருத்திரபுரத்தில் நடைபெற்றது

கிளிநொச்சி, ஜூன் 12

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்டு வரும் மீள் எழுச்சித்திட்ட அறிமுக நிகழ்வு கடந்த 8 ஆம் திகதி 9 மணிக்கு மீள் எழுச்சித்திட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட பதில் பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆர். இராஜசுவேந்திரன் தலைமையில் உருத்திரபுரம் சந்தைக் கட்டடத்தில் ஆரம்பமானது.

இத்திட்டமானது மீள்குடியமர்ந்த முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுடன் தன்னம்பிக்கை, சுயகௌரவம் ஆகியவற்றை வளர்த்து அவர்கள் தங்களைத் தாங்களே நெறியாழ்கை செய்ய வைத்து வரக்கூடியவர்களாக மாற்றும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன் கீழ் இயலளவு விருத்தியைக் கட்டியெழுப்புவதற்கான தொழில்சார் பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி, வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பயிற்சி என்பன வழங்கப்படும் எனவும், உட்கட்டுமான விருத்திக்காக கிராமத்தில் இனங்காணப்படும் அத்தியாவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி வழங்கப்படும் எனவும் வாழ்வாதார செயற்பாட்டிற்காக சுய தொழில் உதவிகள் மூலம் நிலைத்திருக்கக் கூடிய வாழ்வாதாரம் ஏற்படுத்தப்படும் எனவும் விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் கிராம அபிவிருத்தி அமைப்பு தொடர்பாகவும் விளக்கப்பட்டது. இதில் திட்டத்தின் சமூகவலுவூட்டுனர்களான நா.பூலோகராசா, ஞா.புண்ணியசீலன் ஆகியோரும் பிரதேச படை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (50-405)

## மன்னாரில் இன்றும் நாளையும் சர்வோதயத்தின் ஒன்று கூடல்

மன்னார், ஜூன் 12

மன்னாரில் முதன் முறையாக இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் சர்வோதய தலைமைப் பணிமனையில் 'தசோதய'ஒன்று கூடல்நிகழ்வுகள் மன்னார் புனித சவேரியர் ஆண்கள் தேசியக் கல்லூரியில் ஆரம்பமாகியுள்ளன. இதற்கான முழு ஏற்பாடுகளையும் மன்னார் சர்வோதய மாவட்ட நிலையம் செய்துள்ளது.

இன்று நடைபெறவுள்ள ஆரம்ப நிகழ்வுகளில் சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ.ரி.ஆரியரத்ன, மன்னார் மறை மாவட்ட ஆயர் கலாநிதி இராயப்பு யோசேப் ஆண்டகை, மன்னார் மாவட்ட அதிபர் அ.நீக்கொலஸ்பிள்ளை, வட மத்திய மாகாண இராணுவத் தளபதி அமரசிங்க, மன்னார் பிரதேசச் செயலர் ஸ்ரான்லி டிமெல், 215 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி கி. விக்குமலியனகே, சிவில் நிர்வாக அதிகாரி நஸிந்த மஹாவிதானகே, மன்னார் சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி கொடிதுவக்கு, ஒக்ஸ் பாம் திட்ட முகாமையாளர் மார்டீன் லெண்டர் உட்படப் பலரும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் நாட்டில் 25 மாவட்டங்களிலுமிருந்து சுமார் 700 பேர்கள் வரையில் கலந்து கொள்ளவுள்ளதாக நிகழ்ச்சி அமைப்பாளர் யுகேந்திரன் அறிவித்துள்ளார். (50-80)

வன்னி வலம்

## காலாவதியான சிமெந்து வழங்கப்பட்டதாக மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஜூன் 12

வன்னியில் மீளக் குடியேறிய மக்களுக்கு தற்காலிகக் குடிசைகள் அமைப்பதற்காக வழங்கப்பட்டுவரும் சிமெந்துப் பைக்கற்றுக்கள் காலம் கடந்து விட்டதால் தரம் குறைந்து காணப்படுவதாகவும், கொங்கிறீற் கல்லைப் போல் இருக்கும் இந்த சிமெந்தை அடித்து, உடைத்து மாவாக்கிய பின் பயன்படுத்துவதாகவும் பொதுமக்கள்தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவிலுள்ள அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை வன்னிப் பகுதியில் சொந்த இடங்களில் மீளக் குடியமர அரசாங்கம் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து தங்கள் காணிகளை நாடிச் சென்று துப்புரவு செய்வதில் ஈடுபட்டுள்ளார்கள்.

வன்னிப் பகுதியில் இடம்பெற்ற போர்க்காலச் சூழ்நிலையின் போது பெரும்பாலான வீடுகள் உடைக்கப்பட்டுத் தரை மட்டமாக இருப்பதனால் அங்கு செல்லும் மக்கள் தங்கி வாழ்வதற்காகத் தற்காலிக குடிசைகள் அமைப்பதற்காக அரசாங்கம் கூரைத்தகடுகளும், சிமெந்துப் பைக்கற்றுக்களும் வழங்கி வருகின்றது.

இவர்களுக்கு வழங்கப்படும் சிமெந்துப் பைக்கற்றுக்கள் பல மாதங்களுக்கு முன்பு இந்திய அரசாங்கத்தால் இலங்கை அரசாங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டவை என்று கூறப்படுகின்றது. பல மாதங்களாக இருப்பில் அடுக்கி வைக்கப்பட்ட இந்தச் சிமெந்து தற்பொழுது கொங்கிறீற் கல்லைப் போலமாறியுள்ளது.

தரம் குறைந்து காணப்படும் இந்தச் சிமெந்தை அடித்து, உடைத்து மாவாக்கி மக்கள் பயன்படுத்துகின்றார்கள். இது குறித்து மக்கள் கவலையும், அதிருப்தியும் அடைந்துள்ளார்கள். (50-115)

## மக்கள் வங்கியின் கிளிநொச்சிக் கிளையை மத்திய வங்கி ஆளுநர் திறந்து வைத்தார்

கிளிநொச்சி, ஜூன் 12

மக்கள் வங்கியின் கிளிநொச்சிக்கிளை கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் கடந்த 6 ஆம் திகதி சம்பிரதாய பூர்வமாக இலங்கை மத்திய வங்கியின் அளுநர் அஜித் நிவாட் ஹப்ராலால் திறந்து வைக்கப்பட்டது.

நண்பகல் 12 மணியளவில் ஆரம்பமான நிகழ்வில் முன்னதாக கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலில் விசேட பூசைகள் நடைபெற்று அங்கு விருந்தினர்கள் அழைக்கப்பட்டு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கான அன்பளிப்பான ஒரு லட்சம் ரூபாவுக்கான காசோலையினை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் ஹப்ரால் ஆலய பிரதம குருவிடம் கையளித்தார். பின்னர் அங்கிருந்து மங்கள வாத்தியங்கள் இசைக்க பாடசாலை மாணவர்களின் காவடி நடனம், வரவேற்பு நடனம் ஆகியவற்றுடன் மக்கள் வங்கி கட்டடத்துக்கு விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

அங்கு மத்திய வங்கியின் ஆளுநர் வங்கியின் நினைவுக் கல்லையும், வங்கியையும் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்து வங்கி நடவடிக்கைகளையும் ஆரம்பித்துவைத்தார். அத்துடன் ஜனாதிபதியின் ஆலோசகரும் வங்கி நடவடிக்கைகள் சிலவற்றை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து மக்கள் வங்கியின் கிளிநொச்சிக்கிளை முகாமையாளர் சிறிகௌரிபாலன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் மத்திய வங்கியின் ஆளுநர் சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் தலைவர் ய.கருணாஜீவ, மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் பி.வி.பத்திரன ஆகியோரும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபர் ப.ஜெயராணி, கரைச்சி பிரதேசசபையின் விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் ஆகியோர் உட்பட பல திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டனர். (50 - 405)



மக்கள் வங்கியின் கிளை அண்மையில் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் மங்கள வாத்தியம் சகிதம் அழைத்து வரப்படுவதையும் மக்கள் வங்கிக் கிளையை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் ஹப்ரால் நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் முதலிரு படங்களிலும், வங்கியின் ஏ.ரி.எம். இயந்திரத்தை ஜனாதிபதியின் வங்கியியல் ஆலோசகர் கலாநிதி திருமதி ராணி ஜெயமஹா ஆரம்பித்து வைப்பதையும், மத்திய வங்கியின் ஆளுநர் ஒரு லட்சம் ரூபா காசோலையை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய பிரதம குருவிடம் வழங்குவதையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள் : கிளிநொச்சி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழ்த் தட்டெழுத்தாளர் தேவை

தமிழ் ரைப்பிங் நன்கு செய்யக்கூடிய பெண்பிள்ளை பகுதிநேர வேலைக்குத் தேவை. ஊதியம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொபே: 0778296998, 0212225492

## மரக்கடைச்சல் வேலைக்கு ஆள் தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் இயங்கிவரும் மரவேலை செய்யும் தொழிற்சாலைக்கு மரக்கடைச்சல் வேலை தெரிந்தவர்கள் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல: 4033,
மே/பா.உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.

## யாழ்.வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடி ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம்: ஆலய முன்மண்டபம்
நாள்: 28.06.2010 திங்கட்கிழமை
நேரம்: பி.ப.4 மணி
அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி தாழ்மையுடன் வேண்டுகிறோம்.
பரிபாலனசபை.
(99307)

## கணனிக் கல்வி

* Ms office * DTP * Hardware * Web Design
* Computerized Accounting * Graphic Design
* Internet & E-mail * Kids Program

அனைத்துக் கற்கை நெறிகளும் தனிப் பட்ட கவனிப்புடன் கற்பிக்கப்படும்.

**Sky Computer (pvt) Ltd**
162, Main Steet, Jaffna. Tel: 0212221417

## காணி விற்பனைக்கு

இல.43,அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு சுன்னாகத்தில் 8 பரப்பு வெறுங் காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவோ, தோட்டம் செய்யவோ உகந்தது.
தொடர்புக்கு: 0714102174/0771622770

## 90 உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

### ஐ.தே.க. எச்சரிக்கை

கொழும்பு,ஜூன் 12
ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சுமார் 90 உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வுள்ளது - என்று அக்கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கட்சிக்கு எதிராகவும் அரசுக்குச் சார்பாகவும் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் அவர் கூறினார்.

ஐ.தே.க.வின் ஒழுக்காற்றுக் குழுவால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் பிரகாரமே அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் கட்சியின் செயலாளர் மேலும் சுட்டிக் காட்டினார்.
(சி)

உங்களை உணருங்கள் "ஜெய்குருதேவ்" அன்பில் மலருங்கள்



## வாழும் கலை வழங்கும்

THE ART OF LIVING

### ஸ்ரீ ஸ்ரீ யோகா

### 14 வயதுக்கு மேல்


* உடல் எடை குறையவேண்டுமா?
* ஞாபக சக்தி அதிகரிக்கவேண்டுமா?
* உடல், உள உபாதைகளில் இருந்து விடுபடவேண்டுமா?

பயிற்சியில் கலந்து பலன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறது
வாழும் கலைக் குடும்பம்

இடம் : கம்பன் கோட்டம், நல்லூர்
காலம் : இன்று (12.06.2010) சனிக்கிழமை
நேரம் : மாலை 4.30 மணிக்கு
(99415) தொ.பே. 0777749593, 0770474757

## ஈராண்டு நினைவலைகள்

மலர்வு 27 * 06 * 1927



உதிர்வு 03 * 06 * 2008

### அமரர் தம்பிப்பிள்ளை இராசரெத்தினம்

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம்-ஐயா
அன்பை உடைத்து விட்டீர்
எம்மைத் தவிக்க விட்டீர்
எப்பொழுதும் எம் இதயத்தில்
வாழ்ந்து கொண்டிருக்கிறீர் ஐயா
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

''இராசகலகிரி'
ஸ்ரீஞானவைரவர் கோயிலடி,
நாரந்தனை கிழக்கு,
ஊர்காவற்துறை.
குடும்பத்தினர்.
(99339)

## ஆசார்யாபிஷேக முகூர்த்தப் பத்திரிகை

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விகிர்தி வருஷம் வைகாசித் திங்கள் 30 ஆம் நாள் நாளை (13.06.2010) ஞாயிற்றுக்கிழமை மிருகசீரிட நஷத்திரமும், சித்தயோகமும் கூடிய காலை 6.52 மணி முதல் 8.12 மணிவரையுள்ள மிதுன லக்ன சுபமுகூர்த்தத்தில்

சிவஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்கள் - நவலட்சுமி தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன்

### 'கலைமாணி' பிரம்ம ஸ்ரீ கணேசராஜ சர்மாவுக்கு

விஷேட தீக்ஷை, நிர்வாணதீக்ஷை, ஆசார்யாபிஷேகம் ஆகியன அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் நிகழத் திருவருள் கூடியுள்ளது. அத்தருணம் குடும்ப சமேதராய் வருகைதந்து கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கின்றோம்.

தீக்ஷா குரு: ''வேதாகம திலகம்'' சிவஸ்ரீ கு.சோமஸ்கந்தக் குருக்கள்.

இல: 70, இலந்தைக்குளம் வீதி, அரியாலை. 0718580855 [99320]
பிரம்மஸ்ரீ சோ.கணேசராஜசர்மா B.A. யாழினி B.F.A.தம்பதிகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி பசுபதி விஜயலட்சுமி(சின்னக்கிளி)



கொட்டடி முத்தமிழ் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவரும் அனலை தீவைச் சேர்ந்தவருமான திருமதி பசுபதி விஜயலட்சுமி 09.06.2010 புதன்கிழமை அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி ஐயம்பிள்ளை (அனலைதீவு) - சின்னம்மா (கொட்டடி) தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான ம.சவரிமுத்து - ஆச்சிமுத்து தம்பதியரின் பாசமிகு பெறாமகளும் காலஞ்சென்றவர்களான ந.மாரிமுத்து, நாகமுத்து ஆகியோரின் மூத்த மருமகளும் காலஞ்சென்ற மாரிமுத்து பசுபதியின் அன்பு மனைவியும் கனகராஜா(ரவி - ஆசிரியர்), இரத்தினராசா(சேகர்), ஆனந்தராசா(ஜோச்), சந்திரன், ஜெயக்குமாரி(ஜெயா), பிறேமகுமாரி (பிறேமா, முத்தமிழ் சிறுவர் பாடசாலை ஆசிரியை), விஜயகுமாரி(யாழினி), இராஜகுமாரி(ஜெசிந்தா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுமந்தா, சாந்தமனோகரி, சீ.செல்வம், க.தயாபரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரோசன், மௌனிசன், விபீசன், றபீனா, லவன்செயன், ரிசிகேஷன், துசிகேஷன்(க.பொ.த.உயர்தரம், யாழ். மத்திய கல்லூரி), சிவதி(யாழ்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), கனுசாந்(யாழ்.மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் க.பரமானந்தம்(ஆத்திசூடி வீதி) சு.நவரத்தினம்(காந்தி), அமரர்கள் சுமத்திரை(கொக்குவில்) கந்தசாமி, பாலசிங்கம், மற்றும் வள்ளியம்மை அமரர் மணி, அமரர் புலேந்திரராசா மற்றும் லீலா, கலா, தனபாலசிங்கம்(காசாளர், தெ.ப.கூ.சங்கம், யாழ்ப்பாணம்), வைரமுத்து, மகாலிங்கம், விசுவலிங்கம், சின்ராசா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் அமரர் சரஸ்வதி மற்றும் தங்கம்மா, அமரர் சிவராசா மற்றும் கனகசபை(சின்னண்ணை), கண்மணி, சற்குணம்(தேவி), பாக்கியம்(கோகிலா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.06.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல. 11, முத்தமிழ் வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.*
தொ.இல. 021 2228017 (99416)
தகவல்:
குடும்பத்தினர்.

## நெஞ்சை விட்டகலா ஓராண்டு நினைவஞ்சலி

### திருமதி தவமணிதேவி மகேந்திரன்



(நூலகர், யாழ்.மாநகர சபை)
திதி: வைகாசி அமாவாசை (12.06.2010)
அன்னை மடியில் 18.11.1955
இறைவன் திருவடியில் 24.05.2009

எம் இனிய அம்மாவே!
எம்மைப் பாதி வழியில் பரிதவிக்க விட்டுச் சென்று,
வருடம் ஒன்று ஆனதம்மா, ஆனால் எங்கள் கண்ணீரோ ஓயவில்லை
கோடி தவமிருந்தாலும் தேட முடியுமா உங்களை?
தினமும் ஏங்கித் தவிக்கின்றோம், ஏன் இந்த விதி எமக்கு?
ஒரு கூட்டுப் பறவைகளாய், ஒன்று கூடி வாழ்ந்திருந்தோம்,
யார் கண்தான் பட்டதுவோ, நாம் உங்களைப் பிரிவதற்கு,
போன இடம் தெரியவில்லை, பொங்கும் நம் கண்ணீரும்,
கண் துடைப்பார் யாருமின்றி, கலங்குதம்மா நமது கண்கள்,
உன்னை உருக்கி எம்மையெல்லாம் வாழவைத்த தெய்வமே,
நீ எங்கு சென்றாலும், எங்களுக்கு அணையாத தீபமாக,
இருந்து வழி காட்டுவாய், மீண்டும் மறுபிறப்பெடுத்தென்றாலும்
மறுபடியும் எங்களிடம் வாருங்கள் அம்மா,
உங்கள் ஆத்மா சிவன் அம்மன் திருவடியில்,
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

*16/25, சிவன் கோயில் றோட்,*
*திருநெல்வேலி.* [99274]
*உங்கள் பிரிவால் துயருறும்:*
**கணவர்,பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் நடக்கவுள்ள ஒலிம்பிக் நிகழ்வில் ஆயிரம் வீர, வீராங்கனைகள் ஒன்று கூடுவர்

## கொழும்பிலிருந்துவரும் கைப்பந்தாட்ட அணியின் காட்சிப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 12

தேசிய ஒலிம்பிக்தின நிகழ்வுகள் எதிர் வரும் 23ஆம் திகதி புதன்கிழமை துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் ஆரம்பமாக ஒலிம்பிக் தீபம் ஏற்றிச்செல்லப்படும். ஒலிம்பிக் தீபத்தை தொடர்ந்து 1000 வீர, வீராங்கனைகள் பங்கு கொள்ளும் 5 கிலோ மீற்றர் மரதன் சைக்கிள் ஓட்டம் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பங்குபற்றும் வீர, வீராங்கனைகளுக்கு தேசிய ஒலிம்பிக் சபை ரீ- சேர்ட்களும், தொப்பிகளும் வழங்கப்படவுள் ளன.

ஒலிம்பிக் தீபம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு திருநெல்வேலியை அடைந்து அங்கிருந்து கே.கே.எஸ்.வீதியை அடைந்து மீண்டும் துரையப்பா விளையாட்டரங்கை வந்தடையும். நிகழ்வில் 5 கல்வி வலயங்களையும் சேர்ந்த 1000 வீர, வீராங்கனைகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வு முடிவடைந்ததும் பாரம்பரிய கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. இதனைத் தொடர்ந்து 'கைப்பந்தாட்டம்' (Hand Ball) அறிமுக நிகழ்வு இடம்பெறும். பின்னர் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவிருக்கும் கைப்பந்தாட்ட அணியின் காட்சிப் போட்டி இடம்பெறும்.

தேசிய ஒலிம்பிக்தினத்தை ஒட்டி 96 பாடசாலைகளின் மாணவர்களிடம் இருந்து வலய ரீதியாக தெரிவுசெய்யப்படும் மாணவர்களிடையே சித்திரம், வினாடிவினாப் புதிர்ப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன. (6-23-86)




## யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் ஹொக்கி; அதிரடி ஆட்டத்தால் உடுவில் மகளிர் சாதித்தது!

வலிவடக்கு,ஜூன் 12

யாழ்.மாவட்ட ஹொக்கிச் சம்பியனானது உடுவில் மகளிர் கல்லூரி.

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் - உடுவில் மகளிர் கல்லூரியும் மோதின.

இரு அணிகளும் போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை உற்சாகமாக விளையாடி ரசிகர்களை மிகவும் உற்சாகப்படுத்தின.

முதல்பாதி ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி ஒரு கோலைப் பெற்றுக் கொண்ட நிலையில் முதல் பாதி ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் புது உற்சாகத்துடன் மோதிக் கொண்டன. இந் நிலையில் உடுவில் மகளிர் கல்லூரி மேலும் ஒரு கோலைப்பெற்று வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டது.

யாழ்ப்பாணக் கல்லூரி கோல் பெற எடுத்த நடவடிக்கைகள் யாவும் உடுவில் மகளிர் கல்லூரியினால் தொடர்ந்து முறியடிக்கப்பட்ட நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் உடுவில் மகளிர் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை வெற்றிபெற்று யாழ்.மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்தை மல்லாகம் குளமாங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை பெற்றுக்கொண்டது. (6-86)

## மாகாண மட்ட உடற்பயிற்சிப்போட்டி இன்று கொக்குவில் இந்து மைதானத்தில்

வலி. வடக்கு,ஜூன் 12

வடமாகாண கல்வித் திணைக்களம் கல்வி வலயங்களுக்கு இடையே மாகாண மட்டத்தில் நடத்தும் உடற்பயிற்சிப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். போட்டியில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**ஆண்கள் பிரிவு**

வவுனியா அண்ணா நகர் பரமேஸ்வரா வித்தியாலயம், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், இளவாலை சென்ஹென்றீஸ் கல்லூரி, ஊர்காவற்றுறை செ்ன். அன்ரனீஸ் கல்லூரி, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்.

**பெண்கள் பிரிவு**

வவுனியா றம்பைக்குளம் அரசினர் மகா வித்தியாலயம், வவுனியா சைவப்பிரகாச பெண்கள் கல்லூரி, மன்னார் செ்ன்.சேவியர் மகளிர் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி. (6-86)

## மாவட்ட செயலகத்தின் கரப்பந்தாட்டம்; கோப்பாய், தெல்லிப்பழை அணிகள் சம்பியன்!

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்.மாவட்ட செயலகத்தின் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் சம்பியன் ஆகின கோப்பாய் பிரதேச , தெல்லிப்பழை பிரதேச செயலக அணிகள்.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிடையே நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலில் நடந்த ஆண்களுக்கான ஆட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலகத்தை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மோதியது.

ஐந்து செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் முதல் மூன்று செற்களையும் 25:16, 25:15, 25:21 எனும் புள்ளிகள் அடிப்படையில் கோப்பாய் பிரதேச செயலக அணி கைப்பற்றியது.

பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியை எதிர்த்து சாவகச்சேரி பிரதேச செயலக அணி களமிறங்கியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி முதல் மூன்று செற்களையும் கைப்பற்றி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (6-23)

## எல்லேப் போட்டிகள்

வலி.வடக்கு, ஜூன் 12

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு, பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தும் பெண்களுகான எல்லே போட்டியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடை பெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி எதிர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி.
* தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி எதிர் கரவெட்டிப் பிரதேச செயலக அணி.
* சங்கானை பிரதேச செயலக அணி எதிர் நல்லூர்ப் பிரதேச செயலக அணி.
* சாவகச்சேரி செயலக அணி எதிர் கோப்பாய்ப் பிரதேச செயலக அணி.
* யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி எதிர் உடுவில் பிரதேச செயலக அணி.
* இரண்டாம் சுற்றில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி மோதவுள்ளது. (6-86)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஜூன் 12

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவு யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தும் பெண்களுக்கான கபடிப்போட்டியில் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி எதிர் கரவெட்டிப் பிரதேச செயலக அணி.
* தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி எதிர் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி.
* பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி எதிர் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி.
* சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக அணி எதிர் நல்லூர்ப் பிரதேச செயலக அணி.
* இரண்டாம் சுற்றிலிருந்து சங்கானைப் பிரதேச செயலக அணி மோதவுள்ளது. (6-86)

## செஞ்சிலுவைச் சங்கத்தின் விளையாட்டுப் போட்டிக்கு 20 யாழ்.பாடசாலைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 12

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள இளைஞர் மாவட்ட மட்ட வருடாந்த விளையாட்டுப் போட்டிக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து 20 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதனடிப்டையில் யாழ்.வலயத்திலிருந்து நான்கு பாடசாலைகளும், வலிகாமம் வலயத்திலிருந்து ஒன்பது பாடசாலைகளும், வடமராட்சி வலயத்திலிருந்து மூன்று பாடசாலைகளும் தென்மராட்சி வலயத்திலிருந்து மூன்று பாடசாலைகளும், தீவக வலயத்திலிருந்து ஒரு பாடசாலையும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (50-16)

## பெண்கள் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களின் பெண்கள் உதைபந்தாட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. மாவட்டத்தைச் சேர்ந்த 10 பிரதேச செயலகங்களின் அணிகள் பங்குபற்றவுள்ளன. (50-207)

## மொபிற்றல் விருது நிகழ்வில் 3 யாழ்.பாடசாலைகள்

32 ஆவது ஒவ்சேர்வர்- மொபிற்றல் பாடசாலைக் கிரிக்கெட் வீரர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் இருந்து வெற்றிபெற்ற மூன்று பாடசாலை அணிகள் பங்குபற்றுகின்றன.

நாளை மறுதினம் திங்கட்கிழமை கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரியின் கிரிக்கெட் அணிகளே பங்குபற்றவுள்ளன.

இந் நிகழ்வில் 11 பாடசாலைகளின் கிரிக்கெட் அணிகள் பங்குகொள்வதுடன், மாபெ ரும் கிரிக்கெட் கண்காட்சிப் போட்டியும் நடைபெறவுள்ளது என்பது குறிபிடத்தக்கதாகும். (6-23)



அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இலங்கை அணித் தலைவர் சங்கக்கார சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு விஜயம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

கல்லூரி அதிபர் ஜெரோ செல்வநாயகம் சங்கக்காரவை அழைத்து வருவதையும் மாணவர்களிடையே அவர் உரையாற்றுவதையும் கல்லூரியின் வீரர் ஒருவர் அறிமுகம் செய்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங். - மஹிந்த - தமிழக எம்.பிக்கள் நடத்தும் நாடகம் மாபெரும் கொடுமை

## தமிழக பா.ஜ.கட்சித் தலைவர் சீற்றம்



சென்னை,ஜூன் 12

இலங்கையில் நடைபெறுகின்ற கொடுமையைவிட, ஆளும் காங்கிரஸ் கட்சி, தி.மு.க. மற்றும் மஹிந்த ராஜபக்ஷ நடத்தும் நாடகம் பெரும் கொடுமையாக உள் ளது - என்று பா.ஜ.க. மாநிலத் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் வேதனையுடன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்படக் காரணமாகவிருந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த டில்லி வந்திருக்கிறார்.

அவருக்கு இந்திய அரசு ஆடம்பர வரவேற்பை அளித்துள்ளது. ஏற்கனவே இலங்கை சென்று மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து வந்த தமிழக எம்.பிக்கள், இப்போது மீண்டும் புதுடில்லியில் அவரைச் சந்தித்துள்ளனர். இது வெறும் சம்பிரதாய சந்திப்பாக நடைபெற்றுள்ளது.

ஈழத் தமிழர்கள் தங்கள் சொந்த இடங்களில் இன்னும் 3 மாதங்களில் குடியமர்த்தப்படுவார்கள் என்று எப்போதும் சொல்வதையே இப்போதும் மஹிந்த ராஜபக்ஷ சொல்லியிருக்கிறார். அதனைக் கேட்டு, ஏதோ பெரிய சாதனை செய்து விட்டதைப் போல தமிழக எம்.பிக்கள் திரும்பி வந்துள்ளனர்.

இலங்கையில் நடைபெறும் கொடுமையைவிட, ஆளும் காங்கிரஸ் கட்சி, தி.மு.க. மற்றும் ராஜபக்ஷ நடத்தும் நாடகம் பெரும் கொடுமையாக உள்ளது.

இந்தியா - இலங்கை இடையே இப்போது 7 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. ஆனால், இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி மேம்போக்கான ? கண்துடைப்பான ஒரு ஒப்பந்தம் தவிர, திட்டவட்டமான நடவடிக்கைகள் எதுவும் இல்லை.

இதிலிருந்தே, தமிழர்களை ஒழிப்பதில் இந்தியாவும், இலங்கையும் கூட்டாகச் செயற்படுவது வெட்ட வெளிச்சமாகிறது.

இந்தியாவில் தேடப்படும் குற்றவாளியான இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தாவையும் மஹிந்த தன்னுடன் அழைத்து வந்திருக்கிறார். இந்திய நாட்டின் சட்டம், ஒழுங்கு எவரையும் விட்டு வைக்கா என்பதைப் புரிய வைக்க வேண்டும். எனவே, டக்ளஸ் தேவானந்தாவை உடனடியாகக் கைது செய்ய வேண்டும்.

இலங்கையில் நடக்கும் மறு சீரமைப்புப் பணிகளில் சீனர்களைப் பயன்படுத்தக் கூடாது. அந்தப் பணிகளைத் தமிழர்களுக்கு வழங்க மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்திய அரசு வலியுறுத்த வேண்டும். - இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈழத் தமிழர் படுகொலை மீதுதான் இந்திய - இலங்கையின் நட்புறவா?

## விஜயகாந்த் ஆவேசக் கேள்வி



சென்னை,ஜூன் 12

ஈழத் தமிழர்களின் படுகொலை மீதுதான் இந்தியா - இலங்கை நல்லுறவு ஏற்படவேண்டுமா - என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கேள்வியெழுப்பியுள்ளார்.

ஆயுதம் ஏந்திப் போரா டியும் கிடைக்காத சமத்துவம் இப்போது அநாதைகளாக இருக்கும் ஈழத் தமிழர்க ளுக்கு எப்படி கிடைக்கப்போகிறது - என் றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கை நாடாளுமன்றத்தில் இருந்து தமிழர் பிரதிநிதிகள் வெளியேற்றப்பட்ட பின்னர், அந்நாட்டின் அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டதால் அதனடிப்படையில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண இயலாது.

இலங்கைத் தமிழர்களுக்கு சமவாய்ப்பு மறுக்கப்பட்டதுதான் இன்றைய அவல நிலைக்குக் காரணம். அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் வகையில், அரசியல் தீர்வு காணப்படும் என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சொல்வது சிங்களவர்கள் ஏற்றுக்கொள்ளாத எதையும் தமிழர்களுக்கு வழங்கமுடியாது என்பதையே காட்டுகிறது.

ஆயுதம் ஏந்திப் போராடியும் கிடைக்காத சமத்துவம் இப்போது அனாதைகளாக இருக்கும் தமிழர்களுக்கு எப்படி கிடைக்கப்போகிறது. குறைந்த பட்சம் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கி அழிக்கும் பிரச்சினைக்குக் கூடத் தீர்வு காணப்படவில்லை.

தமிழர்களின் படுகொலை மீதுதான் இந்தியா - இலங்கை நல்லுறவு ஏற்பட வேண்டுமா?

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியச் செய்திகள்

# இலங்கையுடன் கைகோத்துச் செயற்படும் ஏயார்டெல் நிறுவனத்தை புறக்கணிக்குக!

## ஓரிரு நாட்களில் போராட்டம்; சீமான் அறிவிப்பு



சென்னை, ஜூன் 12

இலங்கை அரசுடன் கைகோத்து தனது வணிக நலன்களை மேம்படுத்தி வரும் ஏயார்டெல் கைத்தொலைபேசி நிறுவனத்தை எதிர்த்து விரைவில் இந்தியா முழுவதும் தனது தலைமையில் போராட்டம் நடத்தப்படும் - என்று 'நாம் தமிழர்' இயக்கத் தலைவர் சீமான் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

பிக்கி வர்த்தக அமைப்பின் தலைவராக உள்ளவர் ராஜன் பார்த்தி மிட்டல். இவருடைய நிறுவனம்தான் ஏயார்டெல். இந்த ஏயார்டெல் நிறுவனம் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை அரசுடன் கைகோத்து தனது வணிக நலன்களை மேம்படுத்திக்கொண்டு வருகிறது.

சர்வதேச நாடுகள் அனைத்தும் இலங்கையைப் போர்க்குற்றவாளி என்றும் அதனைத் தண்டிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி வரும் வேளையில் பிக்கியின் தலைவரான பார்தி மிட்டலோ, இலங்கையை புதிய நாடு என்றும் வர்த்தக விரிவுபடுத்தலுக்கும், முதலீட்டிற்கும் வாய்ப்பளிக்கும் உற்சாகமான நாடு என்றும் வர்ணித்துள்ளார்.

ஏயார்டெல் நிறுவனத்தின் தலைவர் பிக்கியின் தலைவராக இருந்துகொண்டு இலங்கை அரசின் இனப் படுகொலை குற்றத்தை மறைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

இது கொலை செய்யப்பட்ட எமது தமிழினத்தின் நீதி கேட்கும் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதாகவும், எமது துயரங்களை மேலும் அதிகப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

2008ஆம் ஆண்டு ஜனவரியில் இலங்கையின் ஒரு பகுதியில் கொழும்பிலிருந்து புத்தளம்வரை கைத்தொலைபேசிச் சேவையை நடத்த அனுமதி பெற்ற ஏயார்டெல், தற்போது 12 இலட்சம் வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது.

இந்தியாவில் முதன்மையான கைத்தொலைபேசி நிறுவனங்களில் ஒன்றாக இயங்கிவரும் ஏயார்டெல்லிற்கு 13 கோடி வாடிக்கையாளர்கள் உள்ளனர். இவர்களில் ஒரு கோடி 25 லட்சம் வாடிக்கையாளர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர். தமிழனைக் கொல்லும் அரசுடன் உறவு வைத்துக் கொண்டு, தமிழனோடு வணிகமும் செய்யும் மனிதாபிமானமற்ற ஏயார்டெல் நிறுவனம், ஈழத் தமிழினத்தை அழித்த இலங்கையின் இனப் படுகொலைப் போரில் அந்நாட்டிற்கு உதவியது எனவும் குற்றச்சாட்டும் உள்ளது. அந்த உதவிக்குக் கைமாறாகத்தான் அங்கு கைத்தொலைபேசிச் சேவையை நடத்த அனுமதி பெற்றதென்றும் கூறுகின்றனர்.

இதைப்போல இன்னும் எண்ணற்ற இலங்கை - இந்திய நிறுவனங்கள் சிங்கள அரசுக்குத் துணை போயும், அதற்கு ஆதரவாகவும் உள்ளன. அவை அனைத்திற்கு எதிராகவும் போராட்டம் நடத்தவோம்.

இன்னும் இரண்டொரு நாளில் என் தலைமையில் இந்தியா முழுவதும் மிகப் பெரியளவில் இந்தப் போராட்டத்தை நடத்த உள்ளோம். இலங்கை அரசுக்குத் துணை போகும் அனைவரையும் எதிர்ப்போம்.

தமிழினம் வீரம் செறிந்த இனம் மட்டுமல்ல, அறிவில் சிறந்த இனம் என்பதை இந்தப் போராட்டத்தின் வாயிலாக உலகுக்குப் பறை சாற்றுவோம்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரிந்து சென்றவர்கள் இணையும் காலம் இது என்கிறார் கருணாநிதி



சென்னை,ஜூன் 12

தி.மு.கவில் இருந்து சென்றவர்கள் ஒவ்வொருவராக தி.மு.கவில் இணையும் காலம் இது - என்று தி.மு.க. தலைவரும், முதல்வருமான கருணாநிதி தெரிவித்தார்.

ஜெயலலிதா அமைச்சரவையில் அமைச்சராக இருந்த கரூர் ம.சின்னசாமி ஆயிரக்கணக்கான தனது ஆதரவாளர்களுடன் முதல்வர் முன்னிலையில் தி.மு.கவில் இணைந்தார். இதற்கான விழா தி.மு.க. அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் வியாழக்கிழமை நடைபெற்றது.

விழாவில் முதல்வர் பேசியவை வருமாறு -

12 ஆயிரத்துக்கும் அதிகமான தொண்டர்களுடன் முன்னாள் அமைச்சர் சின்னசாமி தி.மு.கவில் இணைந்துள்ளார். திராவிட இயக்கம் எவ்வளவுதான் பிளவுபட்டாலும் மீண்டும் ஒன்றுசேரும். அதனை யாராலும் வீழ்த்த முடியாது என்பதற்கு இந்த இணைப்பு விழா ஒரு சான்றாகும்.

திராவிட இயக்கத்தில் பிரிந்து சென்றவர்கள் திராவிட என்ற அடையாளம் இல்லாமல் செயற்பட முடியாது. திராவிட என்ற அடையாளம் இல்லாமல் செயற்படுபவர்கள் காணாமல் போய்விடுவார்கள். இன்றும் சில கட்சிகள் தத்தித் தத்தி நாங்களும் இருக்கிறோம் என்ற நிலையில் கட்சியை நடத்துவதற்கு திராவிட என்ற அடையாளம்தான் காரணம்.

தி.மு.கவில் இருந்து பிரிந்த சம்பத், திராவிட என்ற சொல்லைத் தவிர்த்து தமிழ்த் தேசியக் கட்சி என்ற பெயரில் கட்சி ஆரம்பித்ததால் அவருக்கு எதிர்காலமே இல்லாமல் போனது.

இங்கிருந்து பிரிந்து சென்றவர்கள் திராவிட என்ற அடையாளத்துடன் செயற்படுவதற்குக் காரணம் மீண்டும் இணைவதற்குத்தான். சில கசப்பான அனுபவங்களால் நண்பர் எம்.ஜி.ஆர். தி.மு.கவில் இருந்து பிரிந்து சென்றாலும் தனது கட்சிக்கு அண்ணா தி.மு.க. என்றுதான் பெயரிட்டார். தனிக் கட்சி தொடங்கினாலும் என்னோடு நட்பாக இருந்தார்.

- இப்படி கருணாநிதி கூறினார்.

# கருணாநிதிக்கு தேர்தல் பயம்

## ஜெயலலிதா தெரிவிப்பு



சென்னை, ஜூன் 12

முதல்வர் கருணாநிதிக்கு இப்போதே தேர்தல் குறித்த பயம் ஏற்பட்டுள்ளது - என்று அ.தி.மு.க. பொதுச்செயலர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கடந்த வியாழக்கிழமை வெளி யிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப் பவை வருமாறு -

முதல்வர் கருணாநிதி தேர்தல் பயத்தில் உறைந்து போயிருக்கிறார் என்பதை அவருடைய சமீபத்திய நடவடிக்கைகள் தெளிவாக உணர்த்துகின்றன.

சமீபத்தில் நடைபெற்ற அ.தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில், அடுத்த ஆண்டில் நடைபெறும் சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்று புனித ஜோர்ஜ் கோட்டையில் ஆட்சியில் அமர்வோம் என்று தெரிவித்திருந்தேன்.

இவ்வாறு தெரிவித்தவுடன், புனித ஜோர்ஜ் .கோட்டையிலுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் உள்ள இருக்கைகளை உடனடியாக கருணாநிதி அகற்றியுள்ளார்.

கருணாநிதியின் இந்த நடவடிக்கையில் இருந்தே தேர்தல் பயம் கருணாநிதியை எந்த அளவுக்கு கௌவிக் கொண்டிருக்கிறது என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

ஒருசிலரை, தன் பக்கம் வரவழைத்து தனக்கு மிகப் பெரிய ஆதரவு இருப்பது போல் ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்க கருணாநிதி முயற்சிக்கிறார்.

ஆனால், தமிழகத்தில் வெகு விரைவில் எம்.ஜி.ஆர். ஆட்சி மலரப்போவது உறுதி.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கை ஒழிப்பதில் யாழ்.மாநகர சபை தீவிரம்; திங்கள் முதல் ஞாயிறு வரை அதிரடி ஏற்பாடு

## மக்கள் பங்களிப்போடு 20 டிராக்டர்களுடன் 200 தொழிலாளர் களத்தில்

யாழ்ப்பாணம்,ஜூன்12

வடமாகாண ஆளுநரின் அனுசரணையுடன் யாழ். மாநகர சபைப் பிரதேசங்களில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் ஞாயிறு வரையான - ஒருவார காலத் துக்கு மக்கள் பங்களிப்புடன் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பணிகளில் 20 டிராக்டர்களுடன் 200 தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதுகுறித்து யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோ.பற்குணராசா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

கடந்த வெள்ளிக்கிழமை மாநகரசபை அலுவலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில், இனங்காணப்பட்ட பின்வரும் இடங்களில் நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை கழிவகற்றல், வடிகால் சுத்திகரிப்பு, வீதிகள் கூட்டித்துப்புரவு செய்தல், வீதியோரங்களில் புற்கள் அகற்றுதல் மற்றும் பற்றைகள் செடிகள் அகற்றுதல் போன்ற பணிகள் முன்னெடுக்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாநகர முதல்வர் தெரிவித்துள்ளார்.

அடையாளம் காணப்பட்ட பின்வரும் இடங்களில் 200 தொழிலாளர்களும் பணியில் ஈடுபட்டு நகரத்தைத் தூய்மைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

14ஆம் திகதி திங்கள் - நகர இல. 1 - கந்தப்பசேகரம் வீதி, ஆரியகுளம், சிறாம்பியடி, அத்தியடி மற்றும் புகையிரத நிலையம் ஆகியன அடங்கிய பிரதேசம்.

15ஆம் திகதி செவ்வாய் - நாவாந்துறை - லைடன் சந்திலிருந்து ஒஸ்மானியாக் கல்லூரி வீதியூடாக அராலி வீதி வரை (இரு பக்கமும்)

16ஆம் திகதி புதன் - முஸ்லிம் பகுதி - காதி அபூபக்கர் வீதி, முஸ்லிம் கல்லூரி வீதி, வெள்ளாந்தெரு, கற்குளம் ஆகியன அடங் கிய பிரதேசம்.

17ஆம் திகதி வியாழன் - அரியாலை - கனகரத்தினம் மகாவித்தியாலயச் சந்தியிலிருந்து நாயன்மார்க்கட்டு, பாணான்குளம் ஆகியன அடங்கிய பிரதேசம்.

18ஆம் திகதி வெள்ளி - குருநகர் - தொடர்மாடியிலிருந்து கோட்டை வரை (குறுக்கு வீதிகள் வடிகால் உட்பட)

19ஆம் திகதி சனி - நகர இல. 2 - வேம்படிச்சந்தி, கொட்டடி, ரெலிக்கொம், ஆரியகுளம், வீரமாகாளி அம்மன் கோயிலடி ஆகியன அடங்கிய பிரதேசம்.

20ஆம் திகதி ஞாயிறு - கோட்டை - பண்ணைச் சந்தை முதல் கோட்டை வரையான பிரதேசம்.

இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தி டெங்கு நோயை அறவே ஒழிப்பதற்கு எமது மக்கள் அனைவரையும் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன் - என்றுள்ளது. (ஒ)

## ஆன்மீகச் சொற்பொழிவு

அல்வாய்,ஜூன்12

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுரஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி பூசை முடிவுற்று 'கண்ணன் பெருமை' என்னும் விடயம் பற்றி வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை ஆன்மீகச் சொற்பொழிவாற்றுவார். (1-36)

# இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் டக்ளஸுக்கு பொதுமன்னிப்பு கிடையாது

## 'த ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' ஆருடம்

கொழும்பு, ஜூன் 12

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய - இலங்கை உடன்படிக்கையின் கீழ் பொது மன்னிப்பை பெற உரித்துடையவர் அல்லர் என சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்

'த ஹிந்துஸ்டான் டைம்ஸ்' இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராக மூன்று குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. கொலை, கொலை முயற்சி, கலகம் விளைவித்தமை மற்றும் கடத்தல் ஆகிய குற்றச்சாட்டுக்களே சுமத்தப்பட்டுள்ளன.

இருப்பினும் இலங்கை இந்திய 1987 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் கீழ் தாம் பொதுமன்னிப்பைப் பெற்றிருப்பதால் இந்தக் குற்றச்சாட்டு ஏற்புடையதல்ல என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பில் 1987 ஆம் ஆண்டு உடன்படிக்கை ஒன்று செய்துக் கொள்ளப்பட்டது

எனினும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நாடுகளுக்கு இடையிலான குற்றவியல் தொடர்பான எந்த ஒரு உடன்படிக்கைகளும் செய்துகொள்ளப்படவில்லை என்பதை சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (சி)

## நீர்வேலியில் இன்று பரிசளிப்பு விழா

கோப்பாய்,ஜூன்12

நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் கணனிக் கூடத் திறப்பு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை முதல்வர் சி.தர்மரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை பாடசாலைகள் வேலைகள் பகுதி பொறியியலாளர் குணரட்ணம் சிவபாலன், சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல், கௌரவ விருந்தினராக தொழில் அதிபர் வே.சிவனேஸ்வரன், பழைய மாணவர் பொ.செல்வராசா ஆகியோர் கலந்து கொள்வர். (1-72)

## கிராம சேவையாளருக்கு டெங்கு ஒழிப்புக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்12

நல்லூர், பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்களுக்கான டெங்கு ஒழிப்பு சம்பந்தமான கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் பிரததேச சபை கொக்குவில் நூல்நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (1-167)

## செஞ்சிலுவைத் தொண்டர்கள் இன்று கௌரவிக்கப்படுவர்

யாழ்ப்பாணம்,ஜூன்12

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தென்மராட்சிப் பிரிவில் நீண்டகாலமாக தொண்டர்களாகப் பணியாற்றுபவர்கள் இன்று கௌரவிக்கப்படவுள்ளனர்.

மீசாலை கிழக்கு திருப்புகழ் மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள தொண்டர்கள் கௌரவிப்பு நிகழ்வுக்கு தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (1-207)

# நீர்வேலியில் மினிபஸ் தடம்புரண்டதில் நால்வர் காயமடைந்து ஆஸ்பத்திரியில்



யாழ்ப்பாணம், ஜூன் 12

தனியார் சிற்றூர்தி தடம்புரண்டதில் அதில் பயணித்த ஐவர் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது :-

நேற்றுக்காலை பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறையூடாக யாழ்ப்பாணத்துக்குப் பயணிகளை ஏற்றிவந்த 751ஆம் வழி இலக்க தனியார் சிற்றூர்தியொன்று நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிக்குச் சமீபகமாகப் பயணித்துக் கொண் டிருந்தவேளை வீதி அகலிப்புக்காக வெட்டப்பட்ட பள்ளத்தில் வீழ்ந்து தடம்புரண்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் சிற்றூர்தியில் பயணித்துக் கொண்டிருந்த கொட்டடி கன்னாபுரத்தைச் சேர்ந்த வி. தர்ஷினி (வயது 33), இன்பருட்டி பருத்தித்துறையைச் சேர்ந்த ஏ.கவிதா (வயது 26), பருத்தித்துறையைச் சேர்ந்த ரி. ஜெயமங்கால் (வயது 64) ஆகியோர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (1-16-78-72)

# மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஜூன்12

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2251ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "Y" என்ற ஆங்கில எழுத்தும் 8/6/2/0/7/1 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 8/6/2/0/7/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இருவருக்கு முதலாம் பரிசாக தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

6/2/0/7/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 09 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/0/7/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 127 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

0/7/1என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,255 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

7/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,607 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

1 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,25,358 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 8/6/2/0/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/6/2/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 126 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

8/6/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,279 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

8/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,504 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"Y" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 50,222 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-10)

## வடக்கு, கிழக்கு இணைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி, ஜனாதிபதி பிரதீபா பாட்டீல், எதிர்க்கட்சித் தலைவி மற்றும் தமிழ் நாட்டு அமைச்சர்கள், எம்.பி.க்களை சந்தித்துக் கலந்துரையாடினோம்.

நாம் நடைமுறைச் சாத்தியமான விடயத்தை முன்வைத்தோம். எமது திட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். மக்கள் நலனை முன்னிறுத்தியே எமது கோரிக்கை அமைந்திருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுக்குச் சென்று தமிழகத் தலைவர்களைச் சந்தித்துவிட்டு தமக்குள்ள உள்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு பக்க அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்தி வந்தனர்.

அரசியல் தீர்வு குறித்து இந்தியத் தலைவர்களுடன் பேசப்பட்டதுடன் தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாகவும் நாம் சில விடயங்களைத் தெளிவுபடுத்தினோம். மிதிவெடி அபாயம், காணி உரிமை கோரல் பிரச்சினை, நிதிப்பிரச்சினை போன்றவை குறித்து நாங்கள் தெளிவுபடுத்தினோம்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மீள் குடியேறிய மக்களுக்கு ஐம்பதாயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்க இந்தியா ஒப்புக்கொண்டது. இதற்கென ஆயிரம் கோடி ரூபாவை வழங்குவதற்கும் உறுதியளித்துள்ளது.

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கு புனரமைத்தல், மாநகர சபைக்குக் கட்டடம் அமைத்தல், உள்ளிட்ட சில திட்டங்களுக்கு உதவுவதாகவும் வாக்குறுதி அளித்துள்ளன.

இலங்கைக்கு ஆயிரம் கோடி ரூபாவை 20 வருட கடன் அடிப்படையில் வழங்குவதற்கும் சம்மதம் தெரிவித்துள்ளன.

மேலும் என்னைக் கைது செய்யக் கோரி சட்டத்தரணி புகழேந்தி தொடர்ந்த வழக்கானது உள்நோக்கம் கொண்டது. அது என்மீது சேறு பூசும் செயலாகும். சட்ட ரீதியாக அந்தப் பிரச்சினையை எதிர்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். 1986இல் தீபாவளி தினத்தன்று இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்துக்கும் எனக்கும் நேரடித் தொடர்பில்லை. அது திட்டமிட்ட கொலையுமில்லை. தவறுதலாக இடம்பெற்றதாகும்.

இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் இந்தியா சென்ற என்மீது வழக்குத் தொடராமல் இந்த முறை வழக்குத் தொடர முயற்சிப்பது [illegible] கொண்டதாகும் - என்றார். (ஒ-14-86)

## வன்னியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, சந்திரி விஜித லொக்குபண்டார ஆகியோர் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் பாண்ட் வாத்திய சகிதம் ஊர்வலமாக வித்தியாலயத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

அங்கு தேசியக் கொடியை அமைச்சரும், மாகாண சபைக் கொடியை ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் பாடசாலைக் கொடியை பாடசாலை அதிபர் அ.பங்கயற்செல்வமும் ஏற்றிவைத்தனர். அதைத் தொடர்ந்து புனரமைக்கப்பட்ட கட்டடத்தில் நூலகம், விஞ்ஞான ஆய்வுகூட அறை, கணனி அறை ஆகியவற்றை அமைச்சர் பந்துல குணவர்த்தன திறந்துவைத்தார்.

வித்தியாலயத்தின் பழைய நிலையையும், புதிய நிலையையும் விளக்கும் காட்சிகள் கொண்ட வீடியோ அமைச்சருக்கு [illegible] கையளிக்கப்பட்டது.

[illegible] வித்தியாலய அதிபர் அ. பங்கயற்செல்வம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

கடந்த கால யுத்தத்தின் போது வெடித்த குண்டுகள், துப்பாக்கி வேட்டுக்கள் ஆகியவற்றின் அசுத்தக்காற்றைச் சுவாசித்த இந்தப் பிரதேச மக்கள் இன்று சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

மக்களின் நிம்மதியான - இயல்பு வாழ்க்கைக்காக தெற்கிலிருந்து வளங்களை எடுத்துவந்து இந்தப் பிரதேசத்தை சீராக்கவிருக்கின்றோம்.

இந்தப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதீத அக்கறைகாட்டி வருகிறார். அடுத்த ஆறு மாதகாலத்தில் இப்பிரதேசத்தைக் கட்டி எழுப்ப ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். அதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் வழிகாட்டலில் துரித புனரமைப்புத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது - என்றார். (ஒ-1-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிர்கிஸ்தான் தென் பகுதியில் கலவரம் 14 பேர் உயிரிழப்பு; 140 பேர் படுகாயம்

## அவசரகால நிலை பிரகடனம்

பிஸ்கிக்,ஜூன் 12

முன்னாள் சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்து தனிநாடாக மாறிய கிர்கிஸ்தானின் தென்பகுதியில் மூண்ட கலவரத்தில் 14 பேர் கொல்லப்பட்டனர். 140இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என நேற்று வெள்ளிக்கிழமை அதிகாரிகள், ஏ.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தனர்.

நாட்டின் இரண்டாவது மிகப் பெரிய நகரான ஒஷில் வியாழக்கிழமை மாலை இக்கலவரம் ஆரம்பமாகியது. பரவலாக துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் ஒலித்த வண்ணமிருந்தன. இக்கலவரம் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வரை நீடித்தது என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஆயுதங்கள், இரும்புக் கம்பிகள், தடிகள் ஆகியவை சகிதம் வெளிப்பட்ட இளைஞர்களைக் கொண்ட குழுக்கள் கடை ஜன்னல்களை நொறுக்கின. கார்களுக்கு தீ மூட்டின. அரச உடைமைகளைச் சேதப்படுத்தின என உள்ளூர்வாசிகள் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்கள்.

நகரின் மத்தியிலுள்ள பல கட்டடங்களுக்குத் தீ மூட்டப்பட்டது. தீச் சுவாலைகள் இப்பகுதியில் பரவின. எங்கும் சுவாலையோடு கடும் புகை மண்டலங்கள் எழுந்தன. வீதிகள் அல்லோல கல்லோலப்பட்டன. அபயக் குரல்களும் ஒலித்தன என நகரவாசிகள் குறிப்பிட்டார்கள்.

அநேகர் கத்திக்குத்துக் காயங்களுக்கும், துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளார்கள். அனைவரும் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் பெண் பேச்சாளர் யலினா பைலி நோவா, எசோசியேட்டட் பிரஸ் நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளவர்களில் 36 பேர் ஆபத்தான கட்டத்தில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தனர். இக்கலவரத்துக்கான காரணம் உடனடியாக வெளியாகவில்லை. உயிரிழப்புகளையொட்டி, கலவரம் நீடிக்கக் கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

உள்ளூர் விவகாரத்தால் ஏற்பட்ட தகராறால் இக்கலவரம் மூண்டிருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது. எனினும், கலவரத்துக்கான காரணம் உடனடியாக வெளியாகவில்லை. பாதுகாப்புக் கடமையில் அதிகளவில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என இடைக்கால ஜனாதிபதி ரோசா ஒருன்பேயிவா தெரிவித்தார்.

நகரில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கவச வாகனங்கள் சகிதம் துருப்புகள் அனுப்பப்பட்டுள்ளன என இடைக்கால அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்தார்கள். துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் தொடர்ந்து ஒலித்த வண்ணமுள்ளன. அதேவேளை, நகரப் பிராந்தியத்தில் இராணுவ ஹெலிக்கொப்டர்கள் தாழப் பறந்தவண்ணமுள்ளன என உள்ளூர் குடியிருப்பாளர்கள் குறிப்பிட்டார்கள்.

கிர்கிஸ்தானில் ஏப்ரலில் அப்போதிருந்த ஜனாதிபதி குர்மன் பெக் பகீயி புரட்சியின் மூலம் வெளியேற்றப்பட்டார். அது முதல் இடைக்கால ஜனாதிபதியின் நிர்வாகத்தின் கீழ் நாடு உள்ளது.

# பாக். பிரஜைக்கு சிறைத் தண்டனை

நியூயோர்க்,ஜூன் 12

அல்-குவ்வதா தீவிரவாதி ஜூனைட் பாபருக்கு உதவிகள் செய்துவந்த சையத் ஹாஷ்மி என்னும் பாகிஸ்தான் இளைஞருக்கு நியூயோர்க் நீதிமன்றம் 15 வருடச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

பாகிஸ்தானைச் சேர்ந்தவர் சையத் ஹாஷ்மி. 30 வயதான இவர் அமெரிக்காவில் புரூக்ளின் பல்கலைக்கழகத்தில் படித்தவர். அப்போது இவர் லண்டனிலுள்ள அல்-குவைதா தீவிரவாதி ஜுனைட் பாபர் என்பவருக்கு உதவிகள் புரிந்துவந்துள்ளார். லண்டன் வந்திருந்த இவரது நடவடிக்கைகளைப் பொலிஸார் கண்காணித்து வந்துள்ளனர்.

ஹாஷ்மி 2006 ஆம் ஆண்டு லண்டனிலிருந்து பாகிஸ்தானுக்குச் செல்ல முயன்றபோது ஹீத்ரூ விமானநிலையத்தில் கைது செய்யப்பட்டார். பின்னர் இவர் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டார்.

நியூயோர்க் நீதிமன்றத்தில் இவர் மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவர் தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்டார்.

# ஈரானுக்கு அணுஆயுதம் கிட்டாமல் தடுப்பதே அமெரிக்காவின் நோக்கம்

## கொலம்பியாவில் ஹிலாரி தெரிவிப்பு



வாஷிங்ரன், ஜூன் 12

''ஈரானுக்கு அணுஆயுதம் கிடைப்பதைத் தடுப்பதே எங்களின் முக்கிய நோக்கமாகும். ஈரானுக்கு அணுஆயுதம் கிடைத்துவிடக் கூடாது என்பதில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் உறுதியாக உள்ளன'' என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் கொலம்பியாவிலுள்ள பகோடடா விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டார்.

''தற்போது நிலவும் தேக்க நிலை, அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடை ஆகியவை, அந்நாடு அணுஆயுதத் திட்டத்தை மேற்கொள்வதற்கு முட்டுக்கட்டைகளாக இருக்கும் என நாம் நம்புகிறோம். ஜனாதிபதி ஒபாமா நிர்வாகம் தூதரக விடயத்தில் வெளிப்படைத் தன்மையுடன் நடந்துகொள்கிறது. அதை திறம்படவும் நிர்வகிக்கிறது'' என்றும் அவர் குறிப்பிட் டார்.

''அமெரிக்க அரசு இலக்குகளை எட்டுவதிலும் உறுதியுடன் செயல்படுகிறது. இந்த நோக்கம் அனைவருக்கும் பொதுவானது. ஆனால், பல்வேறு இலக்குகளுடன் ஓரிடத்தில் மக்கள் திரளும்போது அவற்றை எட்டுவது கடினமாகிறது. ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்புச் சபையில் உறுப்பினர்களிடையே கடந்த மாதம் நடந்த கூட்டத்திலும் இத்தகைய நிலை ஏற்பட்டது'' என்றும் ஹிலாரி சுட்டிக்காட்டினார் .

''ஈரான் மீதான தடை விதிப்பு அங்குள்ள தலைவர்களிடையே கடுமையான அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை தங்களது மதிப்பீடுகளால் தனிமைப்பட்டுக் கிடந்த இத்தலைவர்கள் அமெரிக்கா மற்றும் அதன் தோழமை நாடுகளுடன் பேச்சுகளில் பங்கேற்க வாய்ப்பு கிடைத்துள்ளது. அணுசக்தியை அமைதி வழியில் மட்டுமே பயன்படுத்தவேண்டும் என்ற நெருக்குதல் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''இதனால் இதுவரை முரண்டுபிடித்து வந்த ஈரான், தற்போது சர்வதேச நிர்ப்பந்தத்துக்குப் பணிந்துபோகவேண்டிய சூழல் உருவாகியுள்ளது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு சர்வதேச அணுசக்தி முகமை (ஐஏஇஏ) வகுத்தளித்த விதிகளை ஈரான் பின்பற்றும் என்றும் எதிர்பார்க்கிறோம்'' என்றும் அவர் கூறினார்.

''ஈரானுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை கொண்டுவரும் யோசனையை அமெரிக்க முதலில் முன்மொழிந்தபோது சர்வதேச அளவில் ஆதரவு கிடைக்கவில்லை. ஆனால், பின்னர் பொருளாதாரத் தடை கொண்டுவரப்பட்டது. தூதரகம் மூலமாகவும், சர்வதேச நெருக்குதல் மூலமாகவும் ஈரானுக்கு இரட்டை நிர்ப்பந்தம் அளிக்கப்பட்டது. ஈரான் விடயத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எட்டுவதில் அனைத்து முயற்சிகளும் பல்வேறு வழிகளில் மேற்கொள்ளப்பட்டன'' என்றும் அவர் விளக்கினார்.

''தற்போது 20 சதவீத அளவுக்கு செறிவூட்டப்பட்ட யுரேனியம் தன்னிடம் உள்ளது என ஈரான் அறிவித்துள்ளது. இத்தகைய சூழலில் ஈரானை எவ்விதம் வழிக்குக் கொண்டுவருவது என்பது பல நாடுகளுக்குப் புரியாத புதிராக இருந்தது. இந்நிலையில், தூதரக முயற்சிகளின் மூலம் ஈரானை பணிய வைக்கும் முயற்சிகளை அமெரிக்கா மேற்கொண்டது. அதன் ஒரு பகுதியாக ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்புச் சபையின் மூலம் ஈரானை பணிய வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன'' என்றும் ஹிலாரி கூறினார்.



நேட்டோ அமைப்பு நாடுகளின் இராணுவ அமைச்சர்கள் மாநாடு பெல்ஜியத்தின் பிரசெல்ஸ் நகரில் கூடியது. இதில் துருக்கி இராணுவ அமைச்சர் முகமது வெக்டிக் ஜியோனியல் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரொபர்ட் கேட்ஸ் ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

உலக அரங்கில்

# உரிய பாதுகாப்பு வழங்குமாறு பாக். இந்துக்கள் போராட்டம்

இஸ்லாமாபாத்,ஜூன் 12

பாகிஸ்தானில் வாழும் இந்துக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கவேண்டும் என இந்துக்கள் பேரவை அரசை வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை, இந்து தொழிலதிபர் படுகொலைக்கு கண்டனம் தெரிவித்து பலுசிஸ்தான் சட்டசபையிலிருந்து இந்து உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

பாகிஸ்தானில் இந்துக்கள் சிறுபான்மை சமூகத்தினராக வாழ்கின்றனர். இந்துக்கள் மீது அடக்குமுறை, கட்டாய மதமாற்றம், தாக்குதல்கள் ஆகியவை அவ்வப்போது நடத்தப்படுகின்றன.

இந்நிலையில், குவெட்டா நகரில் இந்து தொழிலதிபர் ஒருவர் மர்ம கும்பலால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது மகனை அந்தக் கும்பல் கடத்திச் சென்றுவிட்டது.

இதேபோன்று, தர்பார்கர் மாவட்டம் இஸ்லாம்கோட்டில் உள்ள புனித நேனுராம் ஆசிரமத்தில் போட்டோ பசீர் என்ற முஸ்லிம் வாலிபர் ஒருவர் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளார்.

தொடர் தாக்குதல்கள் இந்துக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளன. இந்தத் தாக்குதல்களைத் தொடர்ந்து பாதுகாப்பு வழங்கக் கோரி, இந்து அமைப்புகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

இது தொடர்பாக பாகிஸ்தான் இந்துக்கள் பேரவை பொறுப்பாளர் ரமேஷ்குமார்; தலைவர் ராஜா அசர்மால் மங்லானி ஆகியோர் கராச்சியில் பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசுகையில், இத்தாக் குதல்களுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

''நேனுராம் ஆசிரமத்தின் மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம். தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்து இந்துக்கள் சார்பில் இரண்டு நாட்கள் போராட்டம் நடத்தப்பட்டது. தாக்குதலில் ஈடுபட்ட போட்டோ பசீரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துவிட்டோம். ஆனால், அவர் மீது பொலிஸார் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை'' என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளார்கள்.

''தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் பெரிய சதி உள்ளது. சிந்து மற்றும் தர்பார்கர் மாவட்டங்களில் முஸ்லிம்களுக்கு இணையாக அதிக அளவில் இந் துக்கள் வசிக்கின்றனர். இரு சமூகத்தினரும் சகோதரத்துவத்துடன் வாழ்வதை சீர்குலைக்கும் வகையில் சம்பவம் நடந்துள்ளது. போட்டோ பசீரை காவலில் எடுத்து விசாரிக்காமல் பொலிஸார் நீதிமன்ற காவலில் வைத்துள்ளனர். பசீரை, அரசியல்வாதிகள் காப்பாற்ற முயன்று வருகின்றனர்'' என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

அதேவேளை, வெளிநடப்பு செய்த இந்து உறுப்பினரின் கோரிக்கையை பதிவு செய்துள்ள பலுசிஸ்தான் அரசு, இந்து தொழிலதிபரைக் கொன்றவர்களைக் கைதுசெய்யவும், கடத்தப்பட்ட அவரது மகனை மீட்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளது. மேலும் இந்துக்களுக்கும், கோவில்களுக்குமான பாதுகாப்பை உறுதிசெய்ய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அது அறிவித்துள்ளது.

# ஆப்கானில் மேலும் 30 ஆண்டுகளுக்கு ஆஸி. படைகள் தங்க நேரிடலாம்

## முன்னாள் அமெ. இராணுவ அதிகாரி தகவல்

மெல்போர்ன்,ஜூன் 12

ஆப்கானிஸ்தானில் ஆஸ்திரேலியப் படையினர் மேலும் 30 ஆண்டுகள் வரை தங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்படலாம் என முன்னாள் அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய சிப்பாய்கள் இன்னும் 3 முதல் 5 ஆண்டுகள் வரைதான் ஆப்கானிஸ்தானில் இருப்பார்கள் என்று ஆஸி. பாதுகாப்பு அமைச்சர் ஜோன் ஃபாக்னர் முன்னர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், மெல்போர்னில் வியாழக்கிழமை இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் அமெரிக்க முன்னாள் இராணுவ அதிகாரி எல்ஸ்பர்க் பேசுகையில்,

''இன்னும் 3 முதல் 5 ஆண்டுகள் மட்டும் ஆப்கானிஸ்தானில் ஆஸ்திரேலியப் படைகள் நிலைகொண்டால் போதும் என்று கருதுவது சரியல்ல. ஆப்கானிஸ்தானிலுள்ள பயங்கரவாதிகளுடனான போர் 5 ஆண்டுகளுக்குள் முடிவடைந்து விடாது'' என்றார்.

''மேலும் 30 ஆண்டுகள் வரை அங்கு ஆஸ்திரேலியா உட்பட அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் இருக்க வேண்டிய நிலை ஏற்படலாம். இப்போது சுமார் 30 ஆயிரம் அமெரிக்க சிப்பாய்கள் ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டுள்ளனர்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகக்கிண்ண உதைபந்தாட்டம்

# தென்னாபிரிக்காவின் ஷெபலாலா, மெக்சிக்கோவின் மர்குஷ் அதிரடிஆட்டம்; முதல் போட்டி சமநிலையில் முடிந்தது!

ஜெகன்னர்ஸ்பேர்க், ஜூன் 12

உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தில் தென்னாபிரிக்கா-மெக்சிக்கோ அணிகளுக்கிடையிலான முதலாவது போட்டி சமநிலையில் முடிவுற்றது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் முதலாவது ஆட்டம் நேற்று தென்னாபிரிக்காவின் ஜெகன்னர்ஸ்பேர்க்கில் உள்ள 'சொக்கர் சிற்றி' மைதானத்தில் நடைபெற்றது.

இதில் தென்னாபிரிக்கா-மெக்சிக்கோ அணிகள் மோதின. இப்போட்டியில் ஆரொன் மொஹேனா தலைமையில் தென்னாபிரிக்க அணியும், ஜெராட் ரொறாராடோ தலைமையில் மெக்சிக்கோ அணியும் களமிறங்கின.



போட்டியின் ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் மெக்சிக்கோ அணியின் வீரர்கள் தென்னாபிரிக்க அணியின் கோல்பரப்புக்குள் ஆதிக்கம் செலுத்தினர்.

ஆட்டத்தின் 18 ஆவது நிமிடத்தில் தவறாக ஆடிய ஜுரேஷூக்கு நடுவர் ரவ்ஷான் இர்மரோவ் மஞ்சள் அட்டை காட்டி எச்சரித்தார். முதல் பாதி ஆட்டத்தில் மெக்சிக்கோ அணிக்கு இரண்டு கோல்கள் அடிக்க சந்தர்ப்பம் கிடைத்த போது அவற்றைத் தவறவிட்டது.

இரண்டாவது பாதி ஆட்டத்தின் ஆரம்பம் முதல் தென்னாபிரிக்காவின் கை ஓங்கியது. அணியின் சிறப்பான ஆட்டத்தினால் 55 ஆவது நிமிடத்தில் தென்னாபிரிக்க வீரர் டிக்காகோய் தட்டிக்கொடுத்த பந்தை ஷெபலாலா அதிரடிக் கோலாக மாற்றினார்.

இதையடுத்து அதிடியாக ஆட முற்பட்டது மெக்சிக்கோ ஆட்டத்தின் 57 ஆவது நிமிடத்தில் அணித்தலைர் ரொறராடோவுக்கு நடுவர் மஞ்சள் அட்டை காட்டி எச்சரித்தார். தொடர்ச்சியாக அதிரடியைக் காட்டிய மெக்சிக்கோ அணித் தலைவர் ரொறராடோ தட்டிக்கொடுத்த பந்தை 79ஆவது நிமிடத்தில் மர்குஷ் லாவகமாக கோலாக மாற்ற ஆட்டம் 1:1 என்னும் கோல்கள் ரீதியில் ஆட்டம் சம நிலைபெற்றது.

இரு அணிகளும் வெற்றிக்காக கோல் ஒன்றினைப் பெற்றுவிட வேண்டுமென துடிப்புடன் ஆடியபோதும் ஆட்ட முடிவு வரை இரு அணிகளாலும் கோல் எதனையும் பெறமுடியவில்லை. இந் நிலையில் ஆட்டம் 1:1 கோல்கள் அடிப்படையில் சம நிலையில் முடிந்தது.

ஆட்டத்தின் நாயகனாக தென்னாபிரிக்க வீரர் ஷிபிவே ஷெபலாலா தெரிவானார். (6)

## உலகக்கிண்ண உதைபந்தாட்டம் கோலாகலமாக ஆரம்பம்

ஜெகன்னர்ஸ்பேர்க், ஜூன் 12

19ஆவது 'பிபா' உலகக்கிண்ண




உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்று தென்னாபிரிக்காவின் ஜெகன்னர்ஸ் பேர்க்கில் உள்ள 'சொக்கர் சிற்றி' மைதானத்தில் ஆரம்பமாகின. நேற்று இரவு 6 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வு தென்னாபிரிக்காவின் பாரம்பரிய கலைநிகழ்வுகளுடன் ஆரம்பமாகியது.

ஆரம்ப நிகழ்வாக ஐந்து 'ஜெற்' விமானங்களின் அணிவகுப்புடன் தொடங்கியது. தொடர்ந்து 1500 நடன, இசைக் கலைஞர்கள் பங்கு பற்றிய நடன அரங்கேற்றமும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரபல பாடகர்கள் பலரும், நடனக் கலைஞர்களும் கலந்துகொண்டு மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தினர்.

தொடர்ந்து போட்டியில் பங்கேற்கும் ஆறு ஆபிரிக்க நாடுகளின் (தென்னாபிரிக்கா, கானா, அல்ஜீரியா, சுலோவாக்கியா, கமரூன், நைஜீரியா) மரவடிவிலான சிற்பங்களும் அவற்றின் கொடிகளும் மைதானத்தின் நடுவே வைக்கப்பட்டது.

தொடர்ந்து சுற்றுப் போட்டியில் பங்கேற்கும் 32 நாடுகளினதும் கொடிகளும் சுழலும் வகையில் அமைக்கப்பட்டது. கலைஞர்கள் அவைகளின் பெயரை உச்சரித்தவாறு வர அறிமுக நிகழ்வுகள் யாவும் நிறைவு பெற்றன.

நேற்று முன்தினம் நடந்த ஒத்திகை நிகழ்வில் பங்கேற்ற தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் கொள்ளுப் பேர்த்தியான செனானி (வயது-13) கார்விபத்தில் பலியானதால் ஆரம்பநிகழ்வில் அவர் பங்கேற்கவில்லை. இந்நிகழ்வில் அவரின் புகைப்படம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டு அவரால் அனுப்பிவைக்கப்பட்ட உரை வாசிக்கப்பட்டது. இந்த ஆரம்ப நிகழ்வையும், போட்டியையும் தொலைக்காட்சி வாயிலாக 500 மில்லியனுக்கு மேற்பட்ட மக்களும், நேரடியாக 85 ஆயிரம் பேரும் கண்டுகளித்தனர். (6)




உலகக் கிண்ணத்தின் ஆரம்ப முதல்நாள் நிகழ்வில் 'வோகா... வோகா... திஸ் ரைம் பொப் ஆபிரிக்கா....' பாடலை இயற்றிய கொலம்பியாவின் கவிஞரும், பாடகியுமான ஷகீரா நிகழ்வில் பாடிய போது...

### உலகக்கிண்ண உதைபந்தாட்டம்-2010
### இன்றைய ஆட்டங்கள்

| அணிகள் | இடம் | நேரம் |
|---|---|---|
| ஆர்ஜென்ரீனா-நைஜீரியா | ஜெகன்னஸ்பேர்க் | இரவு 7.30 மணி |
| தென்கொரியா-கிரீஸ் | போர்ட் எலிசபெத் | மாலை 5 மணி |
| இங்கிலாந்து-அமெரிக்கா | ரஸ்டன்பேர்க் | இரவு 12 மணி |

## ஆட்டம் போடவும் தெரியவேணும்!

கோல் அடித்த பிறகு சிறந்த முறையில் சந்தோஷத்தை வெளிப்படுத்தும் வீரர்களுக்கும் - நடனம் ஆடுபவர்களுக்கும் இந்த உலகக்கிண்ணத் தொடரில் பெருந்தொகைப் பரிசுகள் காத்திருக்கிறன.



உதைபந்தாட்டப் போட்டியில் கோல் அடிப்பது ஒரு கலை. கோல் அடித்த பிறகு ரசிகர்களைக் கவரும் விதத்தில் தங்கள் சந்தோஷங்களை வெளிப்படுத்துவதும் இன்னொரு கலை. பொதுவாக முரட்டுத் தனம் மிகுந்த உதைபந்தாட்ட வீரர்கள், கோல் அடித்த பிறகு ஒருவர் மீது ஒருவர் ஏறிக்கொள்வார்கள் கட்டிப் பிடித்துக் கொள்வார்கள். இதுதான் வழக்கமான ஒன்று. 1990ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியில் கமரூன் அணி முதன் முறையாகக் கலந்துகொண்டபோது, கமரூன் வீரர் ரோஜர் மில்லா கோல் அடித்தால் நேரே மைதானத்தின் மூலைப்பகுதிக்கு ஓடுவார். அங்கிருக்கும் கொடிக் கம்பத்தை பிடித்துக்கொண்டு இடுப்புப் பகுதியை வளைத்து வளைத்து ஆடுவார். இந்த நடனம் ரசிகர்களை மட்டும் அல்ல கடுமையான உதைபந்தாட்ட நடுவர்களைக் கூட சிரிக்க வைத்து விடும்.

அந்த இத்தாலி உலகக்கிண்ணத் தொடரில் அவர் அடித்த 4 கோல்களின்போதும், ஆடிய ஆபிரிக்க நடனம் அனைத்து ரசிகர்களையும் கவர்ந்தது.

உதைபந்தாட்டப் போட்டியில் கோல் அடித்த பிறகு வித்தியாசமான முறையில் சந்தோஷத்தை வெளிப்படுத்திய முதல் வீரர் எனக் கூறி, ரோஜர் மில்லாவுக்கு 'பிபா' விருது வழங்கியது. அந்த விருதுக்கு அவரின் நடனமும் ஒரு காரணம்.

தற்போது நடைபெற்றுவரும் உலகக் கிண்ணத் தொடரிலும் இவ்வாறான நடனங்களும், கேளிக்கைகளும் நிறைந்ததாகவே காணப்படும். இதற்காக வீரர்கள் விளையாட்டில் மட்டுமன்றி நடனத்திலும் பிரகாசிக்கத் தான் போகிறார்கள் பாருங்கள்.

## எல்லாமே -11

உலகக் கிண்ணத் தொடரில் இம்முறை 'அடிடாஸ்' வகையிலிருந்து, புதியரக 'உதைபந்து' பயன்படுத்தப்படுகிறது.

'ஜபுலானி' என அழைக்கப்படும் இந்தப் பந்து சீனாவில் தயாரிக்கப்பட்டது. பந்துகளின் மேற்பரப்பில் உள்ள புள்ளிகளால் நல்ல பிடிமானம் கிடைக்கும். இதன் மூலம் பந்துகளை எளிதில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொட ருக்கென 11ஆவது முறையாக உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பந்தில் 11 வீரர்களைக் குறிக்கும் வகையில், 11 வகையான வண்ணங்கள் இடம்பெற்றுள்ளன.




இதுதவிர, தென்னாபிரிக்காவின் அதிகார பூர்வமான 11 மொழிகளும் இடம்பெற்றுள்ளன. போட்டி ஆரம்மானது ஜூன் 11, இறுதியாக தொடர்முடிவது ஜூலை 11 ஆம் திகதி ஆகும்.

## கேஸ்டர்செமன்யா பெண் என்பது நிருபணம்!

ஜோகனஸ்பார்க், ஜூன் 12



பாலின சர்ச்சையில் சிக்கிய தென்னாபிரிக்கத் தடகள வீராங்கனை கேஸ்டர் செமன்யா, பெண்தான் என அங்கீகாரம் அளித்துள்ளது சர்வதேச தடகளக் கூட்டமைப்பு.

தென்னாரிக்காவின் தடகள வீராங்கனையான கேஸ்டர் செமன்யா. கடந்த ஆண்டு பெர்ளினில் நடந்த உலக சம்பியன்ஷிப் தொடரில் 800 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் தங்கம் வென்றார்.

இதன் பின்னர் அவர், பாலின சர்ச்சையில் சிக்கினார். இதுகுறித்துப் பரிசோதிக்க, சர்வதேச தடகள கூட்டமைப்பு முடிவு செய்தது. இதனால் கடந்த சில மாதங்களாக அவர் எந்தப் போட்டிகளிலும் பங்கேற்காமல் இருந்தார்.

இந்நிலையில், அவருக்கு நடத்தப்பட்ட பரிசோதனையின் அடிப்படையில், அவர் பெண்தான் என்பதை சர்வதேச தடகள கூட்டமைப்பு ஊர்ஜிதம் செய்துள்ளது. இனி வழக்கம்போல அவர் பெண்கள் பிரிவில் போட்டிகளில் பங்கேற்கலாம். இது தவிர அவர் வென்ற தங்கப்பதக்கமும் தப்பியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை நீதிமன்றில் தாக்கலான

# டக்ளஸுக்கு எதிரான மனு திங்கள் வரை ஒத்திவைப்பு

சென்னை,ஜூன் 12

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கைதுசெய்ய வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கைதுசெய்ய வேண்டுமென மத்திய மாகாண அரசுகளுக்கு உத்தரவிடவேண்டும் என தமிழக மக்கள் உரிமைக் கழகச் செயலாளரும் சட்டத்தரணியுமான புகழேந்தி நேற்று முன்தினம் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் புதிய நீதியரசராக நேற்றுப் பதவி ஏற்றுக் கொண்ட இக்பால் தலைமையிலான நீதியரசர் குழு முன்னிலையில் இவ்வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. தமிழக மக்கள் உரிமைக் கழகம் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

''1986 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி டக்ளஸ் தேவானந்தா சென்னையில் தங்கியிருந்தபோது சூளைமேட்டில் திருநாவுக்கரசு என்பவரை சுட்டுக் கொலை செய்தார். இச்சம்பவத்தில் மேலும் நால்வர் காயமுற்றனர். இச்சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட அவர் சில மாதங்களின் பின்னர் பிணையில் விடுதலையானார்.

1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 வயதுச் சிறுவனைக் கடத்தி ஏழு லட்சம் ரூபா கப்பம் கோரினார் என்ற குற்றச்சாட்டின்பேரில் அவர் மீண்டும் கைதுசெய்யப்பட்டார்.

1989 ஆம் ஆண்டு அவர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறைத்தண்டனை பெற்றார். பின்னர் அவர் இலங்கைக்குத் தப்பிச் சென்றுவிட்டார்.

இலங்கையில் அவர் கைதுசெய்யப்பட்டு இந்தியாவுக்கு கொண்டுவரப்படும் சந்தர்ப்பத்தில் இலங்கையோடு இந்தியா சில ஒப்பந்தங்களை ஏற்படுத்தியதால், டக்ளஸ் கைது நடவடிக்கையில் மேற்கொண்டு முயற்சிகள் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், டக்ளஸ் தேவானந்தா இந்தியாவுக்கு வந்துள்ளார். அவரைக் கைதுசெய்ய மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிடவேண்டும்'' - என்றுள்ளது.

(ஒ-சி)

ஜனாதிபதி, பிரதமர் அமைச்சுப் பதவிகளை வைத்திருக்கக் கூடாது:

# ரவி கருணாநாயக்க கொண்டுவந்த பிரேரணைக்கு அரச தரப்பு எதிர்ப்பு; சபையில் விவாதிக்க மறுப்பு

கொழும்பு,ஜூன் 12

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் அமைச்சுப் பதவிகளை வைத்திருக்கக் கூடாது என பிரேரணை ஒன்றை ஐ.தே.க. எம்.பி. ரவி கருணாநாயக்க நேற்று நாடாளுமன்றுக்குக் கொண்டுவந்தபோது அதை விவாதத்துக்கு எடுக்கவிடாது அரச தரப்பினர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இந்தப் பிரேரணை அரசியல் யாப்பையே திருத்தக்கூடிய ஒன்றாக அமைந்துள்ளது என்றும், இதை விவாதிக்க அனுமதிக்க முடியாது என்றும் அரச தரப்பினர் கூறினர்.

இந்த விடயம் மாத்திரமன்றி எந்த விடயமும் விவாதத்துக்கு எடுத்துக்கொள் ளப்பட முடியும். ஆகவே, இதை விவாதிக்க சபாநாயகர் அனுமதி தரவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கூறின.

அரசு இதற்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தசால், இரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம், சர்ச்சை இடம்பெற்றது. இதனால் இந்த விடயத்தைத் தற்போதைக்கு இடைநிறுத்தி வைப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

நேற்றைய விவாதத்திற்காக ரவி கருணாநாயக்கவால் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணைகள் 33 நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

அவற்றில் முதலாவதாக 'ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் அமைச்சுப் பதவி களை வைத்திருக்கக்கூடாது' என்ற பிரேரணை இருந்தது. இந்தப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளமுடியாது என்று அரசின் பிரதமகொறடாதினேஷ் குணவர்தன சபாநாயகரிடம் கூறினார்.

அரசியல் யாப்பையே திருத்தக் கூடிய ஒரு பிரேரணையாக இது உள்ளது. இதை ஒரு போதும் விவாதத்துக்கு எடுக்க முடியாது. இதை நிராகரிக்குமாறு நான் சபாநாயகரிடம் பிரேரிக்கிறேன் என்று தினேஷ் குணவர்த்தன கூறினார்.

இந்தப் பிரேரணை ஜனாதிபதியின் இழப்புடன் சம்பந்தப்பட்டதல்ல. அமைச்சர்களின் பணிகளை ஒழுங்கு படுத்துவதற்காக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் அமைச்சுப் பதவிகளை வைத்திருக்கக்கூடாது என்று இந்தப் பிரேரணை கூறுகின்றது. இதை விவாதத்துக்கு எடுப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று தேசிய ஜனநாயக கூட்ட மைப்பின் எம்.பி. அநுரகுமார திஸாநாயக்க கூறினார்.

இருப்பினும், இது அரசியல் யாப்பில் உள்ள விடயம் என்பதால் இது யாப்புத் திருத்தமாகவே அமையும் என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும், இது வலுவிழந்த விடயம் என்று வாசுதேவ நாணயக்கார எம்.பியும் கூறினர்.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை தொடர்பாக யாப்பில் கூறப்பட்டுள்ளது. அதையே நாம் இங்கு விவாதித்திருக்கின்றோம். அப்படி என்றால் ஏன் இதை விவாதிக்க முடியாது என்று அநுர குமார திஸாநாயக்க கேள்வி எழுப்பினார்.

ஜனாதிபதி தொடர்பாகவும், பிரதமர் தொடர்பாகவும் பேசுவது எம்.பிக்களின் சிறப்புரிமை. அது மீறப்படக்கூடாது என்று ஐ. தே.க. எம்.பி. தயாசிறி ஜயசேகர கூறினார்.

பின்லாந்து மற்றும் தென்கொரியா போன்ற நாடுகளில் உள்ள ஜனாதிபதிகள் போல் எமது நாட்டு ஜனாதிபதியும் இருக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

இந்தக் காரணங்கள் எவற்றையும் அரச தரப்பு ஏற்க மறுத்தது. இதை விவாதத்துக்கு எடுக்கவே முடியாது என்று அரச தரப்பு விடாப்பிடியாக நின்றது.

இதனால், இதுதொடர்பாக ஆராய்ந்து ஒரு தீர்ப்பை வழங்கும்வரை இந்த விடயத்தை இன்று விவாதத்துக்கு எடுக்காது நிறுத்தி வைப்போம் என்று சபாநாயகர் கூறினார். இறுதியில் இந்தப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. (சி)

## சபாநாயகர் சம்மதித்தால் பொன்சேகாவுக்கு அனுமதி

கொழும்பு, ஜூன்12

ஜெனரல் சரத் பொன்சேகாவை பொதுநலவாய நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத் தொடரில் கலந்துகொள்ள அனுமதிக்கும்படி சபாநாயகர் சமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்தால், அனுமதி வழங்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த கோரிக்கை விடுக்கப்படாத பட்சத்தில் இராணுவ பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு குறித்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கான அனுமதி வழங்குவதா, இல் லையா என்பது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சே தீர்மானிக்கும் என்று அமைச்சின் பேச்சாளரான லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

கென்யாவின் தலைநகர் நைரோபியில் நாடாளுமன்ற சங்கங்க ளின் பொதுநலவாய மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெற உள்ளது. இதற்குச் செல்ல ஜனநாயகத் தேசியக் கூட்ட ணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகாவை அனுமதிக்க பொறுப்பான அதிகாரிகள் தீர்மானிக்கும் சாத்தியம் காணப்படுகின்றது என ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையிலேயே பாதுகாப்பு அமைச்சு கருத்து வெளியிட்டுள்ளது. ஜனநாயகத் தேசி யக் கூட்டணியின் தகவல்படி, அதன் தலைவர் என்ற அடிப்படையில் சரத் பொன்சேகாவின் பெயர் இந்தக் கூட்டத்துக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக ஏரல் குணசேகர செல்லவுள்ளார். அத்துடன், இதற்காக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாக இரண்டு பேர் பரிந்துரைக்கப்படவுள்ளனர்.

## பொன்சேகாவை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக வடக்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் இரகசியங்களை சரத் பொன்சேகா சர்வதேசத்தின் மத்தியில் முன்வைத்துள்ளார் என்றும், இதனால் அவருக்கு எதிராக தனியான சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்றும் மேர்வின் சில்வா கேட்டுக்கொண்டார்.

இராணுவத்தினருக்கு எதிராக ஜெனரல் சரத் பொன்சேகா வெளியிட்டுள்ள தகவல்கள், இலங்கையின் இராணுவத்துக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. கமல் குணரட்ண, சவேந்திர சில்வா, ஜகத் டயஸ் போன்ற வீரர்களைக் காட்டிக் கொடுப்பதற்காக பொன்சேகா வெளியிட்டுள்ள கருத்துகளைத் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்றும் மேர்வின் சில்வா கூறினார்.(ஒ-சி)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா வந்துள்ளார் மஹிந்த.

இலங்கை அரசுடன், டில்லி செய்து கொண்ட ஒப்பந்தங்கள். டில்லி ராஜ கட்டடத்தில் காந்தியார் கல்லறையில், 'ஏழு பாவங்கள்' என்று எழுதப்பட்டிருக்கின்றன. அத்தகைய பாவச் செயல்களை, இந்திய அரசு செய்துள்ளது.

ஈழத்தில் நடைபெற்ற யுத்தத்தில், ஜெனீவா நெறிகளை மண்ணில் புதைத்தது இலங்கை அரசு. இலங்கையில் மின்சார உற்பத்தி ஆயிரம் கோடி ரூபாவும், ரயில்வே உள்ளிட்ட மற்ற திட்டங்களுக்கு 4000 கோடி ரூபாவும் கொடுக்க இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது.

இலங்கைக்கு இப்பொழுது, மேலும் 5000 கோடி ரூபாவைக் கொடுப்பது ஈழத்தமிழர்களுக்கு மட்டும் அல்ல, தமிழகத்துக்கும், இந்தியாவுக்குமே எதிர்காலத்தில் பெருங்கேடாக முடியும். இலங்கைத் தீவில் தமிழ் ஈழம் அமைவதும் ஈழத்தமிழர்கள் வலுப்பெறுவதும் மட்டும்தான் தாய்த் தமிழகத்துக்கு மட்டும் அல்ல, இந்தியாவுக்கே பாதுகாப்பு அரணாக அமையும். ஆனால், சோனியா காந்தியின் கைப்பிடியில் ஆடுகின்ற இந்திய அரசு, இவற்றையெல்லாம் சிந்திக்காமல், தமிழ் இனத்தை அழிக்க - துரோகத்துக்கு மேல் துரோகத்தைத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## அமைச்சர்களான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொல்கிறார்.

நாடுமுழுவதும் உள்ள இவ்வாறான சட்டவிரோத ஆயுதங்கள் அனைத்தும் களையப்பட வேண்டும். கட்சி பேதங்களை மறந்து நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த விவகாரத்தில் செயலாற்ற வேண்டும். - என்றார். (சி)

## மாணவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சை பலனின்றி அங்கு அவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன் இச் சம்பவத்துடன் தொடர்புடைய மாணவனை பொலிஸார் விசாரணைக்காக தேடிவருகின்றனர். இச் சம்பவம் தண்ணீர் போத்தல் ஒன்றுக்காகவே இடம்பெற்றுள்ளது எனவும் தெரியவருகின்றது. (சி)

## சிறுபான்மையினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் உள்ள சிறுபான்மை கட்சிகளையும், சிறிய கட்சிகளையும் நேரடியாக டில்லிக்கு அழைத்து இந்திய அரச தரப்பு பேசவுள்ளது எனத் தகவல்கள் கிடைத்துள்ளன. நாங்களும் நம்பிகையுடன்தான் காத்திருக்கிறோம். ஆனால் இன்னமும் எந்தவொரு கட்சிக்கும் இந்தியாவின் அழைப்பு இதுதொடர்பாகக் கிடைக்கவில்லை என்று பெயர் குறிப்பிட விரும்பாத முஸ்லிம் அரசியல் கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார் என்று ஆங்கில இணையத்தளம் தெரிவித்திருக்கிறது.

இலங்கையின் சிறுபான்மையின மக்களின் கட்சிகளின் யோசனைகளை உள்வாங்கி அரசியல் தீர்வுப் பொதி ஒன்றை இந்தியா தயாரிக்க உத்தேசித்துள்ளதாகவும் -

இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்தின் மூலம். இச்சிறுபான்மை கட்சிகளுக்கான அழைப்புக்கள் நேரடியாக விடுக்கப்பட உள்ளன என்றும் -

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ டில்லி விஜயத்தை முடித்து விட்டு வந்துள்ள சூழ்நிலையில் இந்நடவடிக்கைகள் எதிர்வரும் நாள்களில் ஆரம்பமாகி விடும் என்றும் இந்தியத் தூதரக அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டியும் செய்திகள் கசிந்துள்ளன.

இலங்கையில் வடக்கு, கிழக்கு மலையகம் வாழ்தமிழர்கள் மற்றும் முஸ்லிம் கட்சிகளை அழைத்துப் பேசுவதற்கு முடிவாகியுள்ளதாகவும் தெரியவந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை -

இந்தியத் தரப்பினர் தீர்வுப் பொதியைத் த்யாரிப்பதற்கு உயர்மட்ட நிபுணர் குழுவொன்றை ஏற்கனவே அமைத்து விட்டனர் என்றும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யுத்தம் முடிந்து ஓராண்டு ஆகியும் கூட இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இலங்கை அரசு தொடர்ச்சியாக காலத்தை இழுத்தடித்து வருவதாலேயே இந்தியா, இலங்கையில் உள்ள சிறுபான்மைக் கட்சிகளை நேரில் அழைத்துப் பேசத் தீர்மானித்துள்ளது என இந்தியாவின் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)




CBM 33, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P. : 0777110756
CBF DBF
வங்கித்துறைக் கற்கை நெறிக்கான புதிய வகுப்புகள் ஆரம்பம்.
(அனைத்துப் பாடங்களும்)
12/06/2010 - சனி - பி.ப. 3 pm.
இயக்குநர்
N. Umakanth
(99401)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்12.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org